மலர் 50 - இதழ் 12
ஏப்ரல் 1998 - வெகுதான்ய - சித்திரை

அமுதசுரபி

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே - பாரதியார்

பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்

1948
1998

இந்த ஏப்ரல் சித்திரை இதழுடன் உங்கள் 'அமுதசுரபி'க்கு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன.

ஒருமுறை சென்றுபோன புனிதமான ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்து 'அமுதசுரபி'யை வளர்த்த பேரறிஞர்களை நினைத்து வணங்குகிறோம்.

நல்ல தமிழை விரும்பி ஏற்கு தமிழ்ப் பெருமக்களைப் போற்றிப் புகழ்கிறோம்.

பொன்விழா ஆண்டு சிறுகதைப் போட்டியில் முத இரண்டாவது, மூன்றாவது ப பெற்ற சிறுகதைகள் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

குறுநாவல் போட்டிக்கு எதிர்பார்த்ததைவிட வரவேற் புதினங்கள் பரிசீலனையில் உள்ளன. ஜூன், ஜூலை இதழில் முடிவை அறிவிக்க இயலும் என நம்புகிறோம்.

எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழ, நாம் அயர்விலாது பணியாற்ற, தமிழ்ப் பெருமக்கள் எப்போதும்போல் ஆதரவு தருவர் என நம்புகிறோம்.

லட்சத்தீவு (வண்ண மேலட்டை) போட்டோ : யோகா

லட்சத் தீவில்... ‘நான்’

லட்சத் தீவுக்குக் கொச்சியிலிருந்து பயணம்.

சுமார் 650 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய ‘திப்பு சுல்தான்’ என்கிற கப்பலில் பயணத்தைத் தொடங்கினேன். மற்றைய வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணக் கப்பல்களை விட இது சிறிய கப்பல் என்று கூறினார்கள். வாழ்க்கையில் முதல் கப்பல் பயணம் என்பதால் இந்தக் கப்பலே பிரமிப்பாகவும், பெரியதாகவும் எனக்குத் தோன்றியது.

முதல் நாள் மாலை 4.30 மணிக்குக் கொச்சியிலிருந்து கப்பல் புறப்படத் தயாரானது.

கப்பலின் மேலே இருந்து கொச்சி ஹார்பரைச் சுற்றிப் பார்ப்பது மிகவும் ரம்மியமாக இருந்தது. கப்பல் நகர்ந்து நகர்ந்து கடலில் செல்லும் காட்சி, கண்ணுக்கு எட்டிய தூரம் எந்தப் பக்கம் திரும்பினாலும் தண்ணீர் தண்ணீர் என்ற உணர்வு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்தது. கடல் அலை அதிகமாக இருந்ததால் கப்பல் மிகவும் ஆட்டம் கொடுக்க, அதனால் ஒரு மயக்க உணர்வு ஏற்படுவது போல் தோன்றியதால் அறைக்கு வந்து படுத்துக் கொண்டேன். சுமார் ஒரு மணி நேரம் நல்ல தூக்கம். பின்பு இரவு எட்டு மணிக்குச் சாப்பிடக் கூப்பிட்டார்கள். நல்ல சுவையான உணவு. சாப்பிட்டு முடிந்த சிறிது நேரத்திலேயே வாந்தி வரத் தொடங்கி விட்டது. இரண்டு மூன்று முறை அடிவயிற்றிலிருந்து, சாப்பிட்டதெல்லாம் வெளியே வந்து விட்டன. கண்ணை இறுக மூடிக் கொண்டவாறே படுக்கையில் படுத்துவிட்டேன். சமாளித்துக் கொண்டு இரவு கப்பற் பயணத்தைத் தொடர்ந்தேன்.

காலை, கப்பலில் கண்விழித்து அறைக்கு வெளியே வந்து பார்த்தபோது கப்பலுக்கு எதிரே ஒரு தீவு இருப்பது தெரிந்தது. லட்சத் தீவுக்குள் ஒன்றான ‘கல்பேனி’ என்கின்ற தீவு அது. தீவிலிருந்து சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. கப்பலிலிருந்து சிறு சிறு படகுகளில் டூரிஸ்ட்களை ஏற்றிக்கொண்டு தீவுக்கு அழைத்துச் சென்றார்கள். சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள தீவு. எங்கு பார்த்தாலும் தீவு முழுவதும் ஒரே தென்னை மரம், தென்னை மரம்தான். மருந்துக்குக் கூட ஒரு செடியோ வேறு மரமோ கிடையாது.

எங்களைக் குருப் குருப்பாக சிறிய டிராக்டர் வண்டிகளில் உட்கார வைத்து தீவின் மேற்குப் பகுதிக்குச் சென்று பயணிகள் தங்குமிடம் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள். அதற்கு எதிரே விஸ்தாரமாக உள்ள மணற் பகுதியில் வரும் பயணிகள் 140 பேரும் உட்கார நாற்காலி வசதிகள் செய்யப்பட்டிருந்தன. எதிரே சுமார் ஒரு மைல் தூரத்திற்கு நடந்தே செல்லக்கூடிய அளவுக்கு ஆழமில்லாத லகூன் அமைப்பு. கடலின் இயற்கை அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நீலக் கடலின் அழகை அதிகப்படுத்திக் காட்டும் வகையில் எதிர்ப்புறத்தில் இரண்டு சின்னஞ்சிறிய தீவுகள் அமைந்திருந்தன. அதிலும் தென்னை மரங்கள் வளர்ந்திருக்கும் காட்சி மிகவும் ரம்மியமானது.

வந்திருந்த பயணிகள் அனைவருமே இந்தக் கடலில் இறங்கிக் குளிக்கத் தொடங்கிவிட்டார்கள். டில்லியிலிருந்து வந்திருக்கும் 36 பள்ளி மாணவிகள் கடலில் மிகவும் ஆனந்தமாக ஆடிப்பாடி விளையாடிக் குளித்துச் சந்தோஷப்பட்டார்கள். இயற்கையின் அழகு என்றாலே அப்படியொரு வசீகரமான அழகு இந்தக் கடலின் அமைப்பு என்று கூறலாம். ஆண்டவன் படைப்பில் எவ்வளவோ அற்புதங்கள் உண்டு. இவ்வளவு அழகுடைய கடலமைப்பும் ஆண்டவன் கொடுத்த வரப்பிரசாதமே!

தென்னை பயிரிடுவது, மீன் பிடிப்பது ஆகிய இரண்டு தொழில்கள் மட்டுமே இங்கே மேற்கொள்ளப்படுகின்றன. தேங்காய், மீனைத் தவிர்த்து உப்பு முதற்கொண்டு எல்லாப் பொருள்களுமே கொச்சி, கோழிக்கோடு போன்ற இடங்களிலிருந்துதான் இங்கே வரவேண்டும். 90 சதவிகிதத்தினர் முஸ்லிம்கள். வெகு சிலரே ஹிந்துக்கள். ஒரு விநாயகர் கோயில் மட்டும் இங்கே உள்ளது.

அதிகமாகச் சுற்றுலாப் பயணிகளை இந்தத் தீவுக்கு வரவழைத்தால், நாளடைவில் இந்தத் தீவின் இயற்கை அமைப்பும், தீவைச் சுற்றிய லகூனும் பாழ்பட்டு விடும் என்பதால், மிகக் குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும் இப்போது போக அனுமதி வழங்கப்படுகிறது.

கொலை, கொள்ளை, திருட்டு என்கிற பயமே இங்கு இல்லை. போலீசுக்கு இங்கே அதிக வேலையே இல்லை.

இனிமையாக மூன்று நாள்கள் லட்சத் தீவுப் பயணத்தை முடித்துக் கொண்டு இரவு முழுவதும் பயணம் செய்து, மறுநாள் காலை கொச்சித் துறைமுகம் வந்தடைந்தேன்.

ஏதோ ஒரு வெளிநாடு சென்றுவந்த உணர்வுதான். மறக்க முடியாத அனுபவம்!

போட்டோ கலைஞர் யோகா எழுதிய
‘பூலோகம் ஆனந்தத்தின் எல்லை’ நூலிலிருந்து.
வெளியீடு: காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட்.,
2, ஜயசங்கர் தெரு; மேற்கு மாம்பலம், சென்னை – 33.
மேலட்டை: லட்சத்தீவு செல்லும் கப்பலை அடைய
முதலில் படகில் பயணம்!
போட்டோ: யோகா.

தானத்தில் சிறந்தது அன்னதானம்

ஜீகே. ஸீதாராம ஜோஸ்யர்



ருக் வேத மூர்த்தி



யஜுர் வேத மூர்த்தி

வேதத்தை காப்பது நம் கடமை உலகம் முழுவதற்கும் மூலாதாரமாக இருப்பது வேதமே.

தற்கால இயந்திர வாழ்க்கையில் பலராலும், ஆசையும், நம்பிக்கையும் இருந்தும் கூட, நல்ல தர்மத்தையும், ச்ராத்தங்கள் முதலான கடமைகளையும் செய்ய முடிவதில்லை. ச்ராத்தத்தின் முக்கியமானது அன்னதானம். தற்காலத்தில் எத்தனையோ விதமான அலுவலகப் (Office) ப்ரச்சனை குடும்பப்ரச்சனை, இடப்ரச்சனை வேத மோதிய அந்தணர்கள் கிடைக்காமை, மற்றும் பலவிதமான ப்ரச்சனைகளினால் பலர் ச்ராத்தங்களில் அன்னதானத்தை விட்டு விடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு தன் மாதா பிதாக்களை நினைத்துக்கொண்டு அன்னதானம் செய்ய வேண்டும் என்ற ஆசை மட்டும் நிறையவே இருக்கின்றது.

எல்லோரும் குழந்தைகள் மற்றும் தங்களுடைய திருமணம் மற்றும் பிறந்தநாட்களை பலருக்கு பார்ட்டி கொடுத்து கொண்டாடுகிறார்கள். இவற்றில் சில வேத வித்துக்களுக்கும் அன்னதானம் செய்தால் எவ்வளவு புண்யம். என்னுடைய அபிப்ராயம் உங்களில் பலருக்கு



ஸாம வேத மூர்த்தி



அதர்வண வேத மூர்த்தி

இப்படி புண்ய கார்யத்தில், நம்பிக்கையும், ஆசையும், உண்டு, ஸரியான ஸந்தர்பம் தான் ஏற்படவில்லை.

வேதத்தை நல்ல விதமாக கற்பித்து நமக்குப்பின் வரும் ஸந்ததிகளுக்கு பாதுகாத்து கொடுப்பதற்காக நாங்கள் டில்லியில் ஒரு வேதபாடசாலை நடத்துகிறோம். அதில் படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் அன்னமானது வேதத்தைச் சொல்லிச் சொல்லியே ஜீரணம் ஆகின்றது.

உங்கள் தாயாரையோ / தகப்பனரையோ நினைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு பத்து பைசாவீதம் மாதம் மூன்று ரூபாய் அதாவது வருடத்திற்கு 36 ரூபாய்கள். அதை ஒரு நாளைக்கு முழுவதும் ஒரு மாணவருக்கான சாப்பாட்டுச் செலவிற்காக கீழ்கண்ட முகவரிக்கு **YOUR FAMILY FRIEND** என்ற பெயருக்கு DD/MO/ மூலமாக அனுப்பிவைத்து அத்துடன் உங்கள் மாதா, பிதாவினுடைய ச்ராத்த தேதி / திதி, பெயர் முதலிய வற்றையும் எழுதி அனுப்பவும். இது தவிர பிறந்த நாள், திருமண நாள் போன்ற விசேஷ தினங்களிலும் இந்த புண்ய கார்யத்தைச் செய்யலாம். உங்கள் பித்ருக்களின் த்ருப்திக்காக இங்கு வேதமோதும் மாணவர்களுக்கு அன்னதானம் செய்து உங்களுக்கு ப்ரஸாதமாக மந்த்ராக்ஷதையும் அனுப்பிவைக்கிறோம்.

வரும் சித்திரை முதல் பங்குனி வரை ஓராண்டிற்கான அன்னதானங்களை இப்போது பதிவு செய்து கொள்கிறோம். டில்லி வேதபாடசாலை மாணவர்களுக்காக இப்போது அன்னதானம் செய்யும் அன்பர்களுக்கு ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் டில்லி வந்த போது வெளியிட்ட இது வரை எங்கும் வெளிவராத அற்புதமான ருக், யஜுர், ஸாம, அதர்வண, வேத மூர்த்திகளின் (8½" x 5½" அளவில்) பூஜைக்குறிய பெரிய வண்ணப் படங்கள் ப்ரஸாதமாக அனுப்பி வைக்கிறோம். வேதாத்யயனம் செய்யா விட்டாலும் இந்தப் படங்களையாவது பூஜிக்கலாமே. இதனால் பித்ரு ப்ரஸாதத்துடன் வேதமாதாவின் அனுக்ரஹத்தையும் அடையலாமே. வெளியூரி விருந்து செக் மூலம் பணம் அனுப்புபவர்கள் தயவு செய்து Bank Charges பத்துரூபாய் சேர்த்து அனுப்பவும்.

YOUR FAMILY FRIEND,
142-Zamrudpur, (Opp. L.S.R. College),
New Delhi-110 048. Ph.:-(011) 6219385.

மணிவிழா

'அமுதசுரபி' யுடனும் ற்றும் பல பதிப்பகங்களுடனும் ண்டநாள் தொடர்பு கொண்டுள்ள முத்தாளர் திரு. கு. சண்முக ந்தரம் - சங்கரி சண்முகம் தம்பதி ின் மணிவிழா, கலைமாமணி க்கிரமன் அவர்களின் ன்னிலையில் அண்மையில் றப்பாக நடை பெற்றது. றவினர்களும், நண்பர்களும், த்திரிகையாளர்களும், பதிப்பாளர் ளும் வந்திருந்து வாழ்த்தினர். மலும் பல்லாண்டு வாழ்கவென அமுதசுரபி' யும் வாழ்த்தி கிழ்கிறது. •



நல்ல தமிழ்

வித்துவான்
முத்து கண்ணப்பர்

சில பிழைகளும், திருத்தங்களும், பொருள்களும்

1. மனமார; மனமாற.

"மனமார வேண்டுகிறேன், மனமாற வேண்டுகிறேன்'' இவ்விரண்டு சொற்றொடர்களுக்கும் வேறுபாடுண்டு.

'மனமார வேண்டுகிறேன்'' - என்றால், மனம் நிறைந்து அதாவது மன நிறைவோடு வேண்டுகிறேன் என்பது பொருள்

'மனமாற வேண்டுகிறேன்' என்றால், நொந்திருக்கும் மனம், அல்லது புண்பட்டுள்ள மனம் ஆறுதல் அடைய வேண்டுகிறேன் என்று பொருள்படும். இதை இன்னொரு விதமாகவும் கூறலாம் 'மனம் + மாற' எனப் பிரித்தால் 'மனம்' என்னும் நிலைமொழியில் உள்ள (முதல் சொல்) இறுதி எழுத்தாகிய 'ம்' மறைந்து 'மனமாற' என்றாகி 'மனம் மாறுதல் அடைய' வேண்டுகிறேன் என்று கூடப் பொருள் கொள்ளக்கூடும்.

2. உதவாக்கரை

இப்படிக் கூறினால் பயனற்றவன், உதவாதவன் என்னும் பொருளைத்தானே உணர்த்துகிறது? இத் தொடரைப் பிரித்தால் உதவா(த)க்கரை என்றாகும். அப்படியானால், பயன்படாதகரை (கரை - நீர் நிலைகளின் ஓரப் பகுதி) என்றுதானே ஆகும்? நாம் கருதும் பொருள் (பயனற்றவன் என்பது) புலனாகவில்லையே! அதனால் இத்தொடர் 'உதவாக்கரம்' என்று இருத்தல் கூடும் என்றுதான் தோன்றுகிறது. 'பயனற்றவன்' என்னும் பொருளும் தெளிவாய் உள்ளது. 'உதவும்கரம்' என்னும் தொடருக்கு எதிர்மறையானது 'உதவாக்கரம்'. எனவே, 'உதவாக்கரம்' என்பதுதான் பொருத்தமான, சரியான பொருள் பொதிந்தது என்று கொள்வதே ஏற்றது என்று கொள்வதும் தவறில்லை.

3. அடாவடி

என்றால் கொடுஞ்செயல் அல்லது தகாத செயல், 'அடா' 'அடு+ஆ' = 'ஆ' எதிர் மறை. அடாத என்றால் 'தகாத' 'என்று பொருள் படும்' 'அடி' என்றால் தண்டித்தல், தாக்குதல் என்பது பொருள் அடா + அடி = அடாவடி எனத்திரிந்து, தகாத முறையில் காரணமில்லாமல் தண்டித்தல், கொடுஞ் செயல் செய்தல், முறைகேடாக நடத்தல் அல்லது பேசுதல் எனப் பொருள்படும்.

4. கம்ப சூத்திரம்

இதென்ன பெரிய கம்ப சூத்திரமா? என்று கூறுவதுண்டு - கம்பர் இராமாயணத்தைத் தமிழில் அற்புதமாகப் பாடிய அருங் கவிஞர். அவர் பாடல்களில் சில மறைபொருள், சூட்சுமமான பொருள் - வெளியே தெரியும் பொருளோடு உள்ளூற ஆழ்ந்து சிந்தித்தற்குரிய வேறு பொருளும் இருக்கும். எடுத்துக்காட்டாகத் தம்மிடம் வந்த இராமனை நோக்கிக் கைகேயி 'அப்பா இந் நாட்டினை என் மகன் பரதனே ஆள வேண்டும், நீ கானகம் சென்று பதினான்கு ஆண்டுகள் கழித்துத் திரும்ப வேண்டும் என்று ஆணை
யிட்டிருக்கிறார்.' என்றாள், உடனே
இராமன் கைகேயியை நோக்
'அம்மா! மன்னவன் பணியன்றாகி
நும்பணி மறுப்பனோ?' என்
கூறியதாகப் பாடுகிறார் கவி
சக்கரவர்த்தி கம்பர். இதில் வெளியே
தெரியும் பொருள் 'அம்மா! மன்னவ
என்ன? நீங்கள் அப்படி
சொன்னாலும் கூடப் போதுமே
அதனை மறுக்க மாட்டேனே' என்பது
ஆனால் மறைந்துள்ள உட் பொரு
'மன்னவன் பணி அன்று, ஆயி
நும்பணி எனக் கொண்டு - மன்னவ
அப்படிச் சொன்னதன்று. ஆனா
நும்பணி நீயே சொல்லும் சொல்
ஆணை இருந்தாலும் மறுக்
மாட்டேன்' என்பது. இப்படிப் ப
நுட்பமான பொருள்கள் கம்ப
பாடல்களில் உண்டு. அந்த
கருத்தோடுதான் இதென்ன
கம்பசூத்திரமா? அதாவது எளிதி
விளங்கிக் கொள்ள முடியாத, செய்
முடியாத அவ்வளவு நுட்பமானதா
என்று கூறப்படுகிறது.

5. தாரகமந்திரம்


இதுவும் மேலே உள்ளது போன்
நுட்பப் பொருள் பொதிந்த ஒ
சொல். சம்ஸ்கிருதச் சொ
தாரகமந்திரம் என்றால் சமய
சார்பான - இறைவழிபாடு பற்றி
சொல். ஓங்காரம். பிரணவ
என்றெல்லாம் பொருள்படும். 'இ
என்ன தாரக மந்திரமா?' என்
கேட்பது இன்று வழக்கில் வந்துள்ள
தாரகம் என்றால் ஆதாரம் என்று
பொருள்படும். மந்திரம் என்றா
கற்றுத்துறை போகிய சான்றோர்களி
வாக்கு - நிறைவான உறுதியா
சொல். 'நிறை மொழி மாந்த
ஆணையில் கிளந்த ம
மொழிதானே மந்திரமாகும்' என்ப
மந்திரம் என்பதற்குரிய விளக்க
பாடலாகும். எனவே, இதென்ன தா
மந்திரமா என்று வழக்காற்றில் உலவ



தெய்விகச் சித்திரை

நா.சீ. வரதராஜன்

சித்திரை மாதம் பிறக்கிற வேளை
சிந்தனைப் பறவை பறக்கிறது - அது
சேரும் இடம் திரு நாட் களுடன்
தெய்வத் தலமாய் இருக்கிறது !
எத்திசை களிலும் மக்களின் கூட்டம்
எல்லார் நினைப்பும் அன்னையிடம் - நமை
ஈன்றவள் பூணும் திருமணக் கோலம் !
இங்கே கைகள் சென்னியிடம் !



வீதியில் மீனாள் சுந்தர ருடனே
வெற்றிச் சிரிப்புட னே வரவும் - ஒளி
மேவிய தெய்விகக் காட்சியில் மக்கள்
மெய்சிலிர்த் தேபுள கம் பெறவும்
ஆதியஞ் சோதியும் சத்தம ணங் கொள்
அன்பரின் நெஞ்சுள் சுடர்விடுமே - அருள்
அழகின் வெளிச்சம் அவனியில் எங்கும்
அவளுரு வாய் நம் இடர் கெடுமே !

வானிடை முழுவெண் திங்கள் வரும் நாள்
வைகையில் கூட்டம் அலைமோதும் - எதிர்
வருவோர் காலை - குதிரையில் அழகர்
வந்தனை அங்கோர் கலையாகும் !
ஊனிடை நெஞ்சில் உயிரினில் எல்லாம்
உரையில் அடங்கா ஒரு வேகம் - களி
ஊற்றென நம்முன் உற்பவித் திடவும்
உணர்வுக ளெல்லாம் கவியாகும் !

சொற்றொடர் இது. ஆதாரமுள்ள நிறைவான உறுதி வாக்கு எனப் பொருள்படும்.

x x x x x x x x x x

இவ்விதழிலிருந்து, குழந்தைகளுக்குப் பெற்றோர் இடும் சம்ஸ்கிருதம் முதலிய தமிழ் அல்லாத பிறமொழிப் பெயர்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் சிலவற்றை அறிந்து கொள்வோம்.

பெற்றோர் தம் மக்களுக்குப் பெரும்பாலும் சம்ஸ்கிருதப் பெயர்களையே சூட்டுகிறார்கள். அதைக் குறை கூறுவது நம் கருத்தன்று. ஆனால், அந்தச் சொற்களின் தமிழ்ப் பொருள் - பெயர் என்ன என்றாவது பெற்றோர்களோ, அந்தக் குழந்தைகளோ அறிந்து கொள்வது அவசியமல்லவா?

இப்போது அத்தகைய பெயர்களில் சில பெயர்களின் தமிழ்ப் பொருளை அறிந்து கொள்வோம்.

ஹேமா - பொன், தங்கம் (தங்கம் போன்றவள்).

ஹேம லதா - லதா என்றால் கொடி (பூங்கொடி) (பொற் கொடி போன்றவள்).

ஹேம மாலினி - மாலினி என்றால் பார்வதி தேவியைக் குறிக்கும். அப்படியானால் பொன் மயமான பார்வதி போன்றவள்.

மாலதி என்றால் சந்திரிகை அதாவது நிலவொளி போன்றவள்.
பிரியா - பிரியமானவள்: அன்பானவள்


பிரியதரிசினி - அன்புப் பார்வையள்.

ஷைலஜா - தாமரை மலர் (தாமரை மலர் போன்றவள்).

புஷ்ப லதா - பூங்கொடி, மலர்க்கொடி போன்றவள். ●

ஒரு கிராமத்தானின் டைரிக் குறிப்புகள்


சி.லட்சுமி



சின்னசாமிக்குத் தூக்கம் போயிடுச்சி. பாயில பொறண்டு படுத்தார். மணி என்ன இருக்கும்னு யூகிக்க முடியலை. பொழுது விடிஞ்ச மாதிரி தெரிய வில்லை. எழுந்து உட்கார்ந்தார். இராத்திரி புகைச்சிட்டு மீதி வச்சிருந்த அரை பீடிய எடுத்து மறுபடியும் பத்த வச்சுக்கிட்டார். லேசா குளுருற மாதிரி இருந்திச்சு. தலை மாட்ல கிடந்த மப்ளர தலைக்குச் சுத்திக் கிட்டார்.

எழுந்தார். அவுந்த வேட்டியைச் சரி பண்ணினாரு. கதவுக்கு முட்டுக் கொடுத்திருந்த கருங்கல்லை நவுத்தி, வெளியே வந்தாரு. ஊர் அமைதியா தூங்கிக்கிட்டிருந்துச்சி. அந்த அமைதியைக் குலைக்கிற மாதிரி பூச்சிங்க 'சுயாமுயான்னு' கத்திக்கிட்டு இருந்துச்சுங்க.

பொன் விழா
ஆண்டு
சிறுகதைப்
போட்டியில்
முதற்பரிசு
.5000/- பெறும் சிறுகதை



இந்தப் பூச்சிங்களுக்கு ன்ன ஆச்சு? ஏன் ஓயாம த்திக்கிட்டே இருக்குதுங்க..? அதுங்களுக்குத் தூக்கமே ராதா? அந்தப் பூச்சிங்க ாதிரியே தானும் ஆயிட்டதா வரு நினைச்சுக்கிட்டாரு. சமீப ாலமா சின்னசாமிக்குத் ாக்கமே வர்றதில்லை. ாங்கினாலும் பாதியில விழிப்பு ந்துடும். உடனே மவன் ாராயணன் நினைப்பு வந்து ாடாப் படுத்தும். பயல் ாத்திரி சாப்ட்டிருப்பானா..? ழுங்காத் தூங்கறானா... ல்லே தன்னை மாதிரியே காட்டக் கொட்ட விழிச்சுக் ட்டிருக்கானோ?

தனிமையோட ாரமும், தவிப்பும் அவரோட உள்ளூர் கிராமத்துப் பள்ளிக்கூடத்துல அஞ்சாவது தூக்கத்த மொத்தமா அள்ளிக்கிட்டுப் போயி மூணு மாசமாச்சு.

சின்னசாமியோட பெண்டாட்டி செத்து, பத்து வருஷம் ஆவுது. அவ சாகும்போது நாராயணன் படிச்சுக் கிட்டிருந்தான். நாராயணனுக்கு அப்படியே அவனோட அம்மா சாயல். அதனாலயோ என்னவோ சின்னசாமிக்கு மவன்னா உசிரு. தாயத்த புள்ளைங்கிற நெனப்பு அவனுக்கு வராத அளவுக்கு வளர்த்தார்.

அவருக்கு வயது அப்போ நாப்பத்து ரெண்டு. ஊர்ல எல்லாரும் அவரை இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொன்னாங்க. ஆனா, அவர் பண்ணிக்கலை. ஒரே லட்சியம், பையனை நல்லாப்படிக்க வைக்கணும். குலத்தொழிலான சவரத் தொழிலை விட்டுட்டு அவன் கவர்ன்மெண்ட்டு வேலைக்குப் போவணும், இன்னைக்குத் தன்னைக் கேவலமா நடத்தற ஊரு மதிக்கணும்கிறதுதான்.

அவருக்கு இப்படி ஒரு ஆவேசம் வந்ததுக்குக் காரணம் இருக்கு. தன் பொழப்பு நாய்ப் பொழப்புங்கிற எண்ணம் அவருக்கு ஸ்ட்ராங்கா வந்தாச்சு. நாள் முழுக்க வீடு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் சிவசூரியன் பெருமுயற்சியால் கிரிவலம் வருபவர்கள் வசதிக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள்:

மலை சுற்றும் சாலையை அகலப்படுத்தும் பொருட்டு ரூ.35 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் சாலை அகலப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு கிலோ மீட்டர் தொலைவிலும் மலை சுற்றும் பாதையில், பக்தர்கள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டு கை பம்புகள் போடப்பட்டன.

மலை சுற்றும் பாதையில் மாமிசக் கடைகள் பௌர்ணமி நாள்களில் திறக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பௌர்ணமி நாள்களில் மலைசுற்றும் பாதையில் பக்தர்கள் வசதிக்காக சத்தங்களை குறைக்க கேசட் கடைகள் வைக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மலை சுற்றும் பாதையில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டது.

பக்தர்கள் வசதிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் காவலர்கள் பௌர்ணமி நாள்களில் ரோந்து வருவது குறித்து ஏற்பாடு செய்யப்பட்டது.

(செய்தி 61ஆம் பக்கத்தில்)

டாத் தேடிப் போய் வழிச்சி
டுத்தாலும் பத்து ரூவா
தேர்றது கஷ்டம். வேல
செய்ஞ்சா அதுக்குக் கூலி
வாங்கறதுக்காக அவனவன்
ட்டுக்கும் போய் தலைய
சொறிஞ்சிட்டு நிக்கணும்.
ச்சையா குடுக்கறானுங்க...
த்தேறி. பொழப்பாடா
து? நாய்ப் பொழப்பு.

ஊர்ல சிலபேரு
ன்னசாமிகிட்டே சொல்லிப்
த்தாங்க... "என்யா... கைல
ரு தொழில் இருக்கறச்சே
த விட்டுட்டு அவனப்
டிக்க வச்சு எதிர்காலத்துல
வலை தேடி அலைய
ட்டுடாதய்யா..." ம்ஹூம்...
ன்னசாமி கேக்கறதா
ல்லை.

சவரத் தொழில விட்டுத்
ன் மவன் வெளியவரணும்னு
னைச்சார். கால் ரூவா
பளம் வாங்கினாலும் அது
வர்மெண்ட் சம்பளமா
ருக்கணும். அந்த வெறி
டாடேயே மவனைப் படிக்க
ச்சுக்கிட்டிருக்காரு.
ராமத்துப் பள்ளிக்கூடத்துல
தாங்கிளாஸ் வரைக்கும்
ருந்துச்சு. பிறகு அது
டிஞ்சவுடனே பக்கத்து
வுனில் பிளஸ் டூ படிப்பு.
னமும் டவுன் பஸ்ஸில்
பாயிட்டு வந்துடுவான்.
துக்குப் பிறகு திருச்சியிலே
லேஜ் படிப்பு திருச்சிக்குப்



● "ஜூட்-சூட்" என்பது இந்த உடையின் பெயர். 1942 - 43ஆம் ஆண்டு வாக்கில் அமெரிக்க நாட்டில் பிரபலமடைந்து மக்கள் அணிந்தனர். நீளமான ஜாக்கெட்; பேகி (Baggie) பேண்ட்; நீண்ட வட்டத் தொப்பி. இதை அணிந்து கொண்ட ஆண்கள் நிறையப் பேருக்கு வியர்வை அதிகமாகப் பெருகிச் சரும நோய்கள் தோன்றத் தொடங்கி விட்டதாம். அதனால் கலிஃபோர்னியா, நியூயார்க் மாநிலப் பகுதிகளில் பலத்த எதிர்ப்பு கிளம்ப, இந்த உடை அணியத் தடை விதிக்கப்பட்டது. தடைச் சட்டமும் அமல் படுத்தப்பட்டது. ●

படிக்கப் போன பிறகு, பதினைஞ்சு நாளைக்கு ஒரு தடவைதான் நாராயணனால வீட்டுக்கு வர முடிஞ்சுது. அவன் காலேஜ்ல சேர்ற முன்னாடிவரை ஒருநாள் கூட பையனைப் பிரிஞ்சு அவர் தனியா இருந்ததில்லை.

பயல் பொறுப்பானவன். அநாவசியமா ஒரு பைசா செலவு பண்ணமாட்டான். காலேஜ்ல சேந்து ரெண்டு மாசம் ஆவுது. சேக்கிறப்போ அறுநூறு ரூபா செலவு செய்ஞ்சதோட சரி. அதுக்கப்புறம் அவர்ட்டேந்து நாராயணன் ஒரு பைசா கூட கேக்கலை. போனவாரம் அவன் கிராமத்துக்கு வந்தப்போ அவன்கிட்டே இது பத்தி சின்னசாமி கேட்டாரு.

"எனக்கு நெறைய ஃபிரண்ட்ஸ்ங்க கெடைச்சுருக்காங்க. அவங்கதான் என்னோட செலவுக்குப் பணம் கொடுக்கறாங்க"ன்னான். அதைக் கேட்டு மவனை மெச்சிக்கிட்டாரு, சின்னசாமி பொறுப்புள்ள புள்ளைன்னு!

நெனைக்கறப்போ பெருமையா இருந்துச்சு. குளிரையும் மீறி மனசுக்குள் கதகதப்பு. இந்த சவரப் பெட்டி தூக்கற கேவலம் என்னோட ஒழியட்டும். எம்புள்ளை படிச்சுட்டு வந்து ரொம்பப் பெரிய ஆளா வரப் போறாங்கடேய்'னு ஊரான் களைப் பார்த்து உரக்கக் கத்தணும் போல இருந்துச்சி.

காத்து சிலுசிலுன்னு வீசிச்சி.


வீரனார் கோயில ஒட்டிப்போன ஒத்தையடிப் பாதையில நடந்தாரு. கருவேல மரங்கள்ல மின்னட்டாம் பூச்சிங்க. மினுக்கட்டாம் சட்டை போட்டுக்கிட்டு குசு, குசுன்னு ரகசியம் என்னவோ பேசிக்கிட்டிருந்தாங்க. எங்கேயோ ஒரு சேவல் கூவுச்சி.

தூரத்துல யாரோ மாட்டை ஓட்டிக்கிட்டுப் போறதுக்கு அடையாளமா ஜல்ஜல் சத்தம். கத்தாழைச் செடி மறைவா பாத்து ஒதுங்கினாரு. குட்டைக்குப் போனாரு. சீக்கிரமாக் கெளம்பணும். மணியக்காரரு வெள்ளனவே வரச் சொல்லியிருந்தாரு. கொஞ்சம் லேட்டாப் போனாலும் மனுஷன் பிலு, பிலுன்னு புடிச்சுக்குவாரு. வீட்டுக்கு எட்டி நடை போட்டாரு.

பொலபொலன்னு விடிஞ்சுடுத்து. மக்கள்லாம் படுக்கை, பாய்களச் சுருட்டி எரவாண த்துல செருகிட்டு இருந்தாங்க.

வீட்டுக்குப் போய் தன் சவரப் பெட்டியை எடுத்துக் கிட்டாரு. மணியக்காரரு வீடு நாலு தெரு தாண்டி இருக்குது. மூணுநாளா மணியக்காரரு ஊர்ல இல்லை. நேத்து ராத்திரிதான் திரும்பி வந்தாரு. ஒடனே ஆள்விட்டு அனுப்பிட்டாரு.

"வணக்கம் அய்யா"ன்னு வாசலுக்கு முன்னால உக்காந்திருந்த மணியக் காரருக்குப் பெரிசா கும்பிடு போட்டாரு சின்னசாமி. இருக்கட்டும் என்பது போல கைய அசைச்சார் மணியக் காரரு.



☸ அக்குவா டெக்ட், பெல் மாண்ட் பார்க், சரடோகா ஆகிய இம்மூன்றும் நியூயார்க் மாநிலத்தி லுள்ள குதிரைப் பந்தயம் நடைபெறும் ஊர்கள். இங்கே நடக்கும் பந்தயங்களில் ஜெயித் தவர்களுக்கு எவ்வளவு அதிகமான தொகையானாலும் பணம் ரொக்கமாகவே கொடுத்து விடுகிறார்கள். 1979ஆம் ஆண்டு ஒரு முறை 8 லட்சம் டாலர்கள் வெற்றி பெற்ற அத்தனை பேருக்கும் ரொக்கமாகக் கொடுக்க பணம் பற்றாக்குறையாகி விட்டது. அதற்குக் (செக்) காசோலையாகக் கொடுத்தனர். உலகிலேயே குதிரைப் பந்தய வரலாற்றில் இதுவே முதன் முறையாகக் காசோலை (செக்) கொடுக்கப் பட்டதாகும்.

- ஏழ்வரைக்கடியான்

அந்த வீட்டின் தாழ்வாரத்துல பலகை போட்டிருந்தது. மணியக் காரரு அதுல ஒக்காந்து கிட்டாரு. எதிர்லே தன் குதிகால்ல வாகு பார்த்து உக்காந்துகிட்டாரு சின்னசாமி. கிணத்துலேர்ந்து தண்ணியெடுத்து மணியக் காரருக்கு மூஞ்சியிலே தடவ ஆரம்பிச்சாரு.

" சின்னசாமி உன் மகன் இப்போ என்னய்யா பண்ணிக்கிட்டிருக்கான்?"னு கேட்டாரு மணியக்காரரு.

"தெரியாத மாதிரி கேக்றீங்க.. நீங்கதானே அவனைக் காலேஜ்ல சேக்கற துக்குப் பணம் கொடுத்து உதவி பண்ணுனீங்க"ன்னாரு சின்னசாமி.

உடனே மணியக்காரரு பிசாசு புடிச்ச மாதிரி சிரிக்க ஆரம்பிச்சாரு. தெருவோட போய்க்கிட்டிருந்த முத்து வைக் கூப்பிட்டு, "இந்தக் கூத்தைக் கேட்டியாடா... சின்னசாமி மவன் படிக் கிறானாம்.." மறுபடியும் கை தட்டிக் கெக்கலி கொட்டிச் சிரிச்சாரு. சின்னசாமிக்கு ஒண்ணும் புரியலை.

"அய்யா.. என்ன விஷயம்னு சொல்லிட்டுச் சிரிங்கையா.."ன்னு கெஞ் சினாரு.

''உன் மகன் படிக்கலைய்யா.. திருச்சியில ஒரு பார்பர் ஷாப்ல கூலிக்கு வேல செய்யறான்!'' சொல்லிட்டு மறுபடியும் சிரிச்சாரு மணியக்காரரு.

''ஐயா... என்னய்யா சொல்றீங்க?'' பதறினாரு சின்னசாமி.

''உண்மைதான்யா சொல்றேன்.. நேத்தைக்கு திருச்சி பஸ் ஸ்டாண்ட்ல தலை சீவிக்கிறதுக்காக ஒரு சலூனுக்குப் போயிருந்தேன்... அங்கேதான் உன் மவனைப் பார்த்தேன்..''

சின்னசாமியால மணியக்காரர் சொன்னதை நம்ப முடியலை. "அய்யா நீங்க தமாசு பண்றீங்க..''ன்னு சொன்னார். இதைச் சொல்றப்போ அவரோட கண்கள்லேர்ந்து நீர் அருவியா வடிஞ்சுது.

"ஆமாய்யா.. நீ எனக்கு மாமன் பாரு. உன்கிட்டே தமாசு பண்றேன்..'' கடுப்படிச்சாரு மணியக்காரரு. சின்னசாமி அதுக்கப்புறம் எதுவும் பேசலை. அமைதியா வேலையை முடிச்சுட்டுக் கிளம்பினாரு.

வெளியே வர்றப்போ குலதெய்வமான பச்சாயியை வேண்டிக்கிட்டாரு. 'அம்மா.. நான் கேள்விப்பட்டது பொய்யா இருக்கணும். அந்த மணியக்காரன் வேற யாரை யாவது பார்த்துட்டு வந்திருக்கணும். அது நிச்சயம் எம்புள்ளையா இருக்காது. அவன் சவர வேலை செய்யப் பொறக்கலை. கவர்ன்மெண்ட் சம்பளம் வாங்கப் பொறந்தவன்.'' இப்படியெல்லாம் மனசுக்குள்ளே வேண்டிக்கிட்டாலும், மனசுக்குள்ளே சின்னதா குழப்பம்.

அடுத்த வாரம் மவன் வர்ற வரைக்கும் அவருக்குப் காத்திருக்கப் பொறுமை இல்லை. உண்மை என்னன்னு உடனே போய்த் தெரிஞ்சுக்கலைன்னா மண்டையே வெடிச்சிடும் போல இருந்தது. மரக்கால்ல வைச்சிருந்த அம்பது ரூபா பணத்தை எடுத்துக்கிட்டு அன்னைக்கு மதியமே திருச்சிக்குப் பஸ் ஏறிட்டாரு.

பையனைக் காலேஜ்ல சேக்கறதுக்காகத்தான் முதல் முறையா திருச்சிக்கு வந்தாரு. இப்ப ரெண்டாவது தடவையா வர்றாரு.

திருச்சி பஸ் ஸ்டாண்ட்ல அவர் இறங்கறப்போ பொழுது இருட்டிடுச்சி. மழ பெய்யப் போறதுக்கு அடையாளமா வானத்துல அங்கங்கும் மேகமூட்டமா இருந்துச்சி. பஸ்டாண்ட்ல இருக்கிற சலூன்கள்ல முதல்ல விசாரிக்கலாம்னு ஓர் எண்ணம் அவருக்குத் தோணிச்சு. இருந்தாலும் மவன்மேல் அவருக்கிருந்த நம்பிக்கை அவரை அப்படிச் செய்ய விடலே... காலேஜ் விட்டிருக்கும்... மவன் ஹாஸ்டல்ல இருப்பான். கையோட போய்ப் புடிச்சிடணும்னு நெனச்சார். பஸ்புடிச்சி, ஒருவழியா ஹாஸ்டல்கிட்டே அவர் இறங்கினப்போ மழை தூற ஆரம்பிச்சுட்டுது.

தூறலுக்கு நடுவுல துண்டைத் தலைக்குப் போட்டுக்கிட்டு நடக்க ஆரம்பிச்சாரு. அந்தத் தெருவுல கடைசியா இருந்தது ஹாஸ்டல். ஹாஸ்டலுக்கு முன்னால குண்டு பல்பு ஒண்ணு மங்கலா எரிஞ்சுக்கிட்டிருந்தது. நாலஞ்சு பசங்க சேர்ந்து ஹாஸ்டலுக்கு முன்னால உக்காந்து என்னவோ சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தாங்க.

அவங்களை நெருங்கினாரு. "தம்பிகளா.. இங்க நாராயணன் இருக்கானாப்பா..?'ன்னு அவங்ககிட்ட கேட்டாரு. அதுல ஒல்லியா இருந்த ஒருவன், ''அவன் வர்றதுக்கு எப்படியும் ராத்திரி பத்து மணியாயிடும்... அவசரமா பாக்கணும்னா

பஸ்ஸ்டாண்ட்ல இருக்கற பியூட்டி சலூனுக்குப் போனிங்கன்னா அவன் இருப்பான்"னு சொன்னான்.

அதைக் கேட்ட சின்னசாமியோட மனசு இத்துப் போச்சு. அவரால தாங்கிக்கவே முடியலே. சோர்வோடபஸ்ஸ்டாண்டுக்கு மறுபடியும் பஸ் ஏறினார்.

பஸ்ஸ்டாண்ட்ல அவர் இறங்கினப்ப மழை விளாச ஆரம்பிச்சது. தலைல போட்டிருந்த துண்டு தொப்பலா நனைஞ்சிட்டுது. ஓட்டமா ஓட ஆரம்பிச்சாரு. ஒரு பழக்கடை ஓரமா ஒதுங்கினாரு. பழக்கடைக் காரன்கிட்டே "பியூட்டி சலூன்எங்க இருக்கு?"ன்னு கேட்டாரு. எதிர் திசைல கையக் காட்னான் பழக்கடைக்காரன்.

மறுபடியும் மழைல நனைஞ்சுகிட்டே ஓடினார். அந்த சலூனுக்குக் கண்ணாடி போட்ட கதவு... உள்ள என்ன இருக்குதுன்னே தெரியலே. ஒதுங்கி வெளியவே நின்னு தவிச்சுக்கிட்டிருந்தார். கொஞ்ச நேரத்துல யாரோ ஒருத்தரு கதவத்தொறந்துக் கிட்டே வெளிய வந்தாரு. டக்குன்னு சின்னசாமி உள்ளே எட்டிப் பார்த்தாரு. நாராயணன் யாரையே சேர்ல சாத்தி வச்சு சவ செய்து கிட்டிருந்தான்.

எந்த நிலையில் ம னைப் பார்க்கக் கூடாதுன் நினைச்சுக் கிட்டிருந்தா அந்த நிலைல அவனை பார்த்தவுடனே அவருக் வயிறெல்லாம் பத்திக்கிட் எரிஞ்சுது. அழுகைய ஆத்திரமுமா வந்துச் 'கடவுளே', இது என்னடாப் சோதனை?'ன்னு நினைச்ச கிட்டாரு".

"நாராயணா.." குரல் த தழுக்கக் கூப்டாரு. அவருக் வார்த்தையே வரலை

நாராயணனும் திரும்பிப் பார்த்தான். தந்தையை அங்கே பார்த்ததும் வியப்பு.. இன்னொரு பக்கம் குழப்பம். செஞ்சுகிட்டிருந்த வேலையைப் பாதியிலே விட்டுட்டு வெளியே வந்தான்.

"என்னப்பா?"ன்னான். சின்னசாமியால எதுவும் பேச முடியலை. தொண்டைய அடைச்சது.

"இப்படி மோசம் பண்ணிட்டியேடா"னு தன்னை அடக்க முடியாம அழ ஆரம்பிச்சிட்டாரு.

நாராயணன் அவரோட கையைப் பரிவாப் புடிச்சுக்கிட்டான். "இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி கலாட்டா பண்ணுறீங்க..?" சாந்தமா கேட்டான்.

மழைக்காக கடை ஓரமா ஒதுங்கியிருந்தவங்க எல்லாம் இரண்டு பேரையும் வேடிக்கை பாக்க ஆரம்பிச்சிட்டாங்க. சின்னசாமி அப்புறம்தான் தன் நிலைமைக்கு வந்தாரு. துண்டைப் பிழிஞ்சு தலையத் தொவட்டிக்க ஆரம்பிச்சாரு.

நாராயணன் கடை உள்ளே போயி முதலாளி கிட்டே விஷயத்தைச் சொல்லிட்டு வந்தான். "வாங்க போலாம்."



'டேரில் எஃப் ஜானுக்' ஹாலிவுட்டின் பிரபல டைரக்டர்களில் ஒருவர். இவர் 1925ஆம் ஆண்டில் மட்டும் 19 படங்கள் தயாரித்துள்ளார். அத்தனை படங்களுக்கும் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, இயக்கம், தயாரிப்பாளர், அனைத்தும் டேரில்லே! ஒரே ஆண்டில் அதிகத் தரமான, அதிக வருவாயளித்த படங்களைத் தயாரித்த இயக்குநர்களில் ஜானுக் தலையாயவரும் ஆவார்.

- ஏர்வாரக்கடியான்

தூறிகிட்டிருந்த மழைக்கு நடுவுல இரண்டு பேரும் நடக்க ஆரம்பிச்சாங்க.

நடந்துக்கிட்டே நாராயணன் கேட்டான்: "சொல்லுங்கப்பா.. என்ன பிரச்சனை? எதுக்கு இங்க வந்து அழுது கலாட்டா பண்ணுறீங்க?"

"நான் பெத்த மவனே" மறுபடியும் பேச முடியாம அழுதாரு.

"தயவு செஞ்சு எதுவா இருந்தாலும் அழாம சொல்லுங்க"ன்னான் நாராயணன்.

"நான் உன்னைப் படிக்கறதுக்கோசரம்தான் இங்க அனுப்பிவச்சேன். ஆனா, நீ... வேண்டாம்பா... அந்தப் பாவம் புடிச்ச தொழில் என்னோட போயி ஒழியட்டும். உனக்கு வேணாம், மறந்துடு..." அவரோட கண்கள்ல ஈரம்.

அதைக் கேட்டு சத்தம் போட்டுச் சிரிச்சான் நாராயணன். சின்னசாமிக்கு அது எரிச்சலா இருந்துச்சி.

"நான் வேதனையோட சொல்றது உனக்குச் சிரிப்பா இருக்காடா?" கொஞ்சம் அதட்டலோடவே கேட்டாரு.

நாராயணன் சொன்னான்: "இந்தத் தொழில் மேல திடீர்னு உங்களுக்கு அப்படி என்னதான் வெறுப்பு...?"

சின்னசாமியின் கண்கள்ல ஆவேசம். "வெறுப்பு இல்லடா... இனியும் சகிச்சுக்க முடியாதுங்கிற முடிவு. இந்த அடிமைச் சேவகம் இந்தத் தலைமுறையோட ஒழிஞ்சு போவட்டும். என்னோட வாரிசுங்க அடிமைங்களா இருக்கக் கூடாது. இந்தத் தொழில் பக்கமே வரக் கூடாது. நான் பட்ட அவமானங்களை எம் புள்ளைங்க படக்கூடாது" - பேய் பிடிச்சவர் மாதிரி

ஆவேசமா சொன்னாரு சின்னசாமி.

மறுபடியும் சிரிச்சான் நாராயணன். "அப்பா! உன் நினைப்பு தப்பு. கிராமங்கள்ல வேணா நீ சொல்ற மாதிரி இருக்கலாம். டவுன்ல அப்படி இல்லே... இந்தத் தொழிலுக்கு மரியாதை கூடியிருக்கு. கணிசமா வருமானம் வர்ற தொழிலாவும் ஆயிடுச்சி. வேற ஜாதிய சேர்ந்தவங்களும் இப்ப பியூட்டி பார்லர் வைக்க ஆரம்பிச்சுட்டாங்க.

தவிர எனக்கு இந்தத் தொழில் மேல மரியாதை இருக்குப்பா. என் முப்பாட்டன், பாட்டன், அப்பன்... இப்படி எல்லாருக்கும் சோறு போட்டு தேங்கிற நன்றி உணர்ச்சி இருக்கு. உங்களுக்குள்ள மாதிரி எனக்கு இந்தத் தொழில் மேல தாழ்வு மனப்பான்மையும் இல்லை.."

"தலைமுறை தலைமுறையா அடிமைச் சேவகம் செய்யறதுதான் தலைவிதியாடா..?"

"எந்தத் தொழிலும் அடிமைச் சேவகம் இல்லைப்பா.. நாம தொழில் செய்யறோம். கூலி கொடுக்கறாங்க. எது கேவலம்? நாம திருடலே.. பொய் சொல்லலே

திருடினவங்க, கோடி கோடியா கொள்ளையடிச்சவங்க எல்லாம் இந்த நாட்ல வெட்கப்படாம சிரிச்சுக்கிட்டு பத்திரிகைகளுக்குப்போஸ் தர்றாங்க... தலை நிமிர்ந்து நடக்கறாங்க... நாம ஏன் தலை குனியணும்? எவன் சொத்தை நாம ஏமாத்திக் கொள்ளையடிச்சோம்? நாம தலை நிமிர்ந்து நிக்கணும். உழைச்சு சம்பாதிக்கறோம். அந்தப் பணத்துல உயிர் வாழறோம்னு பெருமைப்படுங்க. திமிரோட இருங்க."

"ஆயிரம்தான் நீ சமாதானம் சொன்னாலும் என் மனசு கேட்கலையேடா.. என் ஆசை அவ்வளவு தானா? நீயும் இந்தத் தொழிலுக்குத்தான் வரப்போறியா? படிச்சுட்டு இந்தத் தொழிலைப் பண்றது கேவலமா இல்லையாடா...?" கண்ணீருடன் கேட்டார் சின்னசாமி.


"இல்லேப்பா... நிச்சய அப்படி இல்லே.. இந் நாட்ல படிச்சவன் எல்லா கவர்மெண்ட் வேலைக்கு தான் போவேன்னு அட பிடிக்கறதுதான் நம் நாட்டோட சாபக்கேடு. கவ மெண்ட் வேலையைத் தவி வேறே வேலை செய் மாட்டேன்னு சொல்றதா தான் வேலையில்லா திண்டாட்டம் பெருகிடுச் செய்யும் தொழிலே தெய்வம்னு சொன்னது ஏ தெரியுமா? தொழில் மேல ஒ பக்தி இருக்கணும். மரியாதை இருக்கணும்கிறதுக்குத்தான்


மரியாதையோடவும் விருப்பத்தோடவும் ஒ தொழிலைச் செய்யும்போது அதில் திருப்தி. உங்களுக்கு அந்த பக்தி இல்லே. அந் பக்தியை உங்களுக்குள்ளே வரவழைச்சுக்குங்க.."

"உன்னை வளர்த்த நா வயிறெரிஞ்சு போ வேண்டியது தானா...?"

⊛ அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான காலஞ்சென்ற ரிச்சர்ட் நிக்சன், ஜெரால்ட் ஃபோர்ட், ஜிம்மிகட்டர் ஆகிய மூவரின் உடல்கள் அமெரிக்காவில் அடக்கம் செய்யப் படவில்லை.

– ஏர்வரைக்கடியான்





காலம் செய்த கோலத்தால்
கலிமுற்றிப் போனதுவோ?
தார்மீக நெறிமுறையை
ஆராள்வார் மறந்தனரே!
ஆன்மிக வழிமுறைகள்
அற்றுத்தான் போனதுவோ
வால்மீகி சொன்ன கதை
வழிமாறிப் போயினவோ?
கார்மேகக் கூட்டமது
காசினியைக் கவர்ந்ததுவோ?
கண்ணபிரான் கனிந்துரைத்த
கீதை சொன்ன பாடமெல்லாம்
தண்ணீரில் எழுதி வைத்த
தத்துவங்கள் ஆயினவோ?

இனியேனும் புதுயுகம்
ஓங்குமெனக் காத்திருப்போம்!
இடிமுழக்கும் விடிவானம்
இருட்டிடையே இருந்திடினும்
விடிவெள்ளி தோன்றுமென
விழியிரண்டை வைத்திரு.
கல்கியவன் வெளிப்படுவான்
கதிரவன் ஒளிப்பிழம்பாய்
வெண்புரவி மீதேறி
வெற்றிதனைக் குவித்திடுவான்.
யுத்தங்கள் அழிந்துவிடும்
யுகபுருஷன் வாள்வீச்சில்
தர்மங்கள் தழைத்தோங்கும்
அறநெறிகள் மேலோங்கும்.

"உன் விருப்பப்படியே நான் கவர்ன்மெண்ட் வேலைக்குப் போவேன். உங்களுக்குப் பெருமை தேடித் தருவேன். அப்புறம் ஏன் நான் இந்தத் தொழிலைச் செய்யறேன்னு நீங்க கேட்கலாம். காரணம் இருக்கு.." என்றவன் நின்றான். தந்தையின் இரண்டு தோள்களையும் ஆதரவாய்ப் பிடித்தான். "இனியும் உங்களை கஷ்டப் படுத்துறது எனக்கு நியாயமாத் தெரியலைப்பா. நான் என் உழைப்பிலேயே படிக்கறேன். வயசான காலத்துல எனக்காக நீ கஷ்டப்படக் கூடாது. எனக்கு வேற தொழில் தெரியாது. எனக்குத் தெரிஞ்ச தொழில் இதுதான். அதனால நான் படிக்கறதுக்கு வருமானம் தர்ற தொழிலா இதைத் தேர்ந்தெடுத்துக்கிட்டேன்.

கிராமத்துல உங்களுக்கு வருமானம் குறைவு. நான் படிக்க நீங்க பணம் அனுப்பணும்னா கடன் வாங்கித்தான் அனுப்பணும். என்னைப் படிக்க வைக்க நீங்க பட்ட கஷ்டங்கள் போதும். இந்த வயசுல இனி நீங்ககஷ்டப்படக்கூடாதுப்பா.

நிம்மதியா இருக்கணும். ஓய்வெடுங்க.. இனி நீங்க சம்பாதிக்க வேணாம். உங்களுக்குப் பணம் தேவைன்னா நான் அனுப்பி வைக்கிறேன்.


இந்த பார்பர் ஷாப் போட ஒய்ஞ்சு நான் போயிடுவேன்னு நினைக்காதீங்க. ஒங்க ஆசைப்படியே நான் படிச்சு பெரிய உத்தியோகத்துக்கு வருவேன். அந்த நோக்கத்துக்காக அசராம படிக்கிறேன். யுனிவர்சிட்டியிலேயே ஃபர்ஸ்ட்டா வந்து நிச்சயமா தங்க மெடல் வாங்குவேன்... உங்க கனவ உங்க மகன் நிறைவேற்றி வைப்பான்."

இதைக் கேட்ட சின்னசாமிக்குக் கண்கள் கலங்கின. "எனக்கு இது போதுன்டா ராசா"ன்னாரு. ரோடுன்னும் பார்க்கலை. பையனைக் கையெடுத்துக் கும்பிட்டாரு.

"என் தகப்பஞ் சாமி"ன்னு சொன்னாரு. நாராயணனை இறுக்கமா அணைச்சுக்கிட்டாரு சின்னசாமி.

ராக்கெட்டில் பறக்கலாம், வாருங்கள்

புஷ்பா தங்கதுரை



ராக்கெட் என்பது மாயமுமில்லை; மந்திரமுமில்லை.

அதைப் புரிந்து கொள்ளப் பெரிய விஞ்ஞான அறிவும் வேண்டாம்! நீங்களே உங்களை அறியாமல் ராக்கெட் சோதனை கூடச் செய்திருப்பீர்கள். உதாரணத்திற்கு, சாதாரண பலூனை எடுத்துக் கொள்ளுங்கள். உள்ளே காற்றை ஊதி அடையுங்கள்.

பலூனின் வாயை விரல்களால் இறுக்கப் பிடியுங்கள். பலூன் உப்பின பிறகு வாயை இறுக்கிய விரலை சட்டென்று திறந்து விடுங்கள்.

உங்கள் கையை விட்டு பலூன் மேல் நோக்கிப் பறக்கும்.

காற்று எல்லாம் போனபிறகு கீழே விழும்.

ராக்கெட் தத்துவமே இதுதான்!

பலூன் ஏன் பறந்தது?

பலூனிலிருந்த காற்று, வெளியேறுவதற்கு வழி (துவாரம்) கிடைத்தவுடன், அதன் வழியே வீறி அடித்துக் கொண்டு வெளிவருகிறது.

அந்த வேகத்தில் பலூன் தன்னைத் தானே உதைத்துக் கொள்கிறது.

அதனால் மேலே பறக்கிறது.

மற்றோர் உதாரணம்:

வாணவேடிக்கை பார்த்திருப்போம். வாணக்காரர் வாணத்தைக் கீழே கொளுத்துவார். அது பற்றிக்கொண்டு பொறி சிதறியவுடன், வாணம் சீறிக் கொண்டு மேலே பாயும்!

இங்கேயும் ராக்கெட் தத்துவம்தான் நேர்ந்திருக்கிறது.

வாணக்காரர் நெருப்பைக் கொளுத்தியவுடன் அதன் உள்ளிருந்த மருந்து பற்றி எரிகிறது. அதனால் உஷ்ணமான

வாயுக்கள் திடீரென்று உண்டாகின்றன. இந்த வாயு வெளியே போக இடமில்லாமல் வாணத்தின் பின்பகுதி வழியாக வெளியேறுகிறது.

சற்றுக் கவனிக்கவும்.

பலூன் தனது காற்றை வெளியேற்றுவதன் மூலம் தன்னைத்தானே முன்னால் போவதற்கு உதைத்துக் கொண்டது.

அதுபோல, வாணமும் தனது உஷ்ண வாயுக்களை வெளியேற்றுவதன் மூலம் தன்னைத் தானே உதைத்துக் கொண்டு முன்னேறுகிறது.

இப்படி இவை தங்களை உதைத்துக் கொள்வதற்கு வெளியே சுற்றிவர காற்று இருக்கவேண்டும் என்று சிலர் நினைப்பார்கள். தேவையில்லை.

காற்றில்லாத வெறும் சூன்யத்தில் பலூனை விட்டால் கூட இது தன்னை உதைத்துக் கொண்டு கிளம்பும். இது ஒரு முக்கியமான விஷயம்! ஞாபகம் வைத்திருப்போம்.

சொல்லப் போனால் சுற்றி வரக் காற்று இருப்பதே வாணத்திற்கு இடையூறு.

ஏனெனில் காற்றின் (உராய்வு) Friction வாணம் பறப்பதைப் பாதிக்கும்.

இங்கே விண்வெளி ராக்கெட்களில் என்ன செய்கிறார்கள் . என்று கவனிப்போம்.

அவற்றுக்குள் காற்று அல்லது மருந்துகளை அடைக்க முடியாது. காரணம் - அவை போதா.

பல ஆயிரம் மைல்கள் மேலே செல்ல இந்த இயக்க சக்திகள் போதா.

எனவே திரவ எரிபொருளை விஞ்ஞானிகள் எடுத்துக்கொண்டார்கள்.

இரு விதமான எரிபொருள்களை எடுத்துக் கொண்டு, அவற்றை ராக்கெட்களில் இரு அறைகளில் நிரப்பி வைக்கிறார்கள்.

இரண்டு தனித்தனி திரவங்களையும் ஒரே 'சேம்பரு'க்குள் போகச் செய்வார்கள்.

அங்கே இரண்டு திரவங்களும் கலக்கும்போது அதிக உஷ்ணத்திலான வாயுக்களை அவை உண்டாக்கும்.

இந்த வாயுக்கள் ராக்கெட் அடிவாரத் துவாரம் வழியே வெளியே வர -

ராக்கெட் கிளம்பி மேலே செல்லும்.

ராக்கெட் தன்னையே உதைத்து மேலே கிளப்புகிறது.

திரவ எரிபொருள் மூலம் பிரச்சனைகள் தீர்ந்து விடவில்லை. தேவைக்குத் தகுந்த சக்தி இந்த எரிபொருளுக்குக்கூட இல்லை.

இதற்காகத் தான் துணை ராக்கெட்கள் உண்டாக்கப்பட்டன. ஒரு ராக்கெட் மேல் இன்னொரு ராக்கெட்.

இதில் கீழ் ராக்கெட் புறப்பட்டு குறிப்பிட்ட உயரம் போனதும் அது கழன்று கொள்ளும். தரையில் உதிர்ந்துவிடும்.

அதைத் தொடர்ந்து மேலே உள்ள இரண்டாவது ராக்கெட் இயங்கத் தொடங்கும். விண்வெளியை நோக்கிச் செல்லும்.

கொஞ்சம் ஐசக் நியூட்டனிடம் செல்வோம்.

முந்நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானி ஆப்பிள் கீழே விழுவதைப் பார்த்து புவியின் ஈர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தார்.

(அந்த ஆப்பிள் மரம் இன்னும் லிங்கன்ஷயர், இங்கிலாந்தில் இருக்கிறது) புவி ஈர்ப்பு மட்டுமன்றி, ஆப்பிளைக் கீழே விழ வைக்கும் சக்தியேதான் பூமியைச் சுற்றிச் சந்திரனைப் போக வைக்கிறது என்பதையும் உணர்ந்தார். அதே சக்திதான் பூமியையும், சூரியனைச் சுற்றிப் போக வைக்கிறது என்று அறிந்தார்.

ஆனால் — ஒரு சிக்கல்!

ஆப்பிள் மட்டும் கீழே விழுகிறது. சந்திரன் மட்டும் சுற்றிக்கொண்டே இருக்கிறது. அதுவும் கீழே விழ வேண்டாமா?

இதைப் பற்றி அறியப் போகுமுன் ஒரு சின்ன சோதனைக்கு வருவோம்.

ஓர் உயரமான கட்டடத்தின் மீது ஏறி நிற்போம்.

ஒரு கல்லை மேலிருந்து கீழே போடுகிறோம். அது அந்தக் கட்டடத்தின் அருகிலேயே விழும். இன்னொரு கல்லை எடுத்து வீசி எறிவோம்.

அந்தக் கல்லும் கீழே விழும். ஆனால் நாம் வீசிய வேகம் எவ்வளவோ, அவ்வளவு தூரம் போய் விழும். (படத்தில் எண் இரண்டு)

இப்போது அதே கல்லை நீங்கள் விநாடிக்கு ஐந்து மைல் (எட்டு கி.மீ.) வேகத்தில் எறிகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அந்தக்கல் பூமியைச் சுற்றி ஓடிக்கொண்டே இருக்கும். (நாம் இன்னும் கட்டடத்தில் நின்று கொண்டு இருந்தால் நம் முதுகிலேயே அது வந்து மோதும்.)

இது எப்படி நிகழ்கிறது?

நீங்கள் இரண்டாவது கல்லை வேகமாக எறிந்தீர்கள். அது சற்று தூரம் போய்த்தான் விழுந்தது.

மூன்றாவது கல்லை பெரும் வேகத்தில் எறிந்து விட்டீர்கள். (விநாடிக்கு 5 மைல், மணிக்கு 18.000 மைல்)

கல் அதே வேகத்தில் ஓடுகிறது. அதே நேரம் பூமி அதை இழுக்கிறது.

ஆனால் இழுக்கும் வேகத்தினும் அதிகமாக அதன் ஓடும் வேகம் இருப்பதால் கல் போய்க் கொண்டே இருக்கிறது.

இதை இன்னோர் உதாரணத்தில் பார்த்தால் நாம் உடன் புரிந்து கொள்வோம்.

பத்தடி நீளக் கயிறொன்றில் ஒரு கல்லைக் கட்டி அதை 'கார்த்திகை வாணம்' சுற்றுவது போல் சுற்றுவோம்.

கல் கீழே விழாமல் சுற்றிக் கொண்டே இருக்கிறது.

புவி ஈர்ப்பு அதைக் கீழே இழுக்கத்தான் செய்கிறது. ஆனால் அதைக் கீழே விழவிடாமல் அதன் வேகம் அதை விரட்டிச் செல்கிறது.

இந்த வேகத்தைக் குறைக்கத் தொடங்கினால் இந்தக் கல் தனது உயரத்தை இழந்து மெல்ல மெல்ல இறங்கி கடைசியில் கீழே விழும்.

இப்போது பூமியைச் சுற்றி சந்திரன் போவது இப்படிப்பட்ட வேகத்தில்தான்.

வேகமான ஓட்டத்தில் இருப்பதால் பூமியின் மீது அது விழுவதில்லை.

ஓட்டத்தின் வேகம் குறைந்தால் விழுந்துவிடும்.

அதே போல் சூரியனைச் சுற்றும் நமது பூமியும் வேகத்தில் இயங்குவதால் சூரியனில் விழுந்துவிடப் போவதில்லை.

(நாம் சூரியனைச் சுற்றும் வேகம் தெரியுமா? விநாடிக்கு 18 மைல் (30 கி.மீ.) மணிக்கு 66,000 மைல்)

இங்கே இன்னொரு விஷயத்தைப் பார்ப்போம்.

ஒரு பம்பரத்தைச் சுற்றிக் கீழே விடுகிறோம்.

மண் தரையானால் அது சீக்கிரமே ஆடி விழுந்துவிடும்.

செங்கல் தரையானால் இன்னும் சற்று நேரம் அதிகம் ஆடி விழுந்து விடும்.

சிமெண்ட் தரையானால் முன் இரண்டை விட இன்னும் சிறிது நேரம் அதிகம் ஆடும்.

வழவழ என்ற மொஸைக் தரையானால் எல்லா வற்றையும்விட இன்னும் அதிக நேரம்.

சரி, இந்தப் பம்பரம் தரையே இல்லாமல் அந்தரத்தில் ஆடுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

முந்திய எல்லாவற்றையும்விட வெகுநேரம் ஆடிக் கொண்டிருக்கும்.


இதே அந்தரத்தில், காற்றே இல்லாத சூன்யத்தில் அது ஆடினால்,

ஆச்சரியம். அந்தப் பம்பரம் அனாதி காலத்திற்கு ஆடிக் கொண்டே இருக்கும். ஆடுவதை நிறுத்தவே நிறுத்தாது.

சினிமாவில் கூட இதைக் காண்பித்திருப்பார்கள். விண் கலத்திலிருந்து ஒருவன் அந்தரத்தில் விழுந்து விட்டால் விழும் சமயம் அவனுக்குச் சுழற்சி ஏற்பட்டுவிட்டால் போதும்.

அந்த அந்தரமான சூன்யவெளியில் அவன் உடல் சுற்றிக் கொண்டே இருக்கும். அவனால் அதை நிறுத்த முடியாது.

இயக்கத்தைப் பற்றிய நியூட்டனின் முதல் விதி இதைக் கூறுகிறது.



1. வேகமில்லாதவை - கீழே விழுகின்றன.
2. குறைவாக வேகமுள்ளவை - சற்றுத் தள்ளி விழுகின்றன.
3. அதிக வேகமுள்ளவை - இன்னும் தள்ளி விழுகின்றன.
4. விநாடிக்கு 5 மைல் வேகமுள்ளவை - பூமியைச் சுற்றிக் கொண்டே போகின்றன

பொருள்கள் குறைந்த வேகத்தில் எறியப்பட்டால் சீக்கிரம் பூமியில் விழும்.

விநாடிக்கு 5 மைல் வேகத்தில் பொருளை எறிந்தால் அவை பூமியைச் சுற்றிக் கொண்டே இருக்கும்.

நாம் ஒரு கல்லை எறிகிறோம். அது எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் சூன்யத்தில் பாய்ந்தால் அது போய்க் கொண்டே இருக்கும்! நிற்காது.

இந்த விதியில்தான் நமது பூமி, சந்திரன், மற்ற கிரகங்கள் யாவுமே இயங்குகின்றன.

அந்தரத்தில், சூன்யத்தில் எல்லாமே இயங்கிக் கொண்டிருப்பதால், எந்தவிதத் தடையுமின்றி எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும். இயங்குவதை நிறுத்த முடியாது.

சரி, இப்போது நமது கட்டடத்திற்கு வாருங்கள்! (கல்லை விட்டு எறிந்தோமே, அந்த இடம்)

இந்தக் கட்டட உயரத்திலிருந்து ஒரு கல்லை நம்மால் பூமியைச் சுற்றி வரும்படி விநாடிக்கு ஐந்து மைல் வேகத்தில் எறிய முடியுமா?

முடியாது! அப்படி இருக்கும்போது நிறைய எடை உள்ள ஒரு செயற்கைக் கோளை எப்படி எறிய முடியும்?

முடியாது.

இதற்கு ஒரு வழி இருக்கிறது.

செயற்கைக் கோளை பூமியிலிருந்து மேலே தூக்கி காற்று எதுவுமே இல்லாத (Atmosphere) சூழலைத் தாண்டி விடுவோம்.

சூன்யமான ஒரு பகுதிக்கு வருவோம். இங்கே அந்தக் கோளைச் சுற்றி வரும்படி சரியான வேகத்தில் தள்ளி விட்டால்,

அந்தக் கோள் அந்த விநாடியிலிருந்து அதே உயரத்தில் அதே வேகத்தில் பூமியைச் சுற்றிக் கொண்டே இருக்கும்! நிறுத்த முடியாது.

இதுதான் செயற்கைக் கோளின் விந்தை!

இதைத்தான் 1957 அக்டோபர் 4ஆம் தேதி அன்று ரஷ்யர்கள் செய்தார்கள்.

செயற்கைக்கோளை பூமிக்கு மேலே கொண்டு போய்ப் பறக்கவிட்டார்கள். 'ஸ்புட்னிக் ஒன்று' என்று பெயர் கொடுத்தார்கள்.

ராக்கெட்டில் பூமிக்கு 100 மைல் உயரத்திற்கு ஸ்புட்னிக்கை எடுத்துச் சென்று பூமியை வளையவரும் வேகத்தில் தள்ளினார்கள். (இப்படித் தள்ளுவதற்கு சின்ன ராக்கெட்கள் அந்தக் கோளில் பொருத்தப்பட்டிருந்தன)

சுமார் இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை (ஸ்புட்னிக்) பூமியைச் சுற்றி வந்தது.

அந்த உருண்டையான கோளில் எதுவும் இல்லை. வெறும் ரேடியோ செட்டை மாத்திரம் வைத்திருந்தார்கள். அது ப்ளீப் ப்ளீப் என்ற சத்தத்தை உண்டாக்கிக் கொண்டே இருந்தது.

உலகம் முழுதும் ரேடியோ ஆபரேட்டர்களுக்கு அது கேட்டது.

மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்த ப்ளீப் நின்று விட்டது.

காரணம் உண்டு! அது பறந்த 100 மைல் உயரத்தில் பூமியின் காற்று சிறிதளவு உண்டு. உராய்வு காரணமாக இந்தக் காற்று ஸ்புட்னிக்கின் வேகத்தைக் குறைத்துக்



கொண்டே வந்தது. இதனால் பூமியின் காற்று மண்டலத்தில் அது விழுந்து காற்றின் உராய்வில் எரிந்திருக்க வேண்டும்.

ராக்கெட் விடுவதில் தேர்ச்சி பெற்ற பிறகு அவற்றை உபயோகித்து நிறையச் செயற்கைக் கோள்களை பூமியைச் சுற்றிப் பறக்க விட்டார்கள். அந்நிய கிரகங்களையும் நோக்கிப் பறக்க விட்டார்கள்.

பூமியைச் சுற்றும் செயற்கைக் கோள்களின் மூலம் பூமியைப் பற்றி நிறைய அறிந்து கொள்ள முடிகிறது. அந்த அளவுக்குப் பயனுள்ள வகையில் – பூமியிலுள்ள பல்வேறு வளங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் பயன்படுத்துகிறார்கள்.

விரோதி நாடுகளை உளவு பார்க்கவும் பறக்க விடுகிறார்கள். பருவநிலை, டெலிபோன், டெலிவிஷன் போன்ற துறைகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

இன்னும் சிறிது காலத்தில் இந்தச் செயற்கைக் கோள்கள் பிரமிக்கத்தக்க மாறுதல்களை நம்மிடையே உண்டாக்கப் போகின்றன.

நமது வாழ்க்கை முறை பெரிதும் மாறுதலடையப் போகிறது.

இன்னும் 20 ஆண்டுகளுக்குள் மனிதன் முற்றிலும் புதியவனாக இருக்கப் போகிறான்.

அரசியலும், நாடுகளும் ஒழிந்து உலகம் ஒரே சமுதாயமாகத் திகழ அப்போது வழி பிறக்கப் போகிறது.

பேதைமை

மு. துரைராசன்

பேதைமை என்பது அறியாமை.

'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்பார் கவிஞர். எனவே எல்லாம் அறிந்தவராக எவரும் இருக்க முடியாது. அவர் பெரிய பேரறிவாளராக இருந்தாலும் ஏதாவது சில வினைகளில் அறியாதவராக இருப்பார் என்பது தெளிவு. ஆகவே அறியாமை யாவர்க்கும் பொதுவானது. அது ஒவ்வொருவரிடமும் சில வினைகளில் ஒளிந்திருக்கிறது; மறைந்திருக்கிறது.

இளமைப் பருவத்தில் கூடுதலாக இருக்கிற அறியாமை வயது ஆக, ஆக, அறிவு வளர, வளர கொஞ்சம், கொஞ்சமாகக் குறைகிறது. ஆனால் எக்காலத்திலும் முழுமையாக, அகற்றப்படுவதில்லை. அது பருவத்திற்குப் பருவம் மாறுபடுகிறது; வேறுபடுகிறது. அவ்வாறு வேறுபடுகிற அறியாமையை வெவ்வேறு இடங்களில் விவரமாக விளக்குகிறது, திருக்குறள்.

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது எல்லாருக்கும் தெரிந்த பழமொழி. ஆனால் அரவத்தையும் கையில் பிடிக்க முயலுவது, குழந்தையின் அறியாப் பருவம். அறியாமையால் எழும் அச்சப்படாத தன்மை எல்லாப் பருவங்களிலும் இருந்தாலும் அது குழந்தைப் பருவத்தில் கூடுதலாகக் காணப்படுகிறது. 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்று வள்ளுவர் வலியுறுத்தும் பேதைமை குறிப்பாகக் குழந்தைப் பருவத்திற்குப் பொருந்துமென்று கொள்ளலாமல்லவா?

அடுத்தது, வாலிபப் பருவம். இப்பருவத்தில் அறியாமையினால் முளைக்கின்ற முரட்டுத்தனமும் அறியாத் தனமும் முதிர்ந்து கிடக்கின்றன. பெரும்பாலும் பேதைமையின் காரணத்தால் ஒரு வினையில் மறைந்துள்ள இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும், இடைஞ்சல்களையும் இப்பருவத்தில் அறிவது அருமை. இருந்தாலும் அப்பருவத்திற்குரிய முரட்டுத் தனத்தால் 'என்ன பெரிய காரியம்! என்னால் எதையும் செய்து முடிக்க முடியும்! எப்படியும் சாதித்து விடுவேன்!' என்று சூளுரைத்து, பொய்ச் சொல்லில் வீரம் பேசும் பருவம். அப்பேதைமை அறிவிற்கும், வலுவிற்கும், ஒழுக்கத்திற்கும், பழக்கத்திற்கும் பொருந்தாதவற்றைச் செய்ய ஆசைப்படுகிறது. அதனை, 'பேதைமையுளெல்லாம் பேதைமை' என்று கூறுகிறது வள்ளுவம்.


பேதைமையுளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன் கட்செயல்'

ஒரு வினையைச் செவ்வனே செய்து, வெற்றிகரமாக முடித்தற்கு அதற்குண்டான முறைகள், வழிவகைகள் தெரிவது முக்கியம். அவை ஒன்றும் தெரியாதபோது அதை முடிக்க ஆசைப்படுவது அறியாமை. அவ்வறியாமை அறியாமைகளுக்கெல்லாம் தலையாயது என்று கூறுகிறது வள்ளுவம்.

அவ்வறிவின்மையால் தனது வலிமை தெரியாமல் ஊக்கத்தை மட்டுமே துணையாகக் கொண்டு விமரிசையாகத் தொடங்கி, முடிக்க முடியாமல் திண்டாடி இடையில் கைவிட்டுத் தோல்வியுற்றவர்கள் பலர்!

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்'

அடுத்தது நடுத்தர வயதுப் பருவம். பொருளை ஈட்டிச் சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கும் பருவம். வறுமை, கேடு, பழி, பாவம் முதலியவற்றை நன்குணர்ந்த பருவம். இவற்றை எவ்வாறாயினும் தவிர்க்க முற்படும் பருவம். அதிக அளவிற்கு அறிவு வளர்ந்துள்ள பருவம்.



'பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போகவிடல்'

இப்பருவத்தில் கவனம் அதிகம் கையாளப்படுகிறது. எனவே தீயவற்றைக் கைக்கொண்டு நன்மையானவற்றைக் கைவிடுவதோ, அல்லது கெடுதலை ஏற்றுக் கொண்டு இலாபத்தை இழந்தலோ இப்பருவத்தில் அரிது. ஆனால் அவற்றையும் மீறி அவ்வாறு நடக்கும் போது அதற்குக் காரணம் அப்பருவத்தில் ஒளிந்துள்ள அறியாமையே ஆகும்.

கடைசியாக முதுமைப் பருவம். அப்பருவத்தில் பெரும்பாலோர் அறியாமை ஓரளவு நீங்கப்பெற்று நல்ல முதிர்ந்த அறிவுடையவராக இருப்பர். அப்பருவத்திலும் அதுவரை அகற்றப்படாத அறியாமை புது உருவத்தில் புலப்படுகிறது. முதுமைப் பருவத்தில் நண்பர்கள் முதிர்ந்த அனுபவ அறிவுள்ளவர்களாக இருப்பர். அவ்வயதில் நண்பர்களிடம் கூடுதலாக உரிமை கொண்டாடுவது இயல்பு. அச்சமயம் சில வேளைகளில் தங்களுக்குத் தெரியாமலே அவ்வுரிமை தவறாகப் பயன்படுத்தப் படுகிறது. விளைவு விபரீதமாகிறது. நண்பர் மனம் புண்படுத்தப்படுகிறது.

'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்'

வயோதிகத்தில் நாம் அறியாமலே அனுபவிக்கப்பட்ட உரிமை நண்பருக்குத் துன்பம் விளைக்கிறது.

பேதைமையை இளமையில் 'அஞ்சுவது அஞ்சாமை' என்றும், வாலிபத்தில் 'காதன்மை கையல்ல' என்றும் நடுத்தர வயதில் 'ஏதங்கொண்டு ஊதியம் போகவிடல்' என்றும் முதுமையில் 'நோதக்க நட்டார் செயின்' என்றும் வள்ளுவம் வகுத்திருப்பது வித்தையே! ●

என்ன செய்வாள் சித்திரை?



சித்திரை மகளொரு முத்திரைச் சிரிப்பினைச்
சிந்தியே மகிழ்ந்திடு வாளா?
இத்தரை மீதினில் நித்தமும் நடமிடும்
இழிவுகள் துடைத்திடு வாளா?
நித்திரை கலைத்துமே மெத்தவும் விழிப்புடன்
நிமிர்ந்திடக் கைதரு வாளா?
எத்தனை நலங்கள் சித்திரை தருவாள்?
எனமனம் கேட்குது நாளும்.

வஞ்சக மழிந்து நெஞ்செலாம் நேர்மை
வளர்ந்திட வகைபுரி வாளா?
கொஞ்சிடும் மகிழ்ச்சி மிஞ்சியே நாட்டில்
குலவிட வழிதரு வாளா?
பஞ்செனத் தீமை பறந்திட நன்மை
பற்றிட நெறியருள் வாளா?
கஞ்சிய முடுத்திட ஆடையு மின்றியே
கதறுவார் தொகைகுறைப் பாளா?

என்னதான் செய்வாள்? எப்படித் திகழ்வாள்?
என்றுல கெண்ணியே நிற்கும்.
வண்ணமாய்ப் புதுமை வந்துமே சிரிக்க
வழியினை நோக்கியே பார்க்கும்.
எண்ணமும் செயலும் திண்ணமாய் நலங்கள்
இணைந்திட வருமென ஏங்கும்
என்னதான் அந்தச் சித்திரை தருவாள்
என்றுல கவனையே கேட்கும்:



ச.சவகர்லால்

தனிமையா? இனிமை கடமையா?

ஜோதிர்லதா கிரிஜா

8

சுருக்கெழுத்து வகுப்பு முடிந்து தன் தோழி ஒருத்தியுடன் ஓட்டலுக்கு வந்திருந்த சாருமதியின் பார்வையில்தான் வாணியும் ரவிச்சந்திரனும் பட்டார்கள். வாணியையே பார்த்தபடி வந்த அவனும், தலைகுனிந்தவாறே நடந்த வாணியும் அவளைக் கவனிக்கத் தவறினர். சாருமதியுடன் வந்திருந்த தோழி வாணியைப் பார்த்ததில்லை என்பதால் சாருமதிக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

அடக்கமும் கூச்சமும் நிறைந்த வாணி இளைஞன் ஒருவனுடன் ஓட்டலுக்கு வந்திருக்கிறாள் என்றால் அவன் அவளை மணக்கப் போகிறவனாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் அவளுக்குத் துளியும் ஐயமில்லை. ரவிச்சந்திரனை அவள் பார்த்ததில்லை. தன்னை வாணி கவனித்துவிட்டால் அவளுக்குச் சங்கடம் ஏற்படுமே என்பதற்காக அவள் கூடியவரையில் தன்னை மறைத்துக்கொண்டாள்.

இருவரும் போனதன் பிறகே சாருமதி தன் தோழியுடன் புறப்பட வாய்த்தது..

வீட்டுக்குப் போனதும், வாணியைத் தனியாகப் பார்த்த நேரத்தில், "உன்னை ஓட்டல் சந்திரிகாவில் பார்த்தேன்!" என்று கூறிச் சிரித்த சாருமதி, "யாரது? ஆல் தி பெஸ்ட்!" என்றாள்.

கணத்துக்குள் வாணியின் முகம் வெளிறிப்போனது இன்னமும் சாருமதிக்கு ஞாபகம் இருந்தது.

"ஆத்துல யாருக்கும் சொல்லிடாதே, சாரு நம்ம குமாரோட அண்ணா. நேத்துதான் குமார் மூலமா கேட்டனுப்பினார்!"

"என்னத்தைக் கேட்டனுப்பினார்?'

"போடி!"

"சரி. விவரமால்லாம் உன்னைக் கேட்டு நான் சங்கடப் படுத்தலை.. அவாத்துல சம்மதிப்பாளா, வாணி? நன்னாக் கேட்டுத் தெரிஞ்சுண்டுடு. அது ரொம்ப முக்கியம்."

"முதல்ல அவா அப்பா அம்மாகிட்ட என்னைப் பிடிச்சிருக்குங்கிறதை சொல்லிட்டுத்தான் குமார் கிட்ட கேட்டனுப்பினார். அதனால சிக்கல் ஏதும் இருக்காது" என்ற வாணி எல்லாவற்றையும் அவளுக்குச் சொன்னாள்.

"என்னமோ பிரபலமான பெரிய பாடகியா வரப்போறேன்னெல்லாம் லட்சியம் வெச்சுண்டு எப்பவும் அதைப் பத்தியே பேசிண்டும் இருக்கியே, அதைப் பத்திக் கேட்டு வெச்சுண்டயா? கல்யாணக் கச்சேரிகளுக்கு ஏற்கெனவே போயிண்டிருக்கே."

"ஓ. கேட்டுட்டேன். மிஸஸ் ஜார்ஜ்தான் அப்படி ஒரு யோசனையைச் சொன்னாங்க. அதனால, 'கல்யாணத்துக்கு அப்புறம் சங்கீத சிட்சையைத் தொடர்றதுக்கும், அதுல பாண்டித்தியம் வந்ததும் ரேடியோவில் பாடறது, மேடைக் கச்சேரி பண்றது இதுக்கெல்லாமும் அனுமதிப்பேளா?' ன்னு கேட்டுட்டேன். சரின்னிருக்கார்."

"அப்படின்னா டபுள் வாழ்த்துகள்!"

"இப்போதைக்கு ஆத்துல சொல்லாதடி."

"அதான் எடுத்த எடுப்பிலேயே சொன்னியே! சொல்ல மாட்டேன். அப்ப, அவா வீட்டுல பொண்ணு கேட்டு வருவாளா?"

"அதெல்லாம் இனிமேதான் தெரியணும். குமார் வந்து சொல்லுவான்னு நினைக்கிறேன்."

"உன்னோட ரவிச்சந்திரன் பேசினது அவாளுக்குத் தெரியவருமா?"

''இல்லை. சொல்றதா இல்லைன்னு சொன்னார்.''

''இப்ப என் கண்ணுல பட்ட மாதிரி யார் கண்ணுலயாவது ரெண்டு பேரும் சேர்ந்து பட்டிருந்தேன்னா?'

வாணி எச்சில் விழுங்கினாள்.

''நீ சொல்றது சரிதான்.''

''குமார் கிட்ட சொல்லி சீக்கிரமா ஏற்பாடு பண்ணச் சொல்லு.''

''நான் கல்யாணம் பண்ணிண்டு போயிட்டா அப்புறம் நீங்கல்லாம் என்னடி பண்ணுவேள்?''

''அதுக்குள்ள எனக்கு ஒரு வேலை கிடைச்சுடாதா?''

''உனக்கு ஒரு வேலை கிடைச்ச பிற்பாடுதான் கல்யாணம்னு சொல்லிட்டேன்.''

''சரின்னாரா?''

''சரின்னிருக்கார். அவரே உனக்கு சீக்கிரம் வேலை தேடித் தர முயற்சி பண்றேன்னிருக்கார்.''

''அப்ப நாளைக்கே கூட எனக்கு வேலை கிடைச்சாலும் கிடைச்சுடும்!''

முதலில் அவளது விஷமப்பேச்சைப் புரிந்துகொள்ளத் தவறிய வாணி அடுத்த கணம், 'சீ!' என்றாள்.

பிறகு, ''இந்த சந்திப்போட சரி. இனிமே இப்படியெல்லாம் சந்திக்க மாட்டேன்னு சொல்லிட்டேன்.''

''அது ஒண்ணும் பெரிய தப்பில்லை.''

''இருந்தாலும் என்னத்துக்கு?''

நாள்கள் நகர்ந்துகொண்டிருந்தன. வாணி வழக்கம்போல் எதுவுமே நடக்காதது போன்று – ரவிச்சந்திரனின் எண்ணம் பற்றியறியாதவள் போன்று – வெள்ளிக்கிழமை தோறும் பார்வதியின் வேண்டுகோளை – அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பாடுவதை – நிறைவேற்றிக்கொண்டிருந்தாள். பார்வதியும் நாகநாதனும் திருமணம் பற்றிய பேச்சைத் தற்போது எடுக்கவேண்டாமென்று ரவிச்சந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதை ஒத்திப் போட்டார்கள். தன் தங்கைக்கு ஒரு வேலை கிடைத்த பிறகே அவள் திருமணத்துக்கு இணங்குவதாக இருப்பது பற்றி ஒரு நாள் அவள் அம்மா சொன்னதாய்க் குமார் அவர்களிடம் கூறி இருந்ததும் அதற்கு ஒரு காரணம்.

..சாருமதிக்கு அவ்வளவு எளிதாய் வேலை கிடைக்கவில்லை..

அவர்களிடையே உறவு ஏற்பட்டு ஆறு மாதங்கள் கழித்து ஒரு நாள் குமாரின் நண்பன் ஒருவனுடைய தங்கையின் திருமண விழாவில் கச்சேரி செய்வதற்கான அழைப்பு வாணிக்கு வந்தது. குமாரே மிருதங்கம் வாசிக்க முன்வந்தான். சுந்தர வாத்தியாருக்குத் தெரிந்த ஓர் இளைஞன் வயலின் வாசிக்க ஏற்பாடாகி யிருந்தது.

குமாரின் வீட்டாருக்கு நெருங்கிய பழக்கம் என்பதோடு குமாரே திருமண விழாக் கச்சேரியில் மிருதங்கமும் வாசிக்க இருந்ததால் அவன் வீட்டிலிருந்து எல்லாருமே மாலைக் கச்சேரிக்கு ஆஜராகி விட்டார்கள்.

திருமணக் கச்சேரி என்பதால் வம்புப் பேச்சு, சிரிப்பு, கும்மாளம் ஆகியவற்றிடையே அது நடந்தது. இருப்பினும் குமாரின் பெற்றோரும் சிலரும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் வாணியின் பாட்டை ரசித்தனர். சாருமதி அவ்வப்போது ஓர விழிகளால் ரவிச்சந்திரனைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வாணி தனக்கே உரிய அடக்கத்துடன் பாட்டையை விட்டு விலகாத குதிரை போல் கருமமே கண்ணாகப் பாடிக் கொண்டிருந்தாள். ரவிச்சந்திரனின் பார்வை அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது. சாருமதி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

இரண்டரை மணி நேரக் கச்சேரிக்குப் பிறகு சாப்பாட்டுப் பந்தி நடந்தது. வாணி தப்பித் தவறியும் ரவிச்சந்திரனின் பக்கம் பார்க்காமல் கவனமாக இருந்ததைச் சாருமதி கவனித்துத் தனக்குள் அவளைப் பாராட்டிச் சிரித்துக்கொண்டாள்.

தன் பிள்ளை இவளை மணந்துகொள்ள ஆசைப்படுவதை இவள் அறியமாட்டாள் என்றே பார்வதியும் சரி, நாகநாதனும் சரி, நினைத்துக்கொண்டிருப்பார்கள் என்பதை

எண்ணிய போது அவளது சிரிப்பு அதிகமாயிற்று.

''...என்னடி நீயே சிரிச்சுண்டிருக்கே?'' என்று அம்புஜம் அவள் தோளில் தட்டியதும் தான் அவளுக்கு உணர்வு திரும்பிற்று.

''ஒண்ணுமில்லைம்மா.''

''நானும் வந்ததிலேருந்து கவனிச்சுண்டுதான் இருக்கேன். எதையோ நினைச்சு நினைச்சு சிரிக்கிற மாதிரி தெரியறது!''

''என்னை என்ன ஏதாவது பயித்தியம்னு நினைச்சியா?'' என்ற சாருமதிக்கு நாம் சுற்றுப் புறத்தைக் கவனிக்காவிடினும் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்கள் கவனிக்கிறார்கள் என்பது புரிந்தது. இனிக் கவனமாக இருக்கவேண்டுமென்று அவள் எண்ணிக்கொண்டாள்.

.. இரண்டு நாள்கள் கழித்து வாணியின் கலகலப்புக் குறைந்து – ஏன்? அறவே நின்று – போயிருந்ததைச் சாருமதி கவனித்துத் தனக்குள் வியப்படைந்தாள். அவள் முகம் மலர்ச்சி குன்றியும் உதடுகளின் இயல்பான புன்னகை மறைந்தும் விட்டிருந்தன.

ஒரு தோதான கணத்தில், ''என்ன, வாணி? என்ன நடந்தது? ஒரு மாதிரி இருக்கியே?'' என்று வாணியை அவள் விசாரித்தாள்.

அவள் கேட்டதுதான் தாமதம். வாணியின் கண்கள் குபுக்கென்று கண்ணீரால் நிறைந்துவிட்டன. சாருமதி பதறிப்போனாள்.

''என்ன வாணி? என்ன நடந்தது? அந்த ரவிச்சந்திரன் விவகாரந்தானே?''

''ஆமா.''

''என்ன ஆச்சு, வாணி?''

''கல்யாணம் நடக்காது.''


''அப்படின்னா? நீ என்ன சொல்றே, வாணி?''' அந்த ஆளு ஏமாத்திட்டானா?''

''அப்படிச் சொல்லிட முடியாது. நான்தான் வேண்டாம்னு விலகிட்டேன்.''

''விலகும்படியா என்ன நடந்தது, வாணி?''

''அன்னைக்குக் கோயில்ல கச்சேரி நடந்தது, இல்லையா? அதுக்கு அடுத்த நாள் ரவி என்னோட

ஈரோடு என்ற பெயர் ஏன்?



பக்த சீலரும் விநயத்தின் இலக்கணமுமான ஸ்ரீ இராமச்சந்திரன், ஐ.ஸி.எஸ் (ஓய்வு) கூறிய அ

காஞ்சி ஸ்ரீமடத்தில் வந்து வணங்கிய ஒரு "எங்கேருந்து வந்தே ?" என்று ஸ்ரீ பெரியவாள் கருணை வினவினார். அருளாளன் தக்ஷிணாமூர்த்தியால் – வாக் பூரணத்வத்தில் – பேசா அனுபூதியில் – வீற் காலகட்டத்திற்கு முன்பு.

"ஈரோடிலிருந்து" தவசிரேஷ்டர் தன்னோடு பே பக்தரின் மேனி புல்லரிப்புற்று விழிகளில் ஆ கண்ணீர்த் திரள்.

"அந்த ஊருக்கு ஈரோடுன்னு ஏன் பெயர் தெரியுமோ ?"

" தெரியலை" என்று சொல்லாமல் "பெரியவா செ தெரிஞ்சுக்கறேன்" என்று பணிவான பதில்.

"அந்த ஊர்ல இருக்கற பெரிய சிவன் கோயி போயிருக்கியோ ?"

"அடிக்கடி தரிசனம் பண்ணியிருக்கேன்"

"அந்த சுவாமிக்கு என்ன பேர் ?"

பக்தரால் நிச்சயமாகக் கூறமுடியவில்லை. மெ சாதித்தார்.

நிலைமையைப் புரிந்த கொண்ட ஞான ஸ்வரூபி கூ "அங்கே சுவாமி ஆர்த்ர கபாலீஸ்வரர். அதாவது த ஈர ஓட்டு ஈஸ்வரர். அதுலேருந்து தான் அந்த ஈரஓட்டு ஊராகி, – இப்போ ஈரோடு ஆயிடுத

சொல் ஆராய்ச்சியில் தன்னிகரில்லாச் சொற் வேதியன் அல்லவா ஸ்ரீ பெரியவாள்!

ேபோன்ல பேசினார்."

"என்னன்னு?"

"அந்த வயலினிஸ்ட் என்னை முறைச்சு முறைச்சுப் பார்த்துண்டே இருந்தானாம். அவன் பார்வை சரியா யில்லையாம். கன்னா பின்னான்னு எம்மேல அலைஞ்சுதாம். ரொம்பவும் க்ளோஸா வேற உக்காந்துண்டிருந்தானாம்."

"அதுக்கு நீ என்ன செய்வியாம்?"

"முழுக்கக் கேளு. நான் அவனைத் தள்ளி உக்காருன்னு சொல்லியிருக்கணுமாம்."

"அப்படி ஒண்ணும் அவன் ரொம்ப க்ளோஸா உக்காந்துண்டிருக்கலையே! ஒரு பக்கவாத்திய வித்துவான் எவ்வளவு இடம் விட்டு உக்காரணுமோ அவ்வளவு இடம் விட்டுத்தானே வயலினிஸ்ட் உக்காந்துண்டிருந்தான்? அப்படியே அவன் உக்காந்தாலும், நீ வேணாக் கொஞ்சம் நகர்ந்து உக்காந்துக்கலாமே தவிர அவனைப் பார்த்து நாலு பேருக்கு முன்னாடி தள்ளி உக்காருன்னா சொல்லமுடியும்? தவிர அப்படி அவன் அநாவசியமா நெருக்கியடிச்சுண்டு உக்காந்தாத்தானே நீ அப்படியெல்லாம் சொல்ல முடியும்?"

"அதுவாவது பரவாயில்லைடி, சாரு! இன்னொண்ணு சொன்னார், பாரு! எனக்குச் சீன்னு ஆயிடுத்து."

"என்னடி சொன்னான் அவன்? ஐ'ம் ஸாரிடி! அவன்னு மரியாதைக் குறைச்சலா நான் சொன்னதுக்கு!"

"எனக்கே அப்படித்தான் சொல்லணும்போல இருக்கு! நீ தாராளமாச் சொல்லலாம்."

"சரி. என்ன சொன்னான்? அதைச் சொல்லு."

"குமாரோட நான் இனிமே பேசிப் பழகக்கூடாது அப்படின்னார்."

"அடப்பாவி மனுஷா! ஏனாம்?"

"நான் நாளைக்கு சங்கீதத் துறையில முன்னுக்கு வந்து கச்சேரிகள் செஞ்சாலும், குமார் எனக்கு மிருதங்க வித்துவானா இருந்து வாசிக்கக்கூடாதாம்!"

"ஏனாம் கேடு? காரணம் சொன்னானா?"

"வெள்ளிக்கிழமையன்னிக்கு என்னோட பாட்டு க்ளாஸ் முடிஞ்சதும் அவாத்துக்குப் பாடப் போறேனில்லையா? திரும்பறப்ப இருட்டத் தொடங்கிடறது. அதனால குமார் என்னை பஸ் ஸ்டாப் வரைக்கும் வந்து ஏத்திவிட்டுப் போறான். அதை அவரோட சிநேகிதன் எவனோ பார்த்துட்டு, 'அது யாருடா லட்டு மாதிரி ஒரு பொண்ணு? உனக்கு முன்னாடி உன் தம்பி லவ் பண்ணத் தொடங்கிட்டான் போல இருக்கே?' அப்படின்னு சிரிச்சானாம்!"

"அதுக்காக?"

"அதனால இனிமே நான் அவனோட பேசிப் பழகறது கொள்றதெல்லாம் கூடாதாம். இப்படிப்பட்ட ஆளு நாளைக்கு என்னை எங்கே முன்னேற விடப்போறார்னு எனக்குத் தோணிடுத்து. அதுலயும் குமார் கிட்ட நான் சொல்லணுமாம் இனிமே நீ என்னோட துணைக்கெல்லாம் வராதே அப்படின்னு! எப்படி இருக்கு பாரு! அந்தப் பிள்ளை மனசு என்ன பாடுபடும்? அப்படி நான் தொசுக்குனு நாக்குல பல்லைப் போட்டுப் பேசமுடியுமா?"

"எல்லாத்தையும் கேட்டுண்டு நீ சும்மாவா இருந்தே?"

"இருப்பேனா! 'என்னைச் சொன்னா தாங்கிக்க நான் தயார். குமாரைக் குத்தம் சொல்ற வாய் அழுகிப்போகும்'னே சொல்லிட்டேன்."

"சரியாச் சொன்னே. எங்க வெச்சு இதையெல்லாம் பேசினேள்?"

"ரொம்ப முக்கியமாப் பேசணும். காந்தி பார்க்குக்கு வான்னார். போனேன். அங்கதான். ஊர்ல நாலு போக்கத்தவா பேசறதைக் கேட்டுட்டு அதுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற ஒரு மனுஷனை நான் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்? அதனால நீயும் ஆச்சு உன் லவ்வுமாச்சுன்னு பெரிசா ஒரு கும்பிடு போட்டுட்டேன்!"

"அதுக்கு ஒண்ணும் சொல்லல்லையா அந்தாளு?"

"நான் ஒரேயடியா பின்வாங்குவேன்னு எதிர்பார்க்கல்லை போல இருக்கு. உடனே

கொஞ்சம் இறங்கி வந்தார். 'நாலு பேர் உன்னைப் பத்தி அசிங்கமாப் பேசினா என்னால தாங்க முடியாதில்லையா, அதனாலதான் கொஞ்சம் கடுமையாப் பேசிட்டேன், மன்னிச்சுடு, அது இதுன்னார். 'ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம். இன்னைக்கு எவனோ பேசறதுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற நீங்க - உங்க கூடப்பிறந்த தம்பியையே இப்படி அசிங்கமா நடத்தற நீங்க,-நாளைக்கு என்னதான் பண்ண மாட்டேள்? என்னோட இசை வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடமாட்டேள் நீங்கங்கிறதை நான் எப்படி நம்பறது? உங்க சொந்தத் தம்பி எனக்கும் தம்பிதான்! அவனையே எனக்கு மிருதங்கம் வாசிக்கக்கூடாதுன்னு சொல்ற நீங்க நாளைக்கு வேற எவனோ ஒருத்தன் வாசிக்கிறதையா தாங்கிக்கப் போறேள்? எனக்கு உங்க சங்காத்தமே வேண்டாம். நல்லவேளை! நீங்க இல்லைன்னா எனக்கு வாழ்வே இல்லைன்னு நினைக்கிற அளவுக்கெல்லாம் எனக்கு உங்களோட பழக்கம் ஏற்பட்டுடலை. இருந்தாலும் என் மனசைச் சலனப்படுத்தி அதுல கல்லெறிஞ்சு கலக்கிட்டேள். கல்யாணம்னு ஒண்ணு ஆனதுக்குப் அப்புறம் இப்படியெல்லாம் நடந்திருந்தா மனசு ரொம்ப வேதனைப் பட்டிருக்கும். இப்ப அப்படி இல்லை. உங்க சுயரூபத்தை முன்னாடியே வெளிச்சம் போட்டுக் காட்டிட்டதுக்காக ரொம்ப, ரொம்ப தேங்க்ஸ் உங்களுக்கு! இனி உங்களுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை! அப்படின்னு சொல்லிட்டு எழுந்து வந்துட்டேன்.''

''நல்ல வேலை பண்ணினே.. அது சரி, குமாருக்கு இதெல்லாம் தெரியுமா?''

''குமாருக்குக் காரணம் தெரியக் கூடாதுன்னு சொன்னார். ஆனா எனக்கு மனசு கேக்கலை. சொல்லிட்டேன். ஏன்னா நாளையும் பின்னேயும் குமார்கிட்ட வேற என்னத்தையானும் பொய்யைச் சொன்னார்னா?''


''நீ செஞ்சது சரிதான். ஆனா குமார் அதுக்கு ஒண்ணும் சொல்லலையா?''

——→

வயதின் குரல்கள்

எட்டாம் வகுப்பு
ஜன்னலோரம்
கொட்டாவி விட்ட என் வாயைப்
பழிப்பது போல் கூவியது
அன்றொரு சின்னக் குயில்

மனையாளை ரயிலேற்றி விட்டுத்
தனியாளாய் வட்டமிட்ட
வாலிபத் தனிமையில்
அடிமனத்தை உதைத்த
பனிக்கட்டி உணர்வுகளை
ஓர் ஊசிக் குரலால்
இழுத்து நீட்டியென்
ஏக்கத்தை ஊரெங்கும்
பெருமூச்சாய்க் காட்டிக் கொடுத்தது
மற்றொரு குயில்



வருடங்கள் கனத்து வளைந்த முதுகுடன்
காலொடிந்த கட்டிலில்,
நினைவு தேய்ந்த எழுத்துகளை
ஒடுங்கிப் படிக்கும் சமயம்,

குரலை இருமலாக்கி
சோகத்தைத் தாறுமாறாய்
காற்றில் வரையும்
இன்னொரு கறுப்புக் குயில்

அந்தி யிருட்டில்
காற்று வறண்டு
விலாவெளி ஒட்டைப் பையாகி
தொண்டையைக் கீறலிடும்
இரண்டொரு மூச்சிழுப்பை
அந்தரத்துக் கூட்டுவிளிம்பில்
வாய்நடுங்க முனகி
மௌனித்துப் போகும்
ஒரு கிழட்டுக் குயில்...

என் வயதுக்குள்
குயில்களின் பரம்பரைக் குரல்கள்
எத்தனை?
என் உயிருக்குள்
அதன் எதிரொலிகள்
எத்தனை எத்தனை!

எஸ். வைத்தீஸ்வரன்

''கண்ணெல்லாம் செவசெவன்னு கலங்கிடுத்து. 'ரவியா அப்படிச் சொன்னான்'? 'எங்கண்ணாவா அப்படிச் சொன்னான்' அப்படின்னு திரும்பத் திரும்பப் புலம்பினான். 'குமார்! உங்கிட்ட இதைச் சொல்லி உன்னை வருத்தப்படுத்தணும்கிற எண்ணம் எனக்கு இல்லை. ஆனா உங்கண்ணா வேற எதையாவது சொல்லி நம்ம நட்பைக் கெடுத்துடக் கூடாதில்லையா? அதனாலதான் நடந்ததையெல்லாம் உங்கிட்ட சொல்றேன். என்னை மன்னிச்சுடு, குமார் 'அப்படின்னேன். குமார் அழுதுட்டான். 'உன் கால் தூசுக்குக் கூட அவன் இணையாக மாட்டான். விடு. அவனுக்குக் கொடுத்து வைக்கல்லை' அப்படின்னான். இவ்வளவு நாள் ஒரே குடும்பமா இருந்து பழகியும் அவனோட கேரக்டர் எனக்குத் தெரிஞ்சிருக்கலை பாரேன் அப்படின்னு மாஞ்சு போனான்!..''

''அவா வீட்டு மனுஷாளுக்குத் தெரியுமா?''

''அதை யாரு கண்டா? தெரிஞ்சா என்ன இனிமே தெரியாட்டா என்ன? ரெண்டும் ஒண்ணுதான். ஆனா இனிமே நான் வெள்ளிக்கிழமைகள்ல அவாத்துக்குப் போய்ப் பாட்டுப் பாட மாட்டேன். பெரியவா ரெண்டு பேரும் என்ன ஏதுன்னு விசாரிப்பா. குமார் ஒருவேளை நடந்ததை அவாகிட்ட சொன்னாலும் சொல்லுவான். ஏன்னா பெரியவன் வேற எதையானும் புளுகாம இருக்கணுமே! அதுக்காக வேண்டியாவது நடந்ததைச் சொல்லிடுவான்னு நினைக்கிறேன்.''

''நல்ல காலம். நீ சொல்றாப்ல கல்யாணம் ஆகிறதுக்கு முந்தி அந்தக் கிராதகன் கிட்டேருந்து தப்பிச்சுட்டே! வெளிக்குத் தெரியறதையும், ஒருத்தன் பேசறதையும் வெச்சு அவனைச் சரியா எடை போட முடியலை, பாத்தியா! விட்டுத் தள்ளு!'' என்றாள் சாருமதி.

'காதல் என்கிற உணர்வு ஒரு பெண்ணின் மனத்தில் தானாக அரும்புவது சற்று அரிதானதுதான். ஆனால் அவளுடன் பழகிய ஓர் ஆண் அவளைக் காதலிப்பதாகச் சொல்லும்போது அவளுக்கு அவன்மீது ஈடுபாடு ஏற்படுகிறது. தன்மீது அன்பு கொண்டுள்ளதாய்ச் சொல்லித் தன் காதலை யாசிக்கும் இவன் தன்மீது புரிந்துணர்வோடு நடந்துகொண்டு அன்பைச் சொரிவான் என்று எதிர்பார்த்து அவனுக்கு ஆதரவாக எதிரொலிக்க அவள் முற்பட்டுவிடுகிறாள் – அவனிடம் தனக்குப் பிடிக்காத ஏதேனும் இருந்தாலல்லாது பெரும்பாலும் அவள் தன்னைத் தேடிவருகிற காதலை மறுதலிப்பதில்லை. அவ்வாறு ஏற்றுக்கொண்டு விடுகிற காதல் நிறைவேறாது முறிந்துவிடும்போது – அவள் மனத்தில் காதல் தானாக அரும்பவில்லை என்பது உண்மையே யானாலும் கூட – அவள் மனமும் முறிந்துவிடுகிறது.' – இப்படியெல்லாம் அவளது வாடிப்போய்விட்டிருந்த முகத்தையும் அவள் இழந்துவிட்டிருந்த கலகலப்பையும் கவனித்து மனம் வருந்தினாள் சாருமதி.

அம்புஜம் கூட விசாரித்துவிட்டாள், ''ஏண்டி என்னமோ போல இருக்கே?''என்று. வாணி, ''எப்பவும் போலத்தானே இருக்கேன்?'' என்று சமாளித்தபோது சாருமதி அருகே இருந்தாள்.

''ஏண்டி இவ நேத்துலேருந்து ஒரு மாதிரி இருக்கா? உனக்கு ஏதாவது தெரியுமா?''

''எனக்கு எதுவும் தெரியாதும்மா. அவதான் ஒண்ணுமில்லைங்கறாளோல்லியோ? நீயா வீணா எதையானும் கற்பனை பண்ணிக்காதே!''

அந்த வெள்ளிக் கிழமையன்று வாணி குமாரின் வீட்டுக்கு வழக்கம்போல் பாடப்போகவில்லை.

ஆனால் குமார் சனிக்கிழமையன்று பிற்பகல் மூன்று மணியளவில் மேரி ஜார்ஜின் வீட்டில் வாணியைச் சந்தித்தான்.

''வாணி! ரவி ரொம்ப வருத்தப்படறான். அவனை நீ மன்னிச்சுடு, வாணி!'' என்றான்.

''முடியாது, குமார்! உங்கண்ணா எப்படிப்பட்ட ஆளுன்னு தெரிஞ்சுபோயிடுத்து. இனி அவன் என் கால்ல விழுந்தாலும் நான் அவனை ஏத்துக்கத் தயாராயில்லை. நாளைக்கு உன்னையும் என்னையும் கூட அவன் ஏதாவது அருவருப்பான முறையில சந்தேகப்படுவான். எனக்கு வேணாம்ப்பா.''

''இப்ப அது அவனோட ப்ரெஸ்டிஜ் இஷ்யூ வாயிடுத்து, உன்னைத் தனக்குப் பிடிச்சிருக்குன்னு அப்பா அம்மாகிட்ட



சொல்லிட்டானில்லையா? அவா ரெண்டு பேரும் நேத்து நீ வராததுனால அவன் உன்னைப் பார்த்துத் தன்னோட எண்ணத்தைச் சொல்லியிருக் கணும்னும் அதனாலதான் வெக்கப்பட்டுண்டு நீ வரலைன்னும் நினைச்சு அவன்கிட்ட கேட்டா. அவன் ஆமான்னு சொன்னதோட எங்கப்பாவும் அம்மாவும் உங்க அப்பா அம்மாவோட அதைப் பத்திப் பேசறதுக்கு வர்ற வெள்ளிக்கிழமை இங்க வர்றதா இருக்கிறது பத்திச் சொன்னப்ப அவன் உங்களுக்குள்ள நடந்துட்ட மனக்கசப்பைப் பத்தி எதுவும் சொல்லலை. எங்கிட்ட வந்து அவாளுக்கு எதுவும் தெரியக் கூடாதுன்னான். நீயும் அவனை மன்னிக்கணுமாம். இன்னைக்கு உன்கூட டெலிபோன்ல பேசறேன்னிருக்கான்.''

அவன் சொல்லிக்கொண்டிருந்த போதே தொலைபேசி மணியடித்தது.

''யெஸ்?' என்றாள் வாணி கடுமையாக.

''வெரி வெரி ஸாரி, வாணி!''

"நோ! ஐம் நாட் அட் ஆல் இன்டரெஸ்டெட். ப்ளீஸ் டிஸ்கனெக்ட். உங்கப்பாவும் அம்மாவும் இங்க வந்து பேசினா என்ன நடந்ததுங்கிறதை யெல்லாம் நான் விவரமாச் சொல்லிடறதா யிருக்கேன். உங்களுக்குத்தான் அவமானம் குட் பை!''

வாணி ஒலிவாங்கியை வைத்துவிட்டாள் மறுநிமிடமே மறுபடியும் மணியடித்தது. வாணியே எடுத்தாள்.

''வாணி! நான்தான் ஸாரின்னுட்டேனே?''

''சரி. நான் உங்களை மன்னிச்சுட்டேன். ஆனா அதுக்காக நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு இல்லை. தயவு செஞ்சு மறுபடியும் என்னோட பேச முயற்சியெதுவும் பண்ணவேண்டாம். இனி உங்களுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!''–வாணி கோபத்துடன் ஒலிவாங்கியை வைத்தாள்.

அப்போது அங்கு வந்து வியப்புடன் ஏறிட்ட மேரி ஜார்ஜிடம் எல்லாவற்றையும் விவரமாக வாணி தெரிவித்தாள். ஒரு பெருமூச்சை உதிர்த்தபின்

"நீ சரியாகத்தான் முடிவெடுத்தாய், என் அருமை மகளே! அவன் உனக்குத் தகுதியானவன் அல்லன்! தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்றே என்று மகிழ்ச்சியடை! வேறு நல்ல கணவன் கிடைப்பான்!'' என்று மேரி ஜார்ஜ் அவளைத் தேற்றினாள்.

ஆனால் குமார் இன்னது நடந்தது என்பதைத் தன் பெற்றோரிடம் அதற்கான சமயம் வரும்போது மட்டுமே தான் சொல்ல இருப்பதாக வாணியிடம் தெரிவித்தான். அதற்கு அவன் கூறிய காரணம் ஒரு வேளை வாணி தன் மனத்தை மாற்றிக்கொள்ளக் கூடும் என்கிற நம்பிக்கை தனக்கு இருந்தது என்பது! அதைக் கேட்டு வாணி சிரித்தாள். – இதையெல்லாம் வாணி அன்றே சாருமதியிடம் தெரிவித்தாள்.

... அடுத்த வெள்ளிக்கிழமையன்று நாகநாதனும் பார்வதியும் வாணியின் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். வாணியைத் தங்கள் மருமகளாக ஏற்க அவர்கள் தயாராக இருப்பதையும், வரதட்சிணை வேண்டாமென்றும், திருமணத்தை ஒரு கோயிலில் எளிமையாகச் செய்தால் போதுமென்றும், அந்தச் செலவைக்கூடத் தாங்களே ஏற்பதாகவும் அவர்கள் சொன்னதைக் கேட்டு அம்புஜம் மனங்கொள்ளாத மகிழ்ச்சியில் கண்ணீர் பெருக்கினாள். 'உங்க சம்பந்தத்துக்கு நாங்க குடுத்து வெச்சிருக்கணும்!' என்று புலம்பித் தீர்த்தாள்.

அப்போது வாணி அடுக்களையிலிருந்து வெளிப்பட்டாள். கொஞ்சமும் தயங்காமல் நாகநாதனையும் பார்வதியையும் நோக்கி, "மாமா! மாமி! என்னை மன்னிச்சுடுங்கோ! உங்க பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க என்னால முடியாது! குமாரைக் கேளுங்கோ. என்ன காரணம்கிறதையெல்லாம் அவன் விவரமா உங்களுக்குச் சொல்லுவான்!''' என்றாள்.

"என்னடி இது?அறிவு கெட்டவளே!" என்று கூவியபடி அம்புஜம் அவள் மீது பாய்ந்தாள். அனந்தராமன் அவளைத் தடுத்து உள்ளே இழுத்துப் போனார். நாகநாதனும் பார்வதியும் திகைப்புடன் எழுந்து சென்றார்கள். அதன் பிறகு சாருமதி நடந்தவற்றைத் தன் பெற்றோருக்குத் தெரிவித்தாள்.

"அதான் அந்தப் பிள்ளை மன்னிப்புக் கேட்டுட்டானோல்லியோ! இதுக்கு மேல ஓர் ஆம்பளை தழைஞ்சு வருவானா என்ன! உனக்குத் திமிருடி. நாலு எழுத்துப் படிச்சுட்டாலேபோறும், பொண்ணுகளுக்கு அகம்பாவமும் ஆணவமும் வந்துடறது. அதுல வேற சம்பாதிக்கிறா! கேட்பானேன்! அடியே! இத பாரு. இது நம்மைத் தேடிவந்திருக்கிற அதிருஷ்டம். இப்படி ஒரு அதிருஷ்டம் யாருக்கும் வந்ததா நான் கதையில கூடப்படிச்சதில்லை. வலிய வர்ற சீதேவியைக் காலால உதைச்சுத்தள்ளாதடி!'' என்ற அம்புஜம், 'நான் இப்பவே அவாத்துக்குப் போய் மன்னிப்புக் கேட்டுட்டு வறேன். இவ அவனைத்தான் பண்ணிக்கப் போறா!'' என்று கூவிவிட்டு, "வாங்கோன்னா! எதுவுமே பேசாம பிரமை தட்டிப் போனமாதிரி உக்காந்துட்டேளே! கிளம்புங்கோ!'' என்று அனந்தராமனையும் அவசரப்படுத்தினாள்.

"இதோ பார், அம்புஜம்! வாழ்க்கைப்படப்போறவ அவ! இதுல நாம தலையிடக்கூடாது. அந்தப் பிள்ளை – இவ சொல்றாப்ல நாளைக்கு



'பார்ன்' (Barn) என்னும் ஒருவகை ஆந்தைகள் தனது இரையான எலியை வெகுவேகமாகப் பாய்ந்து கவ்விச் செல்லும். மரக்கிளையில் உட்கார்ந்திருக்கும் இவ்வகை ஆந்தை பனிரெண்டரை அடிகள் கீழே உள்ள எலி கீச்சிடும் ஒலியைக் கேட்க அரை விநாடிதான் ஆகுமாம். உடனே பாய்ந்து எலியைக் குறிதவறாமல் கவ்விச் செல்லும். பாயும் போது ஆந்தை தனது சிறகுகளைப் பாய்ச்சல் வேகத்துக்கு ஏற்ற மாதிரி உருவம், அளவு அமைத்துக் கொள்ளுமாம்.

அபாண்டமா என்னத்தையானும் சொல்லி இவளைக் கஷ்டப் படுத்தமாட்டான்கிறது என்ன நிச்சயம்?''

''இவ பாட்டு, கூத்துன்னு மேடையில ஏறி நாலு ஆம்பளைகளோட உக்காந்தாத்தானே அந்தப் பிரச்னை வரப்போறது! இவ பாட்டுக்கு அடக்க ஒடுக்கமா, குடும்பப் பொண்ணா லட்சணமா, ஆத்திலே சாமிக்கு முன்னால மட்டும் உக்காந்து பாடிண்டிருந்தா என்ன பிரச்னை வரப்போறது? இப்ப நானில்லையா? எனக்குந்தான் பாடத்தெரியும்!''

''ரைட்! ஆனா அதை விருத்தி பண்ணிக்க முடியாம போயிடுத்தேங்கிற ஏக்கமும் ஏமாற்றமும் உனக்கு இருந்ததா இல்லையா?''

''அப்படியே இருந்தாலும் உங்களுக்கு அதிலே இஷ்டமில்லைன்னா நான் மேடையில உக்காந்து பாடத்தான் கூடாது. வாங்கோ இப்பவே. இது மாதிரி ஒரு இடம் சொப்பனத்துல கூடக் கிடைக்காது!'

அனந்தராமன் அசைய மறுத்துவிட அம்புஜம் அழத்தொடங்கினாள்..

''குமார் அவனோட அப்பா அம்மாகிட்ட உடனே சொல்லியிருந்தா அவாளோட இந்த வருகையைத் தவிர்த்திருக்கலாமோல்லியோ? சொல்றேன்னு தானே உங்கிட்ட சொன்னான்? ஏன் சொல்லலை?'' என்று சாருமதி வாணியிடம் விசாரித்தாள்.

''அதை அவன்கிட்டதான் கேக்கணும். இந்த மாதிரி அக்கப்போரெல்லாம் வேண்டாம்னுதான் நான் உங்கப்பா அம்மாகிட்ட எல்லாத்தையும் சொல்லிடுன்னு சொல்லி வெச்சிருந்தேன். அவன் சொல்லியும் அவா தெரியாத மாதிரி வந்தாளா, அல்லது அவன் சொல்லவே இல்லையான்னு தெரியலையே? அவனைக் கேட்டாத்தான் விஷயம் தெரியும். நாளைக்குக் கேக்கறேன்'' என்றாள் வாணி.

மறுநாள் காலை அவனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாணி விசாரித்தாள். தான் சொல்லிவிட்டதாகவும், ஆனால் ரவி தான் மன்னிப்புக் கேட்டுவிட்டதால் போய்ப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்கள் வந்ததாகவும் விவரம் கூறினான். இதையும் உடனுக்குடனாக வாணி சாருமதிக்குச் சொன்னாள்.

... அம்புஜம் அழுத கண்களோடு இரண்டு நாள்கள் வளைய வந்ததன் பிறகு அழுவதை நிறுத்தினாள். வாணியுடன் இயல்பாகப் பேசுவதையும் நிறுத்தினாள். அவள் காதுபட நிறையவே திட்டினாள். அனந்தராமன் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டாரென்பது வெளியே தெரியவில்லை. ஆனால் ஒரு வாரத்துக்குள் அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். 'எல்லாம் உன்னால் வந்த வினை!' என்று அம்புஜம் துளியும் ஈவிரக்கமின்றி அதற்கும் மகளைச் குற்றஞ்சாட்டினாள்.

அம்புஜத்தின் அன்பற்ற நடவடிக்கைகளால் நொந்துபோயிருந்த வாணியின் மனத்துக்கு அந்த நேரத்தில் ஜார்ஜின் ஆதரவும் அன்புமே ஒற்றடமாக உதவின என்பதை இப்போது சாருமதி நினைவு கூர்ந்தாள்.எவ்வளவு மோசமான நாள்கள் அவை!

பக்கவாதத்தில் படுத்துவிட்டதால் அனந்த ராமனுக்கு வேலை போய்விட்டது. சாருமதிக்கும் வேலை கிடைப்பேனா என்றது. வாணியின் சொற்ப சம்பாத்தியத்தில் உயிர்வாழவேண்டிய நிர்ப்பந்தம் அந்தக் குடும்பத்தை வாட்டியது.



இந்த எலி இனத்தின் பெயர் "அமெரிக்கன் பிக்கா" என்பது. இது குட்டி போட்டு பாலூட்டும். கர்ப்பமுற்று 30 நாட்களில் குட்டிகளை ஈனும். அமெரிக்க நாட்டு ராக்கி மலை தொடர்களில் வசிக்கின்றன. இவற்றின் உடல் உஷ்ணம் 104 டிகிரி (ஃபாரன்ஹீட்). இந்த பிக்கா எலிகள் ஆபத்துவரும்போது கிரீச்சிட்டு உஷார்படுத்துமாம். அவ்வமயம் இவற்றின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுக்கும்.



மிகப்பெரிய கிளை; ஒரே கிளை! ஒரு கிளையில் அதிக நீளமான இலை! இது பிரேசில் காட்டுக்காடுகளில் உள்ள "பிலோ டெண்டரான்" என்னும் மரங்களில் வளருகிறது. உலகில் வேறெங்கும் அந்த மரங்கள் இல்லை. அவற்றின் கிளை 9 அடிநீளம். இலைகள் ஒவ்வொன்றும் நடுநரம்பு 9 அடி நீளமும், 7 அடியகலமும் உள்ளது. அவற்றின் அருகே யாரும் எதுவும் நெருங்கமுடியாது. 114 டிகிரி (F) வெப்பத்தை வெளிப்படுத்திய வண்ணம் இருக்குமாம்.

அந்தக் கால கட்டத்தில் தான் மற்றுமொரு திருப்பம் அவர்களது வாழ்க்கையில் நிகழ்ந்தது.

அனந்தராமனின் அண்ணன் மகன் – பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் உயர்ந்த பதவியில் இருந்தவன் – ஒரு திருமணத்துக்காக மதுரைக்கு வந்தவன் – தற்செயலாக அம்புஜத்தை மீனாட்சியம்மன் கோயிலில் சந்தித்தான். அண்ணன் தம்பிகளுக்குள் அவ்வளவாக அன்பான உறவில்லையாதலால் தொடர்பு விட்டுப் போயிருந்தது. அதிலும் அனந்தராமனின் அண்ணன் இறந்து பத்தாண்டுகளுக்கும் மேலாகி விட்டிருந்ததால் அவர் மகன்களுடன் அந்தக் குடும்பத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லாது போயிற்று.

மைத்துனர் மகன் சியாமசுந்தரைத் தன் வீட்டுக்கு அழைத்தாள் அம்புஜம். நல்ல செயலுள்ளவனாய்த் தெரிந்த அவன் தங்களுக்கு ஏதேனும் உதவிசெய்யக்கூடும் என்கிற ஆசையும் அவளது அழைப்புக்கு ஒரு காரணம். தன் சித்தப்பா அனந்தராமனின் வீட்டில் சிறுவயதில் ஓராண்டுபோல் தங்கியிருந்தவன் சியாமசுந்தர். அவரிடம் படிப்புச் சொல்லிக்கொண்டவன். தன் சித்தப்பா மீது அவனுக்குக் கொஞ்சம் பாசம் இருந்தது. இப்போது சித்தி அழைத்ததன் பேரில் அவளுடன் வந்தான்.

குடும்பத்து நிலைமையைக் கண்டு வருந்தினான். அம்புஜத்திடம் ஆயிரம் ரூபாய் கொடுத்தான்.

"வாணியை என்னோடு பம்பாய்க்கு அனுப்பி வெச்சுடுங்கோ சித்தி! அங்க அவளுக்கு நல்ல வேலையாத் தேடித்தர நானாச்சு. அவ எங்க குடும்பத்துலயே இருந்துக்கலாம். சாப்பாட்டுக்கெல்லாம் பணம் தரவேண்டியதில்லை. முழுச்சம்பளத்தையும் – தன் கைச்செலவுக்கு வெச்சண்டது போக – உங்களுக்கு அனுப்ப முடியும். இங்க உக்காந்துண்டு நூறுக்கும் நூத்தம்பதுக்கும் ஏன் அல்லாடணும்?" என்று அவன் சொன்னபோது உடனே எந்த விடையும் சொல்ல முடியாமல் எல்லாருமே குழப்பத்தில் ஆழ்ந்தார்கள்..

ஆனால் வாணி, "ரொம்ப தேங்க்ஸ் உங்களுக்கு. நான் உங்களோடவே பம்பாய்க்கு வந்துடறேன்''' என்றாள் கொஞ்சமும் யோசிக்காமல்.

மேரி ஜார்ஜ் சாருமதியை வாணியின் இடத்தில் வேலைக்கு அமர்த்திக் கொண்டாள். அவள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து இரண்டுமே கற்றிருந்ததால் அவளுக்கு இன்னும் அதிக உதவியாக இருந்தது. சம்பளத்தையும் இருபது ரூபாய் அதிகப்படுத்தினாள்...

அவள் புறப்பட்ட நாள் சாருமதியின் நினைவில் பசுமையாக இருந்தது. அம்புஜம் ஓவென்று அழுதபின், "போன இடத்துல இது மாதிரி இன்னொரு சம்பந்தம் வந்தா அசட்டுத்தனமா நான் பாடுவேன் கொள்ளுவேன்னெல்லாம் நிபந்தனை விதிச்சிண்டிருக்காதேடி! பொண்ணு களுக்குக் கல்யாணம்தான் வாழ்க்கையிலே முக்கியம். மத்ததெல்லாம் ரெண்டாம் பட்சந்தான்! என்று அறிவுரை சொன்னாள்.

கிளம்புகிற நேரத்தில் வாக்குவாதம் வேண்டாமென்று எண்ணியதாலோ என்னமோ வாணி பதில் சொல்லவில்லை..

பம்பாயையடைந்த மறுமாதமே வாணிக்கு நல்ல தொழிற்சாலையொன்றில் வேலை கிடைத்து

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு திறவுகோல்

சிறப்பு அம்சங்கள்

- சக்தி சுகர்ஸ் கரும்பு சாகுபடியில் புதுமையான தொழில் நுட்பத்தைப் புகுத்தி அதன் மூலம் விவசாயிகள் கூடுதல் கரும்பு மகசூல் பெறவும் (அதாவது ஏக்கர் ஒன்றுக்கு 28 டன்களாக இருந்த கரும்பு விளைச்சல் 45 டன்களாக உயரவும்) ஏக்கர் ஒன்றுக்கு ரூ.10,000/-க்கு மேல் கூடுதல் வருமானம் பெறவும் வழி வகுத்துள்ளது.
- சக்தி சுகர்ஸ் நிறுவனம் தமது ஆலைப்பகுதியில் சுமார் முப்பதாயிரம் விவசாயிகளுக்கு (இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறிய மற்றும் குறு விவசாயிகள்) ஆண்டு ஒன்றுக்கு ரூ.120 கோடி தொகையை கரும்பு விலையாக அளித்து அதன் மூலம் கிராம வளர்ச்சிக்கு ஒரு பெரும் உந்து சக்தியாக விளங்குவதுடன் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கிராமப்புறக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றது.
- சக்தி சுகர்ஸ் தரத்தால் உயர்ந்த ஏற்றுமதிக்கு உகந்த சர்க்கரையை உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது.
- சக்தி சுகர்ஸின் வார்ப்பகம் நமது நாட்டின் மோட்டார் வாகனத் தொழிலுக்கு தேவைப்படும் சிறந்த ரக எஸ்.ஜி.கிரே அயர்ன் காஸ்டிங்குகளைத் தயாரித்து வருகிறது.
- சக்தி சுகர்ஸ் பல கிராம அபிவிருத்தி திட்டங்களைத் தோற்றுவித்துள்ளது. (அ) சக்தி மேல்நிலைப்பள்ளி கிராமப்புற குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்கும் (ஆ) சக்தி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி இளைஞர்களின் தொழிற்கல்வி மேம்பாட்டிற்கும் (இ) வி.எம். கைலாசம் மருத்துவமனை இந்தப் பகுதி மக்களின் மருத்துவம் மற்றும் சுகாதார நலனையும் பேணி வளர்க்கிறது.
- சக்தி சுகர்ஸ் தனது தரமான வெள்ளைச் சர்க்கரையின் மூலம் கோடிக்கணக்கான இல்லங்களை தமது இன்சுவையால் மகிழ்விக்கிறது. சக்தி சுகர்ஸ் வருகின்ற ஆண்டுகளில் பல பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாற்ற உறுதி பூண்டுள்ளது.

பதிவு தலைமை அலுவலகம் :

சக்தி சுகர்ஸ் லிமிடெட்
180, ரேஸ் கோர்ஸ் சாலை,
கோயமுத்தூர் - 641 018.

•

தொழிற்சாலைகள்

யூனிட் 1 டிஸ்டிலெரி
சக்தி நகர் - 638 315,
பெரியார் மாவட்டம், தமிழ்நாடு.

யூனிட் 2
கண்ணாரிருப்பு-மாத்தூர்,
படமாத்தூர்-623 560, சிவகங்கை,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்,
தமிழ்நாடு.

யூனிட் 3 டிஸ்டிலெரி,
அரிப்பூர் கிராமம்,
கொரியன் அஞ்சல் - 759 013,
தென்கனால் மவாட்டம், ஒரிசா மாநிலம்

யூனிட் 4
பரம்பகார், கனாபால் அஞ்சல் - 754 031,
கட்டாக் மாவட்டம், ஒரிசா மாநிலம்

வார்ப்பகம்
முக்காசி பல்லகவுண்டன் பாளையம்
பெரியார் தாலுகா - 638 056,
பெரியார் மாவட்டம், தமிழ்நாடு.

சோயாயூனிட்
மார்ச்சிநாய்க்கன் பாளையம்,
அம்பராம்பாளையம் அஞ்சல்,
பொள்ளாச்சி - 642 103, தமிழ்நாடு.

ட்டது. அரசு சார்ந்த தொழிற்சாலை அது. சன்னையிலும் அதன் கிளை இயங்கியதால், காஞ்ச நாளில் அவள் சென்னைக்கு மாற்றிக்கொள்ள வழிசெய்வதாக சியாம சுந்தர் றினான்.

எடுத்த எடுப்பில் அவளுக்கு 750 ரூபாய் மாதச் ம்பளம். அந்த நாளில் அது பெரிய தொகைதான். தில் அறுநூற்றைம்பதைச் சுளையாக அவள் ம்புஜத்தின் பேருக்கு அனுப்பிவைத்து விடுவாள். வ்வொரு முறை பணம் வரும் போதும் ம்புஜத்தின் விழிகள் கலங்கும். ''அந்தக் காழந்தைக்கு என்னிக்குத்தான் விமோசனமோ நரியலையே!'' என்பாள். சாருமதிக்கு எரிச்சலாக ரும். ஆனால் ஒன்றும் சொல்ல மாட்டாள்.

வாரந்தவறாமல் வாணியிடமிருந்து ாருமதிக்குக் கடிதம் வரும். அப்பாவைப் பற்றிய வலைதான் அதில் மிகவும் அதிகமாய்த் தானிக்கும். ஒரு கடிதத்தில், தான் அவ்வப்போது பரிநேர ஊழியம் செய்வதாகவும் அதில் ாதாமாதம் கிட்டத்தட்ட இருநூறு ரூபாய் டைப்பதாகவும் அதில் நூறு ரூபாயைச் சம்பளம் ாங்கிக் கொள்ளாது பாட்டுக் கற்றுக்கொடுத்த ந்தரபாகவதருக்கும், இன்னொரு நூறு ரூபாயை வெத்திலைப்பட்டி ஏழைப் பாட்டு வாத்தியாருக்கும் னுப்பி வருவதாகவும், அந்த விஷயம் ம்மாவுக்குத் தெரிய வேண்டாமென்றும் வாணி றிப்பிட்டிருந்தாள். மாதா மாதம் என்று ல்லாவிட்டாலும் அவ்வப்போது முடிகிற பாதெல்லாம் அனுப்புவதாக இரண்டு சிரியர்களுக்கும் தான் எழுதியுள்ளதாக வள் தெரிவித்திருந்ததைப் படித்துச் ாருமதி வாணியைப் பற்றிய பெருமையிலும் பெருமிதத்திலும் ஆழ்ந்தாள்.

...எட்டு மாதங்கள் கழித்து வாணி ஒரு வார விடுப்பில் மதுரைக்கு வந்தாள்.

நிறமிழந்து, மெலிந்து, முகத்தில் மலர்ச்சி குன்றியிருந்த அவளைப் பார்த்து அம்புஜம் திடுக்கிட்டுப் போனாள். சாருமதியைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை.

வீட்டினுள் நுழைந்ததுமே, ''அப்பா எப்படி



முதல் முதல் 'ஜேம்ஸ் பாண்ட்' நடிகர் யார்? பிரிட்டன் நாட்டுத் துப்பறியும் ஏஜெண்ட் '007' யார்? பிரபலநடிகர் 'ஸீன் கான்னரி' அல்ல. 1950ஆம் ஆண்டு. ஒரு டீவி தொடரில் நடித்தவர். அமெரிக்க நடிகர். அவர்தான் முதல் முதல் ஜேம்ஸ் பாண்ட்டாக நடித்தவர். அவர் பெயர் பேர்ரி நெல்சன். (Barry Nelson)

இருக்கா?'' என்பதுதான் அவள் கேட்ட முதல் கேள்வி. அனந்தராமன் மருந்துகள் உட்கொண்டு வந்ததால் கொஞ்சம் போல் தேறியிருந்தார். சுவரைப் பிடித்தபடி நடக்கத் தொடங்கி யிருந்தார். அவரும் வாணியைப் பார்த்துப் பதறிவிட்டார். ''என்னம்மா, வாணி! இப்படி இளைச்சுக் கறுத்தும் போயிட்டே! சந்தோஷமா யில்லையா நீ அங்கே?'' என்று இழுத்து இழுத்து அவர் கேட்டதற்கு, வாணி செயற்கையாகச் சிரித்த சிரிப்பும் சாருமதிக்கு இன்றளவும் ஞாபகம் இருந்தது.

''அதெல்லாமில்லைப்பா. வேலை ரொம்ப அதிகம். கசக்கிப் பிழிஞ்சுடறா. எழுநூத்தம்பது ரூபாயைச் சும்மா தூக்கிக் கொடுத்துடுவாளா என்ன!'' என்றாள்.


ஆனால் அந்தப் பதிலில் சாருமதிக்கு மட்டும் நம்பிக்கை விழவில்லை. முதலில் மேரிஜார்ஜ் வீட்டுக்கு இருவரும் போனார்கள். மேரிஜார்ஜ் கூட வெளிப்படையாக அதிர்ந்தாள். 'ரவியுடனான உறவு முறிவை அவள் பெரிதாக எடுத்துக்கொண்டு விட்டாளோ?' என்று கூட விசாரித்தாள்.

"கொஞ்ச நாள் அது என்னை வதைத்தது உண்மையே, மிஸஸ் ஜார்ஜ்! ஆனால் இப்போதில்லை. எனக்கு வேலை அதிகம்'' என்று அவள் சொன்ன பதிலை இருவரும் நம்பவில்லை.

(தொடரும்)

துன்பம் கண்டு துவளாதவர்

கே.சி.லட்சுமிநாராயணன்



தியாகி சுந்தரவரதனின் தோளில் கையை வைத்து அவரை அணைத்தவண்ணம் இருப்பவர் தலைவர் காமராஜ் அவர்கள்.

ஆங்கிலேயரின் பிடியிலிருந்து இந்தியா விடுதலை பெறுவதற்காக நடைபெற்ற வியக்க வைத்த அறவழிப் போராட்டத்தின் போது, காந்தியடிகளின் கட்டளை களையும், போதனைகளையும், அறிக்கைகளையும், பல இலட்சம் மக்கள் இறைவனிடமிருந்து வந்தவையாகவே உளமார எண்ணிச் செயல்பட்டார்கள் என்பதை, இன்றைய தலைமுறையினர் நம்புவதற்கு மிகவும் சிரமப் படுவார்கள்.

"ஆனால், அவ்வாறு நடந்தது என்பது முற்றிலும் உண்மை" என்று சுந்தரவரதன், இந்தக் கட்டுரையாளருடன் ஒருமுறை பேசிக் கொண்டிருந்தபோது கூறினார்.

"நான் அதற்கு ஓர் உதாரணம். மகாத்மா காந்தி எனக்குப் பகவானாகவே விளங்கினார். அவர் என்ன கட்டளையிட்டார், என்ன அறிவுரையை வழங்கினார் என்பதை எதிர்பார்த்துக்கொண்டிருந்து, அவை வெளியானவுடனேயே அவற்றை ஏற்றுக்கொண்டு பணி புரிந்தேன் ... சென்னை கோகலே மண்டபத்தில் அவர் ஒருமுறை பேசினார். கேட்டுக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். விடுதலைப் பேரியக்கமான காங்கிரஸ் மகாசபையில் சேரவேண்டும் என்ற அந்தப் பேச்சைக் கேட்ட பிறகு உடனடியாக நான் முடிவு செய்தேன்" என்று சுந்தரவரதன் குறிப்பிட்டார்.

பாசத்திற்குரிய சொந்த ஊரான கேட்டவரம்பாளையம் கிராமத்திற்குச் செல்வதற்காக, அவ்வப்போது வாகனங்களில் இந்தக் கட்டுரையாளர் வாலாஜா, இராணிப்பேட்டை, ஆர்க்காடு, வேலூர் வழியாகப் பயணம் செய்ததுண்டு. அத்தகைய பயணங்களின் போது சில நேரங்களில் வாலாஜா தீனபந்து ஆசிரமத்தில் சிறிதுநேரம் தங்கியிருந்து, அங்கிருந்த விடுதலைப் போராட்டத் தியாகிகளுடன் உரையாடுகின்ற பெரும் பேறும் இந்தக் கட்டுரையாளருக்குக் கிடைத்ததுண்டு.

அவ்வாறு, சுந்தரவரதன் அவர்களுடன் ஒருமுறை பேசிக் கொண்டிருந்தபோதுதான் "காந்திஜி எனக்குப் பெருமானாகவே திகழ்ந்தார்'' என்று அவர் தெரிவித்தார்.

1906ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதியன்று வடார்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டையில் சேஷாசாரியார் என்ற வைதீக வைணவரின் புதல்வராகச் சுந்தரவரதன் தோன்றினார். சேஷாசாரியார் கல்வி நிறுவனத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார். அரசுக்கு அஞ்சிப் பணியாற்ற வேண்டிய வேலை என்றாலும், சேஷாசாரியாரே தேசபக்தி மிகுந்தவராக - இந்தியாவில்

வெளிநாட்டவர் ஆட்சி கூடாது என்ற கருத்துக் கொண்டவராக இருந்தவர். நாட்டுப் பற்று சம்பந்தமாக தொடக்க நிலைக் கல்வியைத் தந்தையாரிடமிருந்து சுந்தரவரதன் பயின்றார்.

இளைஞர் சுந்தரவரதன் போலீஸ் துறையில் சேருவதற்கு விண்ணப்பித்திருந்தார். போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பதவியில் சேருமாறு அவருக்கு அரசாங்கத்திலிருந்து உத்தரவும் வந்து விட்டது. அந்த நிலையில், காந்தியடிகளின் சென்னை கோகலே மண்டப உரை. சுந்தரவரதனின் வாழ்க்கையின் திசையையே மாற்றி விட்டது.

அரசுப்பணியில் சேரவிருந்த அவர், அதை உதறிவிட்டு, அன்றைய அரசுக்கு எதிரான - அன்றைய அரசையே நீக்க வேண்டும் என்ற இயக்கத்தில் சேர்ந்து விட்டார்.

இந்திய விடுதலை இயக்கத்தின் நாகபுரிக் கொடிப்போராட்டம், சைமன் கமிஷன் பகிஷ்கரிப்பு, உப்புச் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமைக் கிளர்ச்சி, அந்நியத்துணிகள் விற்பனை எதிர்ப்புக் கிளர்ச்சி, கள்ளுக்கடை மறியல், 1940ஆம் வருட தனி நபர் சத்தியாக் கிரகம் ஆகியவற்றில் சுந்தரவரதன் மகிழ்ச்சியுடன் தீவிரமாகப் பங்கு கொண்டு சிறை சென்றார்.

சுந்தரவரதன் தவமிருந்த சிறைகளின் விவரங்களையும், கால அளவுகளையும் அவரது புதல்வர் டாக்டர் எஸ். சந்தானம் அவர்கள் இந்தக் கட்டுரையாளருக்கு கடந்த நவம்பர் மாதம் எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

21.1.1929 முதல் 20.1.1930 வரை வேலூர், திருச்சி சிறைகளிலும், 7.2.1931 முதல் 30.12.1931 வரை வேலூர் சிறையிலும், 11.2.1932 முதல் 2.1.1933 வரை வேலூர், பெல்லாரி சிறைகளிலும், இறுதியாக 25.1.1941 முதல் 5.7.1941 வரை சென்னை மத்திய சிறையிலும் அவர் தண்டனைகள் அனுபவித்தார் என்று, சந்தானத்தின் கடிதம் தரும் செய்தியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

இங்கே இரண்டு செய்திகளைக் குறிப்பிட வேண்டும். சுந்தரவரதன் பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்லர். அவர் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகச் சேர்ந்து விட்டதும், அன்றைய ஆட்சியாளர்கள் அவரது தந்தையார் சேஷாசாரியரின் ஆசிரியர் பதவியைப் பறித்து விட்டார்கள். சேஷாசாரியாரின் குடும்பத்திற்குப் பல தொல்லைகளும் விளைவிக்கப்பட்டன.

ஒருபுறம் தந்தைக்கு வேலை பறி போய்விட்டதாலும், மற்றொரு புறம் மைந்தர் வேலையில் சேர மறுத்து விட்டதாலும் உருவான சூழலைத் தந்தையும், புதல்வரும் துவளாமல் தாங்கிக் கொண்டனர்.

சுதந்தரப் போராட்டத்தின் போது, திலகர் தலைமையிலான காலத்திற்குப் பிறகு, நடந்த கிளர்ச்சியில் சிறை சென்றவர்களில், சமுதாயத்தின் உயர் நிலையைச் சேர்ந்தவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் சந்திக்காத கொடுமைகளையும், சித்திரவதைகளையும் சாதாரண மானவர்கள் என்ற பிரிவில் இடம் பெற்ற இலட்சக்கணக்கான தொண்டர்களும், தலைவர்களும் சந்தித்தார்கள்.


சுந்தரவரதன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திய சிறைகளில் அவர் அனுபவித்த கொடுமைகள், கேட்பவர்களை வேதனையின் விளிம்புக்கே கொண்டு போய் விடும்.

சக கைதிகளுடன் எந்த விதமான தொடர்பும் கொள்ள முடியாமல் வாடுவதற்காக விதிக்கப்படும் தனிக் கொட்டடிச் சிறைவாசம்; சிறையில் ஒரு தண்டனையாக பலாத்காரமாக வாய்க்குள் விளக்கெண்ணெயை ஊற்றுதல் ; கடுமையான வெயிலில் எந்த ஆடையும் இல்லாமல் மைதானத்தில் அணிவகுத்துச் செல்லுமாறு விதித்தல் ; மற்றொரு தண்டனையாக நிர்வாணமாக நிற்கவைத்து முதுகிலும், புட்டங்களிலும் கசையினால் அடித்தல் ; குண்டாந்தடியால் உடலின் பல பகுதிகளிலும் தாக்குதல் ; காலணியுடன் காலால் எட்டி உதைத்தல் ; நோய் தாக்கினால் சரியான சிகிச்சை தராமல் மிரட்டலுக்கு ஓர் ஆயுதமாக அதைப் பயன்படுத்தி நோய்வாய்ப்பட்ட கைதி துடிதுடிக்கச் செய்தல் - போன்ற கொடுமைகள் அனைத்தையும் சுந்தரவரதன் அவர்கள் அனுபவித்திருக்கிறார்.

எனினும், கொண்ட கொள்கையிலிருந்து அவர் இம்மியளவும் பிறழவில்லை என்பது, இன்றைய இந்தியர்கள் எளிதில் ஏற்றுக்கொண்டு ஜீரணிக்கவே முடியாத ஓர் உண்மை.

1925ஆம் ஆண்டில் சுந்தரவல்லி என்ற அம்மையாரைச் சுந்தரவரதன் திருமணம் செய்து கொண்டார். அண்ணல் காந்தியடிகளின் ஓர் உரையைத் திருமணமான சில நாள்களுக்குள் அவர் கேட்க நேர்ந்தது;

"நாம்தான் அடிமை இந்தியாவில் பிறந்து, அடிமை இந்தியாவில் வாழ்கிறோம். நமக்குப் பிறக்கக் கூடிய பிள்ளைகளும் அடிமை இந்தியாவில் வாழ வேண்டுமா? இந்தியா சுதந்தரம் அடையும் வரையில் குழந்தை பெற்றுக் கொள்ளவே மாட்டோம் என்று நாம் உறுதி கொண்டால் என்ன?'' என்று பெருமான் காந்தியடிகள் அந்த உரையில் கேள்விகளை எழுப்பினார்.



இது ஓர் அபூர்வமான காட்சி. தமிழகத்தின் மிகச் சிறந்த சில விடுதலைப் போராட்ட வீரர்களுடன் இந்திராகாந்தி அம்மையார். அவருக்கு வலப் புறத்தில் ஒரு சகோதரிக்கு அடுத்தபடியாக அமர்ந்திருப்பவர் சுந்தரவரதன்.

அவ்வளவுதான், இந்தியா விடுதலை பெற்ற நாடாக மிளிருகின்ற வரை குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதேயில்லை என்று சுந்தர வரதன் முடிவெடுத்து விட்டார். சுமார் 22 ஆண்டுகள் கடுமையான பிரமச்சரியத்தை அவர் பின்பற்றினார்.

1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இந்தியா சுதந்தரமடைந்து ஓர் ஆண்டு முடிந்த பிறகுதான் அவருக்கு ஒரு புதல்வர் பிறந்தார். அவர் சந்தானம் என்று பெயர் சூட்டப்பட்டார்.

காந்தியடிகளைக் கடவுளாகக் கருதிப் பின்பற்றிய ஓர் இளைஞரால் தான் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புலனடக்கத்துடன் வாழ இயலும் என்பதை சுந்தரவரதனைச் சுட்டிக்காட்டி, வாலாஜா தீனபந்து ஆசிரம அன்பர்கள் இந்தக் கட்டுரையாளரிடம் பலமுறை கூறியிருக்கிறார்கள்.

சுந்தர வரதன் சிறைகளில் சந்தித்த கொடுமைகளின் "பரிசாக" அவரைக் காச நோய் தாக்கியது. அவர் அதைப் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தார். அவரது வாழ்நாளின் பிற்பகுதியில் அவர் வாலாஜா தீனபந்து ஆசிரமத்தின் பொறுப்பில் அமர்ந்து பணியாற்றினார்.

இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது டில்லியில் "தாமிரப் பத்திரமும்", ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் சென்னைக் கடற்கரையில் "வெள்ளித் தட்டு" நினைவுச் சின்னமும், சுதந்தரப் போராட்டப் பெரும் வீரர் என்ற வகையில் சுந்தரவரதன் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

சுந்தர வரதன் சிறிது காலம் உடல் நலம் குன்றியிருந்தார். 3.2.1990 அன்று அவர் அமரர் ஆனார். அவரது நாட்டுச் சேவைக்கு உறுதுணையாக இருந்த மனைவி சுந்தரவல்லி அம்மையார் 17.3.1995 அன்று மரணம் அடைந்தார்.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு சுந்தரவரதன், "நமது ஆட்சி நடக்கிறது" என்ற எண்ணத்துடன், முறைகேடான வழிகளில் பொருள் திரட்ட முயலவில்லை, பெரிய மாளிகைகளை அவர் கட்டிக் கொள்ளவில்லை, தமது பிள்ளைக்காகப் பெரும் சொத்துகளை அவர் தீய முறையில் திரட்டவில்லை, வங்கிகளில் பெருந் தொகையை அவர் குவித்து வைக்கவில்லை. ●

அப்பா வாசனை

பா. சத்தியமோகன்

வீடு, பாதி மயானமாகி விட்டது

ழுந்தேன். "நானா... அப்பாவுக்கா?" டந்தேன். சிவகாமி அம்மன் கோயிலில் எதிர்பார்த்த நடமாட்டம் இல்லை. அதுவே ஆறுதல்தான். திணொரு மணி பகல். படிக் கட்டுகளின் சூடு உள்ளங்காலை எரித்தது. உள்ளத்தை எரித்த கேள்வி. நானா... அப்பாவுக்கா..." பரந்து அகன்று சுத்தமான சிமெண்ட் தரை. சிமெண்ட் பெயர்ந்த இடத்தில் சில பச்சைப்புற்கள். பிராகாரச் சுற்று இந்த வெறிச்சிலும் அழகு. மௌனம், தெய்வம் படரும் இடம் என மனது பூரணமாக நம்பினபின், மனம் ஒவ்வொன்றிலும் நுழைந்து பிரகாசிக்கிறதோ? வடக்கு மூலை கோபுரப் புறாக்கள் இறகு ஒலி டபடப கேட்டது. வெறுப்பாயிருந்தது. முன்பு ரசித்த புறாக்கள். ஆனால் இந்தக் கோயில் அப்பா நம்பிய இடம். அப்பா நம்பியே இடமே! நீ தான் என் தோழன். நீ தான் தீர்வு சொல்லும் துணை! என் புழுக்கத்திற்கு விசிறி.

மனம்

புத்தி

பிரக்ஞை

உயிர்

இன்னும் ஏதாவது உண்டா? அத்தனையும் உள்ளே எரிமலைக் குழம்பாய்ச் கட்டது. மறுபடி மறுபடி இதே கேள்வி. அந்தக் கேள்விக்கும் மரம் அறுத்து தூளாய்ச் சிதற வைக்கும் ரம்பத்தின் கூர் முனைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. சம்மணமிட்டு அமர்ந்தேன்.

குங்குமம் தோய்ந்தது போன்ற சிவப்புப் புடைவை. அம்மனுக்கு. அகன்று உற்றுப் பார்க்கும் கண்களில் என் மௌனத்தில் வடியும் - ரத்தத்தைப் பருகும் கூர்மை கருவறைச் சுவரில் மோதும் அகல்விளக்கின் மெல்லிய ஜோதி. அமைதி. அமைதி.

"நான் அப்பாவுக்குச் செய்ய னுமா?"

"அப்பாவுக்கு இது துரோகமா?"

"அப்பா ... என் பிரிய அப்பா ..."

"அப்..."

-ஓட்டுக்குள் தலையிழுக்கும் நத்தைபோல் என் வழுவழுப்பான நெகிழ்ந்த மனம், உள் புதைந்தது. காட்சிகள் இல்லை. எந்தப் பேச்சுமே இல்லை. ஒலி மறைந்த இடத்தில் எதுவும் வரவில்லை. எதுவும் போகவில்லை. வெற்று.

என்ன நடந்தது எனக்குள்?

கண் விழித்தபோது புது உலகம் போலும் மிரட்சி.

"ஏதோ பிரார்த்தனை போலிருக்கு ... அப்பா விஷயம்தானே...? ஒண்ணும் கலங்காதேயுங்கோ . . .'' செங்காவிப்பற்கள் தெரியச் சிரித்து,

---

பொன் விழா ஆண்டு - சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு ரூ.2000/- பெறும் சிறுகதை

இரண்டு சொட்டு விபூதியும் காய்ந்த வில்வ இலை இரண்டும் தந்து ; கறுப்பு முதுகு தெரிய, படியிறங்கிப் போய்க்கொண்டேயிருக்கும் குருக்கள் தெரிகிறார். வெறும் ஆறுதல் சொல்!

மனசு மீண்டும் புகையத் தொடங்கிற்று.

ஏதோ புகைக்குள் தரிசனமாகும் நெருப்பு போல ஒரு சொல் "எதுக்கும் இன்னிக்கு ராத்திரி வரை பார்ப்போம்'' மனசு சொன்னதா? சந்நிதியா? புரியவில்லை. எதுவும் புரியவில்லை, எது தான் புரிகிறது? அப்பா இப்படியெல்லாம் கோமாவில் படுப்பாரென்று புரிந்தா இருந்தது ...?

உச்சி சூரியன் தகித்தது. இன்னும் சூடாகிய கோயில் படிக்கட்டுகளில் இறங்கி, சந்நிதியை விட்டு வெளி யேறினேன்.

✪ ✪ ✪

அப்பா பேச்சில் சளசளா இல்லை. இளைத்த அருவிபோல் ஒரு தெளிவு. நகைச்சுவை நுரைக்க ஒரு சிலுசிலுப்பு. எதிராளி மனம் கீறுபடும் என்றால் மௌனம். அப்படிப்பட்டவர் பேச்சு நின்றதும் வீட்டுச் சுவர்கள் கூட

துக்கம் அப்பித் தெரிந்தன. அம்மாவோ, சுபாவமே பேசாத குணம். கொல்லைக் கட்டைச் சுவரில் காகம் கரைவது தவிர வேறு சத்தமில்லை வீட்டில். எச்சில் நுரைத்து கடைவாயில் ''ழ்ழ்...'' மட்டும் இரண்டுமாசமாக அப்பா பேச்சாக வரும். அதுகூட எப்போதாவதுதான்.

அப்பாவை முழுநேரம் கவனிக்கும் நிலை, கட்டாயமாகி விட்டது. திரவ ஆகாரம். மூக்குவழியாக அம்மா அத்தனை நிதானமாக ஊற்றுவாள்.

''இன்னும் இரண்டு பெரிய வெங்காய பஜ்ஜி சட்னியோட போடேண்டி...'' கேட்ட வாய் அது. இறுக மூடி விட்டது இன்று. அந்தக் கண்கள் மூடியிருக்கும் எனினும் அம்மா பேசிக்கொண்டே ஊட்டுவதைப் பார்க்கக் கொடுமையாக இருக்கும். உறவு ஆழம் அப்படி.

''இங்க... பார்... எல்லாம் படுக்கையிலேயே...?'' கத்துவேன். முகம் சுழிக்காமல் அப்பாவைப் புரட்டிப்போட்டு சுத்தம் செய்யும் அம்மாவோ நிதானம். அருவெறுப்பு துளியாவது...? ஊஹூம், கதை இப்படியே போகவில்லை.

பிரச்னை வெடித்தது. பக்கத்து வீட்டு அலமு அத்தையால் மட்டும் என்று சொல்ல முடியாது. படுக்கைப் புண் வரத் தொடங்கியதில்தான் சிக்கல். புறங்கழுத்திலிருந்து இடுப்பு வரைக்கும் பரவும் என்று நம்பவே அதிர்ச்சியாய் இருந்தது. பஞ்சும், டெட்டால் நீருமாய், ஒத்தி எடுத்து வேப்பிலை மஞ்சள் போட்டாலும் அந்த நாற்றம் போகவேயில்லை.

அத்தைக்கும் சரி, துக்கம் விசாரிக்க வந்துபோகும் உறவினருக்கும் சரி, சகிக்க முடியாமல் திண்ணையில் உட்கார முயன்ற போது முதலில் சங்கடமாயிருந்தது. பிறகு பழகிவிட்டது. மெல்ல மெல்ல...

-ஆனால் யார்யாரோ முதுகுப் புறம் பேசியதை டாக்டர் ராஜகோபாலனே - விடாமல் வைத்தியம் செய்து சைக்கிளில் அலுக்காமல், நாள் தப்பாமல் வீடு வந்து கொண்டிருந்த அவரே - சொன்னதுதான் அதிர்ச்சியாய் இருந்தது. நாற்றம் சகிக்க முடியாத அலமு அத்தையும் அப்போது என்னுடன் இருந்தாள்.

"இந்த எழுபத்தியெட்டு வயது கோமா ரெக்கவரி சாத்தியமில்லை. வீட்டுக்கும் சரி, அவருக்கும் சரி இந்த ஸ்லீப்பிங் டோஸ் கொடுத்து முடிச்சிடறதுதான் நல்லது.. என்ன சொல்றே...?" நான் பேசவில்லை.

"நில்லா உடம்பை
நிலையென்றே நேசிக்கும்,
பொல்லா நெஞ்சப்
புலையனேன் இவ்வுலகில்,
சொல்லா மனநோயால்
சோர்வுற்று அலையும்
அல்லல், எல்லாம் அறிவாய்
எழுத்தறியும் பெருமானே ..."

- கோயில் சுற்றுச் சுவர் அதிர யாரோ பாடிக்கொண்டு செல்வது தெரிந்தது. என் மனநோய்க் கூறை யார் அறிவார். மனமறிந்தே உயிர் போக்குவதா, அதுவும் நேசமிகு அப்பாவின் உயிராச்சே. எங்கேயிருக்கிறானோ எழுத்தறியும் பெருமான்?

இந்த இக்கட்டிலிருந்து தப்ப முடியுமா? அப்பா நீ சொல். நீ தானே குருநாதன்? நீ தான் எப்போதும் வழி சொல்லுவாய்.. உன் இறப்பு எனது தீராத பாவச்சுமையாய் முடியமோ ... உன் இறப்புக்கு உன்னிடமே யாசிப்பதா .. உயிரே .. நானா ... உனக்கா ... ஏதோ உருகிற்று.

கண்கள் கண்ணீரைச் சிந்தின.

❂ ❂ ❂

வியர்த்து விறுவிறுத்து தென்னங் கன்றுக்கு ஏழாவது குடமோ எட்டாவதோ ஊற்றும்போது எதிரே போய் நின்று "அப்பா ... டிப்ளமோ மார்க் ஷீட் ஒரிஜினல், ஃபைலோட காணாம போயிடுச்சுப்பா ...!" பயந்து கொண்டே சொன்னால் அவர் கோபப்படாமல் விசாரிப்பதே ஒரு தெம்பு.

"எப்டீடா ..?" வியர்வையைத் துடைத்தபடி துண்டு நெளியும்.

"மரத்தை வெட்டி ரோடுல போட்டு பஸ்ஸைக் கொளுத்தினபோது என் சர்டிபிகேட்டை ஃபைலோட விட்டுட்டேன் பஸ்ஸிலயே! ஏதோ கம்யூனல் பிராப்ளம். மறுபடி தேடப்போனா, டிரைவர் சீட் பின்பக்கம் கான்டக்ட் சர்டிபிகேட் கடைசியா எரிஞ்சு ... " பேச்சு வராமல் அழுதபோது அப்பா குரல் தைரியமாய் ஒலித்தது.

''டேய்! அந்தக் கச்சாத்தை நம்பியா நீ பொறந்தே ..?'' விடாப்படியாய் டூப்ளிகேட்டுக்கு எழுதிப்போட்டு, டெக்னிகல் போர்டில் பணம் கட்டி, எல்லா மதிப்பெண் சான்றுகளும் பெற்று ... செம்பூரில் இன்டர்வியூ ஏற்பாடு ஆனபோது ரயில்வே ஸ்டேஷன் சிமென்ட் படிகளில் ஒரு நண்பனின் வாஞ்சையுடன் அருகில் அமர்ந்து - தலைமுடி நீவி ...

"நீ என்ன வெளிதேசமா போறே ... இப்படி பயப்படறியே"

"தைரியத்துக்கு ஸ்கூலா இருக்கு?" அப்பாவிடம் எப்படியும் பேசலாம் என்ற திமிரில் கேட்பேன்.

"உனக்குன்னு ஒரு திறமையை வளத்துக்க முனையும்போதே அந்த இலக்கை அடையற தைரியமும் வரணும், வந்தே தீரும்னு நம்பிண்டே இரு. அந்த மனசுதான் ஸ்கூல், மனசே வாத்தியார் ..."

அவர் கொடுத்த தைரியம், ஹிந்தி தெரியாமலேயே பம்பாய்க்குப் போய், செம்பூர் பிரைவேட் கம்பெனியில் வேலை கிடைத்தது. காலம் ஓட ... அவர் கொடுத்த தைரியம் அவரையே இழக்கும்போது பனிக்கட்டியாய்க் கரைந்துதான் போயிற்று.


நாலுமுழ வேட்டியும், தொள தொள சட்டையும், தாடி படர்ந்த கவலைக் கன்னமுமாய் நடந்து கீழவீதி ராஜன் ஸ்டோர் கடக்கும்போது, கோரைமுடி சிலும்பியதை சைக்கிளில் மறித்தார் டாக்டர் ராஜகோபாலன்.

''மனசைத் தேத்தியிருப்பன்னு நினைக்கிறேன்.. ஆகவேண்டியதைப் பார், இந்தா ... உங்கப்பாவுக்கான மாத்திரைகள்'' - ஏதோ பெயர் போட்டிருந்தது. அலுமினிய உறை விறைப்பாக மாத்திரையை மூடியிருந்தது. நிரந்தர உறக்க மாத்திரைகள்!

"சரி டாக்டர்! இன்னிக்கு ராத்திரி கொடுத் ..... துடறேன்'' மனசு ஒருவிதமாய் களிமண் போல் காய்ந்தும் காயாத மாதிரியும் இளக்கத்தில் இருக்க, பதில் சொல் டாக்டரை அனுப்பியாச்சு. மனசி பிளேடு போட்ட மாதிரி அறுத்த நினைவுகள்.

கால் மடங்கி தலையே நிமிர் தாமல் சுருண்டுவிட்ட கன்று குட்டியைக் கொன்றுவிடுவ கருணையாம். ஏதோ சப்பைக் கட் உள்ளே ஓடியது. கருணையோ கழுத்தைத் திருகினாலும் அ வலியில்லையா ...? உயி இல்லையா? கருணையா ... கொலையா ...? எதை என் கர செய்யப் போகிறது ...?

தேரடித்தெரு திரும்பும் முன் செய்யப் போவதை உறுதி செய்தேன் ஆனால் இன்று இரவு வரை



ப்பாவின் படுக்கைப் புண் ரணத்தை ம்மாவை நகரச் சொல்லி) நானே சய்வேன் .. கடைவாய் எச்சில் ழுகலை அவர் கூறும் பதிலாய் னைத்து, அவர் ஓட்டி அடித்த ள்ளிக்கூடம் முதல், குளித்துக் ம்மானம் போட்ட திருமாந்துறைக் ணறு வரை ; எல்லாம் பேசப் பாகிறேன் ... கதவைச் சாத்திவிட்டு வர் மார்பில் தலை புரட்டுவேன். றுவயதில் நான் தூங்கியும், பேசிக் காண்டிருந்த அப்பாவும், நிலா ரவும் இனி வரப்போவதில்லை. அப்பா தூங்க வைத்த அதே இரவு ... ஆனால் இனி இரவு மைனஸ் அப்பா ஞாபகமாக அவர் பயன்படுத்தும் வெற்றிலைப் பெட்டிக்குள் பாக்கை றுக்கி நிரப்புவேன் ... அழுதுகொண்டே பேச்சு நடுவே, அங்கவஸ்திரம் உதறும் வலத் தோளில் நானே உதறி அணிவிப்பேன் அந்த அலங்காரத்துடனே அப்பாவுக்கு ஒன்பது மணி ஆனவுடன் ... கஞ்சியில் கலந்து .. எங்கள் உரையாடல் மௌனத்தில் முடியும் .. நிரந்தரமாக அவர் விழியை நான் மூடுவேன் ..."

புண்ணிலிருந்து பிய்க்கும் பிளாஸ்டராய் உரித்த புண்ணாய், ரத்தம் ஒழுகி நின்றது நினைவுகள். வலி. வலி.

தூரத்தில் பந்தற்கால் கீழிருந்து யாரோ ஓடி வருவது ... கிட்டே நெருங்க நெருங்க ... பாவாடைச் சிறுமி ஸ்ரீமதியா ...? அவளேதான். மூச்சு மேலும் கீழும் இரைந்தது.

"அப்பா போயிட்டார் ...!"

வெடித்த குரலோடு வேட்டி காலில் சுற்றும்படி விசிறியடித்து ஒரே ஓட்டம். தலை கலைந்து, மடக்குசேர்களில் கூட்டம் தாண்டி, பந்தல் தாண்டி ... மூச்சு நெரிந்தது.

அப்பா, எதையும் பாராத மௌனத்துடன் முன் அறையில் கிடத்தப் பட்டிருந்தார். இரு கால் கட்டை விரல்களில் துணிக்கட்டு. மூக்கில் பஞ்சு.

அந்த மூடின கண்களிலிருந்து ஏதோ கேள்வி :

"உன்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாத்திட்டேன் பாத்தியா?''

ஊதுவத்திப் புகை காற்றை இழைக்க, முதுகுப்புறம் யாரோ பேசினார்கள். இனிமேல் வீடு நாற்றமில்லாமல் இருக்குமாம்.

ஐயோ! எனக்கு அது வேண்டும். அந்த வாசனை இனி அறைவிட்டுச் செல்லுமோ ...? "அப்பா வாசனை, அப்பா வாசனை" என்று கத்திக்கத்தி மாரில் அடித்துக் கொள்ளும்போது இடப்பக்கச் சட்டைப் பையிலிருந்து தொப்பென்று மாத்திரை அட்டை வெளியே வந்து விழுந்தது.

உங்களுக்கு ஓர் ஆலயம்

வாழுங்கள்,வாழ வாருங்கள், வாழவையுங்கள், வையத்தை வாழ்த்துங்கள், வானோர் வாழ்த்த வாழுங்கள்.

மக்களினம் வாழ்வதற்காக, சுத்த சந்தோஷத்துடன் வாழ்வதற்காக, இயற்கையின் நியதியோடு வாழ்வதற்காகத் தோன்றியதே ஆஸ்ரமம். அதுவே தபோவனம் மனிதனிலிருந்து மனிதனை விலக்கி அவனை அருள் தெய்வமாக்கி, ஆனந்தத் திருக்கோலத்தில் அமர்த்தி எங்கும் அருள் மயமாய் நிற்க வைத்தலே ஆஸ்ரமத்தின் பணியாகும்.

இந்நோக்கோடு உலகத்து உயிர்கள் எல்லாம் என்றும் இன்புற்றுவாழ சாதகர்களுக்கு ஞானப் பயிற்சி அளித்து வந்தார். அதையே அவர்களுக்கு ஆக்ஞையாகவும் பிறப்பித்தார். சற்குரு மகராஜ் ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள் 31-08-1964-இல் மயிலாடுதுறையில் மகா சமாதி யடைந்தார். சற்குரு மகராஜ் சித்தர் சுவாமிகள் ஆணைப்படி தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள் வடக்கு நோக்கி பாண்டிச்சேரி வந்து 1965 ஜூலை 21லிருந்து ஒங்கார ஆஸ்ரமத்தின் மூலம் நிஷ்காமியப் பணியாற்றத் தொடங்கினார்.

பரிசுத்தம், பரிபூரணம்,பரசிவ ஐக்கியம் ஆகியனவே ஆன்மிகத்தின் படிகளாகும். சத்யம், தர்மம், நியாயமே இதன் அடிப்படை 'சந்தோஷம்' என்பதே ஆஸ்ரமத்தின் தாரக மந்திரம்.

மகாசித்தர் சுவாமிகளின் ஆக்ஞைப்படி மகாபலிபுரத்திற்குக் தெற்கே 15 கி.மீ.தூரத்திலுள்ள புதுப்பட்டினத்தில் சற்குரு ஞான சித்தர் ஆலயம் ஐந்தே மாதத்தில் எழுந்தது. தமிழகத்தின் 18 சித்தர்களும் அவருடனே எழுந்தருளியுள்ளார்கள். மருத்துவம், ஞானம், மந்திரம், வாதம், காயகல்பம், வாழ்வியல் முறைகள், இயற்கையோடு இணைந்து வாழுதல் ஆகிய முறைகளை நமக்குத் தந்தருளியுள்ளார். அவற்றை வெளிப் படுத்தி மனிதனை வாழவைப்பதற் காகவே இவ்வாலயம் எழுந்துள்ளது. இது ஒரு தபோவனம். ஞானிகள் ஆத்ம சாதகர்கள், நல்லோர்கள் இவ்வால யத்தில் தவம் செய்யலாம். இவ்வாலய சிறப்பு இங்கு பணத்திற்கு மதிப்பு கிடையாது. இவ்வாலயத்திலுள்ள சற்குரு நாதரைத் தரிசிக்க 10 படிகள் ஏறவேண்டும். சத்யம், தர்மம், நியாயம், நித்யம், மௌனம், பரசாந்தம், ஆத்மசாதனை, இயற்கையாதல்



(நெற்றிக் கண்திறத்தல்), ஸோகம், (திருச்சிற்றம்பலத்தில் பிரவேசித்தல்) வெட்டவெளி, பரம சந்தோஷம், சற்குரு தரிசனம், சாயுச்யம் ஆகியவற்றைக் குறிக்கிறது, இந்தப் படிகள் 3 படி இகத்திலிருந்து அங்கு செல்வதற்கு எஞ்சிய 10 படிகள் அதை இறைவனை அடைவதற்காக ஆண்கள் சட்டையைக் கழற்றிவிட்டு பஞ்சாட்சர ஜெபத்தை ஜெபித்துக் கொண்டே படி ஏற வேண்டும். மது மாமிசம் விலக்கியவர்கள் மட்டுமே இப்படியில் ஏறுவதற்குத் தகுதி பெற்றவர்களாவார்கள். அதற்கான பயன்களும் அவர்களுக்குக் கிடைக்கும். ஞானிகள், யோகிகள், ஆத்ம சாதகர்கள் அர்த்த மண்டபத்திற்குள் அனுமதிக்கப் படுவார்கள். கர்ப்பக் கிருகத்தில் சுவாமிகளின் பிரதம சீடர்கள் மட்டுமே கர்ப்பக்கிருக வினைகளை ஆற்று வார்கள். இத்தகைய ஆலயம் பாரதத்திலேயே முதன்மையானதாகும். இங்கு ஜாதி, மத, இனவேறுபாடு கிடையாது. இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்கள் மௌனத்தைக் கடைபிடிக்க வேண்டும். பஞ்சேந்திரியங்கள்



ங்க வேண்டும். பாரதத்தில் குரு
ம்பரைக்காக எழுந்த கோயில்
துவேயாகும். இக்கோயிலுக்கு
02.1998 அன்று மகாகும்பாபிஷேகம்
க் சிறப்பாக நடைபெற்றது. அன்று
லை 10 மணியளவில் சர்வமத சமரச
ார்த்தனை ஒன்று அனைத்து
த்தினரையும் வைத்து மிகச்
றப்பாக நடத்தப்பட்டது. பதினெண்
த்தர்கள் நூல்களை அழகுபடுத்தி
தற்குப் பூஜைகள் சிறப்பாக
ந்தன.

கல்லில் கடவுளைக் காணலாம். துபோல் கல்லால் கடவுளைக் ணலாம். கோயிலால் கோயிலைக் ணலாம். கோயிலால் கோயிலுக்குள் சல்லலாம். சகத்தில் சிவத்தைக் ணலாம். சிவத்தில் சகத்தைக் காணலாம். சிவத்தில் சிவமாகலாம். சற்குரு ஞானசித்தர் ஆலயம் மனிதனை அருள் மயமாக்குதற்கும், மனிதன் தன் வாழ்வைப் பூரணமாகப் புரிந்து கொண்டு அகண்ட பிரம்மாண்ட வெட்டவெளியின் ரகசியங்களைக் கண்டு இங்கிருந்தே இந்த சுத்த சந்தோசத்தை அனுபவித்துக் கொண்டு இங்கிருந்து அந்த வெட்டவெளியில் சந்தோஷத்தால் நிலைத்து என்றும் இறைவனாக வாழலாம். இது ஓர் ஆன்மீக சாதனைக் கோயில் கலியுகத்தின் புதிய தபோவனம். பக்தர்களுக்கு வைகுண்டம் என்று அழைக்கும் கைலாயம் வேதாந்திகளுக்கு பரப்பிரம்மம். இக்கோயிலுக்கு நிலையாக வருபவர்களுக்கு பிரம்ம தரிசனம் நிச்சயம் ஐம்புலன்கள் ஒடுங்க வாய்ப்பு உண்டு. அதர்ம வினைகள் குறையும். பாரதத்தின் பரசாந்த பேரமைதிக் கோயில் சற்குரு ஞானசித்தர் ஆலயமாகும். இது ஞானாமிர்தம் விளையும் இடம். இங்கு சாதனை செய்யும் பொழுது உள்ளே பஞ்ச அமிர்தம் ஊற்றெடுக்கும் லலாடம் திறக்கப்படும் உச்ச சுகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். கபால வாயில் திறக்கும். வெட்ட வெளியில் சங்கமம்.

சந்தோஷம், சந்தோஷம், சந்தோஷம்.

திருவிடைமருதூரார் ஸ்ரீ சியாமளா தேவி அம்மன் ஆலயம் திருப்பணி

தஞ்சாவூர் மாவட்டம் ருவிடைமருதூர் அருள்மிகு ஸ்ரீ பாமளா தேவி அம்மன் ஆலயம் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் ஸ்ரீமுகம் அளிக்கப்பட்டது. பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் திருக்கரங்களினால் 26.12.97 இல் பாலாலயம் செய்யப்பட்டது. மேற்படி ஸ்ரீ சியாமளா தேவி அம்மன் ஆலயம் ரூ.15/- லட்சம் மதிப்பீட்டில் பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் அவர்களால் திருப்பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. திருப்பணி விரைவில் முடிந்து அடுத்த தமிழ் ஆண்டு வெகுதான்ய வருடம் வைகாசி மாதம் மகா கும்பாபிஷேகம் நடத்தப் பூஜ்யஸ்ரீ பெரியவாள் உத்தரவிட்டுள்ளார்கள். சென்ற வாரம் ஸ்ரீ ஜெயேந்திரர் திடீரென திருவிடை மருதூர் விஜயம் செய்து திருப்பணி வேலைகளைப் பார்வையிட்டு திருப்பணி அதிவிரைவில் நடைபெற அருளாசி வழங்கினார்கள். ஸ்ரீ ஜெயேந்திரர் தனது பூர்வாச்ரமத்தில் திருவிடை மருதூர் திருமஞ்சன வீதியில் உள்ள சங்கரமடத்துப் பாடசாலையில்தான் பத்தாண்டுகள் வேதாத்யயனம் பயின்றார்கள் என்பது குறிப்பிடத்



தக்கது. ஆகையால்தான் பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் இப்புனிதத் திருப் பணியில் மிகவும் கவனம் செலுத்தியும் திடீரென விஜயம் செய்தும் திருப்பணிக் கமிட்டி யினருக்கு ஆலோசனைகளை வழங்கியும் ஆசீர்வதித்துக் கொண்டு இருக்கிறார்கள். இத்திருப்பணிக் கமிட்டியில் கும்பகோணம் பிரபல ஆடிட்டர் என். பஞ்சாபகேசன், சென்னைத் தொழிலதிபர் 'பரோபகரமணி' டெக்கான் என்.கே. மூர்த்தி, பின்னி ஆலைகள் டைரக்டர் ஜெனரல் ஆடிட்டர் எஸ். நடராஜன் சுந்தரம் பைனான்ஸ் ஜெனரல் எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் போஷகர்களாகவும் 'அமுதசுரபி' ஆசிரியர் விக்கிரமன் ஆலோசகராகவும் இடம் பெற்றுள்ளனர். இந்த ஆலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுப்பப்பட்டதாகும். நான்கு பெரிய மதிற் சுவர்களையும் நான்கு அழகிய பிராகாரங்களையும் கொண்ட இந்த ஆலயம் நாளடைவில் நலிந்து கர்ப்பக்கிரகம் மட்டும் பழுதடையாமல் ஸ்ரீ சியாமளா தேவி அம்மன் இதில் வீற்றிருந்து வேண்டிடும் பக்தர்களுக்கு வேண்டிய வரத்தை அளித்துக் கொண்டு அருள்பாலித்து வருகிறாள். இப்புனிதத் திருப்பணியில் அவரவர்களுடைய

சக்திக்கேற்றாற்போல் ச
பக்தர்களின் பங்கும் சேர வேண்
என்ற ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்
உத்தரவுக்கிணங்க இ
கண்ணுறும் பக்த கோடி
அனைவரும் தங்களால் இய
பேருதவியை எம். சந்திரசேக
தலைவர், திருப்பணிக் கமிட்டி
திருமஞ்சன வீதி, திருவிடைமரு
- 612 104 தஞ்சாவூர் மாவட்
என்ற முகவரிக்கு அனுப்பி வை
உதவி செய்யுமாறு இத்திருப்ப
கமிட்டியின் செயலா
ஆனந்ததாண்டவபுரம்
சுவாமிநாதன் அநேக கே
நமஸ்காரங்களுடன் வேண்
கொள்கிறார்.



'உரத்த சிந்தனை' - வாசக எழுத்தாளர்கள் சங்கத்தின் 175 ஆவது மாத நிகழ்ச்சி, படித்தவர்கள் பார்வையில் 'இலக்கியப் பீடம்' கவிதைகள் ஆகிய கருத்தாய்வு, கவியரங்க நிகழ்ச்சிகளாக நடைபெற்றது. திருநின்றவூர் வெ. பாண்டுரங்கன் அனைவரையும் வரவேற்றார்.

கருத்தாய்வு நிகழ்ச்சிக்கு திரு. விஜய திருவேங்கடம் தலைமை வகித்தார். 'இளம்பாரி' உ. கருணாகரன் முன்னிலை வகித்தார். பேராசிரியர் திரு. வ.வே. சுப்பிரமணியம், 'இலக்கியப் பீடம்' இதழ்களில் வெளியான கவிதை களைப் பற்றியும், தினமணி முதன்மை துணை ஆசிரியர் திரு.திருப்பூர் கிருஷ்ணன் சிறு கதைகளைப் பற்றியும், சென்னை வானொலி நிலையத் துணை இயக்குனர் டாக்டர் சேயோன் கட்டுரைகளைப் பற்றியும் கருத் துரைத்தனர்.

கவியரங்க நிகழ்ச்சிக்கு கவிஞர் பால.இரமணி தலைமை தாங்கி னார். தேர்வு செய்யப்பட்ட 15 கவிதைகளையும் கவிஞர்கள் அரங்கேற்றினர். அதில் மூன்று கவிதைகள் பரிசு பெற்றன.

கவியரங்க நிகழ்ச்சியில் கவிக் கொண்டல் மா. செங்குட்டுவன், சொ.பொ. சொக்கலிங்கம், புலவர் வரத கோவிந்தராசன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்வு செய்து சிறப்பித்தனர்.

கலைமாமணி விக்கிரமன் அவர்களின் ஏற்புரைக்குப் பிறகு

பின்னலூர் மு. விவேகானந்
நன்றி கூறினார். கவிஞர்
சாண்டில்யன் நிகழ்ச்சிகளை
தொகுத்து வழங்கினார்.

உரத்த சிந்தனையின் தலை
எஸ். வி. ராஜசேகர், பொ
செயலாளர் உதயம் ராம் ஆகியோ
நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்
செய்திருந்தனர். தொடக்கத்
பாரதி பணிச்செல்வர் பெ.சு. ம
பாரதியாரின் ஊழிக்கூ
பாடலைக் கம்பீரமாகப் பாடின




மாசி திருவாதிரையில் அவதரித்த ஸ்ரீ சுவாமிகளுக்கு 7.3.98 காலை ஆயுஷ் ஹோமம் மற்றும் பல நிகழ்ச்சிகள். பின்னர் சீனிவாசனுக்கும் அலர்மேல் மங்கைக்கும் கல்யாண உத்சவம். ஒரு சடங்கு விடாமல் அத்தனை வைபவங்கள்! கண் கொள்ளாக் காட்சி. பின்னர் திருப்பாவாடை நைவேத்யம், தேவலோகவாசிகளும், தேவதைகளும் வந்துவிட்டதைப் போல ஒரு தெய்விகச் சூழ்நிலை. பக்தர்கள் கண்களில் நீர்மல்க பகவானிடம் பரவசப்பட்டு நின்றனர். பக்தர்களுக்கும் பகவானுக்கும் இடையில் பாலமாக, படியாக விளங்கும் மகான் சீதாராம சுவாமிகளின் அருள் வதனம் பொழிந்த ஆசிகளையும் அவர் அருகே சகல பாக்ய சகதர்மிணியாக அமர்ந்து அருள்பாலித்த குருபத்னி தாரா தேவியின் ஆசிகளையும் பெற்று பக்தர்கள் மெய் மறந்தனர்.



அனைத்திந்தியத் தமிழ்
ழுத்தாளர்கள் சங்கம் புதுவை
நிலக் கிளையின் சார்பில்
டைபெற்ற தமிழ் எழுத்தாளர்
நாட்டில் கலைமாமணி
க்கிரமன் அவர்களுக்கு 'இலக்
யச் செல்வர்' பட்டத்தை
துவைத் துணை நிலை ஆளுநர்
தரு இராஜேந்திரகுமாரி
ஜாய் வழங்கிக் கௌரவித்தார்

புழுதி மண்ணில்

பொன்விழா ஆண்டு சிறுகதைப்போட்டியில்
இரண்டாம் பரிசு ரூ. 3,000/- பெறும் சிறுகதை



வாதூலன்

போத்தனூர்.. அங்கிருந்து டவுன் ஹால் வரை ஒரு பஸ். சற்றுத்தள்ளி நடந்து 7-ஆம் எண் பஸ்ஸைப் பிடித்து, ஏறி, காந்தி பார்க்கில் இறங்க வேண்டும். இறங்கி லாலி ரோடு பக்கம் செல்லாமல், ஆர்.எஸ்.புரம் சென்றால் ஒரு சிறிய நர்சிங் ஹோம் தென்படும்.

அங்கேதான் அம்மா படுத்துக் கொண்டிருக்கிறாள். உடலில் உள்ள ரணங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஆறி வருகின்றன.

"இப்போ பரவாயில்லை. விரைவில் குணமாயிடும்" என்கிறாள் நர்ஸ்.

நர்ஸ் பாலக்காட்டுத் தமிழில், "ஆத்யம் கொண்டு வர்ற அன்னிக்குப் பார்த்திருக்கணுமே.. ஓ!" சிலிர்த்துக் கொள்ளுகிறாள்.

அம்மா படுக்கையிலிருந்து எழுந்து உட்கார முயலுகிறாள். நான் குனிந்து ஏதோ சொல்ல வாயெடுக்கிறேன்.

"ஓ.. அது வேண்டாமாக்கும்!" .. நர்ஸ் என்னைத் தடுக்கிறாள். "கவலை வேண்டாம்... சரியாகிடும்."

சிரித்துக் கொள்ளுகிறேன், "கவலைப் படாதேங்கோ.. சரியாகி விடும்", இதே வாக்கியத்தை, டில்லியில் எத்தனை பேர் எத்தனை மொழிகளில், எத்தனை விதமாகச் சொல்லிக் கேட்டாகி விட்டது! அப்பா சிக்கலில் மாட்டிக் கொண்ட சமயம், அப்போது கட்டம் கட்டமாகத் தெரியும் ஜாதகத்திலிருந்து, குலுங்கும் சோழிகள் உள்பட எவ்வளவு பேரைப் பார்த்தோம்? எல்லாருமே பேசி வைத்துக் கொண்டாற் போல் சொன்னார்கள்.

"கவலைப் படாதேங்கோ. சரியாய்ப் போய் விடும்!"

சரி ஆகவில்லை. இதை யாரும் எதிர்பார்க்காததால் அதிர்ச்சி அடைந்தோம். ஆனால் தாத்தா மட்டும், மழை வரு முன்னர் எச்சரிக்கை மேகங்கள் தெரிவது போல, எப்போது டெல்லியில் அப்பா முக்கிய பதவி ஏற்றாரோ, அப்போதிலிருந்தே சொல்லிக் கொண்டு வந்தார்.

"ஜாக்கிரதைடா! ஜாக்கிரதை"

ஒரு நாள் பொறுக்க முடியாமல், பளிச்சென்று சொல்லியே விட்டார். "வேண்டாம்டா கங்காதரா (மற்றவர்களுக்கு ஆர்.ஜி.தர் - தாத்தாவுக்கு மட்டும் கங்காதரன்) கொஞ்சம் அடக்கி வாசிடா! ஒரு தரம் மாதிரி ஒரு தரம் இருக்காது!"

அப்பா கோபமாகத் திருப்பிச் சொன்னார். "இது என்ன சங்கீதக் கச்சேரியா அடக்கி வாசிக்க? என் குரல், பதவி, அந்தஸ்து எல்லாம் உசரத்திலதான் இருக்கும். அண்டர்ஸ்டாண்ட்?"

தாத்தா அப்படியே வாயடைத்துப் போய் மூலையில் உட்கார்ந்து கொண்டார். உள்ளே தனி அறையில், பேச்சும், ஆர்ப்பாட்டமுமாக ஒலித்தன.


"கங்கிராட்ஸ்.. ஆக்டிங் ஸி.எம்.டி.யாமே?"

"அடிஷனல் சார்ஜ், டூ இன் ஒன்!"

"மாமனார் பதவி வேற வரப் போகிறதா? த்ரீ இன் ஒன்!"

"அட! கங்கிராட்ஸ்"

மறுபடி கண்ணாடி டம்ளர் ஒலி - பாராட்டு - கேளிக்கை மயக்கம், கோடி ரூபாயை எட்டும் வியாபாரப் பேரங்கள், டம்ளர் ஒலியிலும், விஸ்கியின் மணத்திலும் முடிந்து கொண்டிருந்தன. விருந்து முடிய இரவு ஏகத் தாமதமாகி விட்டது. கார்கள் ஒவ்வொன்றாக விடை பெற்றன. "குட் பை!" "ஸீயூ" "ஆல் த பெஸ்ட்."



எனக்கு எழுந்திருக்கையிலேயே நாமதமாகி விட்டது. வனிதாவைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பு என்னுள். மூன்று மாதம் கழித்து, முழுமையாக ஆளப் போனாலும், இப்போதே கொஞ்சம் "ஒத்திகை" பார்க்க வேண்டுமென்ற ஆர்வம்.

தாத்தா என்னைத் தடுத்து நிறுத்தினார். "ஏண்டா சிவா! நீ படிக்கிற போது டிகிரி கிளாஸிலே இங்கிலீஷ் இருந்ததோ?"

எனக்கு எரிச்சல். அதைக் காட்டிக் கொள்ளாமல், "படிச்சதாக ஞாபகம்" என்றேன்.

"நீ Grey's Elegy படிச்சிருக்கையோ? ஒவ்வொரு பாட்டும் அற்புதமாயிருக்கும். ஒரு பாட்டு.. ஓரிடத்தில் சொல்கிறார். 'Awaits alike the inevitable hour.. the paths of Glory..'

குறுக்கிட்டேன். "தாத்தா! நீங்கள் போத்தனூர் பக்கம் அந்த நாளிலே இங்கிலீஷ் டீச்சரா இருந்தது எல்லாருக்கும் தெரியும்!" என்றேன் கிண்டலாக. "சாவகாசமா அப்புறம் கேட்கிறேன்."


குதித்துக் கொண்டு விரைந்தேன். அரேபியக் குதிரை மாதிரி அந்த மோட்டார் பைக்.

அந்த சப்தத்திலும் தாத்தாவின் குரல் ஒலிக்கிறது.

"வேகம் வேண்டாம்...! மெதுவாகவே போ."

வேகமாய்த்தான் போனார் அப்பா. அதுவும் அந்த ஸி.எம்.டி. பதவிக்கு நாலு வருட நீட்டிப்பு

கிடைத்தவுடன், நாங்கள் இருந்த அந்த டெல்லிப் பகுதியே ஒரு குலுங்கு குலுங்கியது. அதே சமயத்தில் என் கல்யாண நிச்சயதார்த்தமும் சேர்ந்து கொள்ளவே, ஐந்து நட்சத்திர



ஓட்டல் ஒன்றில் பெரிய விருந்து வைத்தார், அப்பா. தெரிந்த நண்பர்கள், முக்கியமான வாடிக்கையாளர்கள், உயர் பதவியிலிருக்கும் பிற அதிகாரிகள்...

சளைக்காமல் அவர் கை குலுக்கிக் கொண்டேயிருந்தார். முக்கியமான சில நபர்களிடம், தனியாகப் பேசி "வாக்கு" கொடுத்துக் கொண்டே யிருந்தார். (ஒவ்வொரு வாக்குறுதிக்கும், தனியாக "விலை" உண்டு. தெரியாதா என்ன?) நுனி நாக்கில் ஆங்கிலம், இந்தி பேசிக் கொண்டு அப்பா வளைய வந்து கொண்டிருக்க, வனிதாவின் வனப்பில் நான் லயித்திருந்தேன்.

இரவு ஒன்றரை (விடிகாலை!) மணிக்குக் காரில் ஏறும் போது, அப்பா தன் நிலையிலேயே இல்லை, கார் குஷனா அல்லது வீட்டு

மெத்தையா என்று புரியாத நிலைமை. இந்த நிலைமையில், கட்டிலில் விழுந்து உறங்கியவருக்கு, விழிப்பு வந்தவுடன் தாத்தாவின் முணுமுணுப்பு கேட்டால் எப்படி இருக்கும்?

"ஸ்டாப் இட் ஐ ஸே! உங்களுக்கு இஷ்டமானால் கூட இருங்கள்.. இல்லாவிட்டால்........"

தாத்தா பொறுமையாய்ச் சொன்னார். "பெரிய போஸ்ட்தான். ஆனால் நிதானம் வேணும்டா.. ரொம்ப வேகமாப் போறே.. புழுதி நிறையக் கிளம்பறது!"

"வேகமாப் போனால் புழுதி வரத்தான் செய்யும். ஆனால் நான் யார் மீதும் வீசுவதில்லையே!" என்று கடகடவென்று நகைச்சுவை பொங்குவது போலச் சொல்லிச் சிரித்தார்.

"ஜாக்கிரதை..! அந்தப் புழுதியே புதை மணல் மாதிரி உன்னைச் சிக்க வைத்து விடப் போகிறது!"

"சட்..!" அவர் முகத்தில் எரிச்சல், "வரவர நீங்கள் "ஸினிக்" ஆகி விட்டீர்கள்!" சட்டென்று என்னை நோக்கினார். "நீ சொல் சிவா! திருக்குறளிலே என்னவோ பாட்டு இருக்கே. "அப்பாவுக்குப் பிள்ளை செய்யும்......."

"மகன் தந்தைக்கு ஆற்றும்" என்கிற குறளை அப்படியே சொன்னேன்.

அப்பாவின் முகம் மலர்ந்தது. "ஆ! தேர் யூ ஆர்" தாத்தா பக்கம் திரும்பி, "உங்க பிள்ளை இவ்வளவு பொறுப்பான பெரிய பதவியிலே இருப்பதைப் பார்த்துப், பெருமை அடைவதை விட்டுவிட்டு........" நிறுத்தினார். மெல்ல. "ஏதோ உளறுகிறீர்கள்!"

சட்டென்று டிங் டாங், டிங் டாங் என்று இனிமையாக ஒலித்த ஓசை அவர் கவனத்தைக் கவர்ந்தது. "ஓ காட்.. பத்து மணிக்கு ப்ரெஸ் மீட்.. டயமாகிறது. தயார் பண்ணணும்."

கார் ஓசை மெதுவாகத் தேய்ந்து மறைந்தது.

சில நாள் கழித்து, டில்லிப் பதிப்பின் எல்லாத் தினசரிகளிலும், அப்பாவின் போட்டோவும் பேட்டியும் பிரசுரம் ஆயின. "Dynamic Executive; Soft but Stern" என்ற பல வகைத் தலைப்புகளில். ஒரு மாதம் பிறகு, வேறு பிரபல வாரப் பத்திரிகைகளில், படம், பேட்டி.....

இத்தகைய சூழ்நிலையில் என்னுடைய சிறு தொழில் பெரியதாக வளரக் கேட்பானேன்? மானேஜர் மணிக் கணக்காகக் காத்துக் கிடந்தார், டாகுமென்ட்களில் என்னுடைய கையெழுத்தைப் பெறுவதற்காக, நான் உதிர்க்கும் அபத்தமான இந்தி உச்சரிப்பைக் கூடச் சிரித்துப் பாராட்டுகிற அதிகாரிகள் இருந்தார்கள்.



☺ "ரோலர் ஸ்கேட்டர் மொபைக்" என்னும் வண்டி 1900 ஆண்டு வாக்கில் பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்டு போக்கு வரத்துக்காக உபயோகிக்கப் பட்டது. இது 0.25H.P. அதாவது கால் ஹார்ஸ்பவர்'' இரட்டை சிலிண்டர் - காஸோலின் என்ஜினால் இயங்கியது. இது மணிக்கு 20 மைல் வேகத்தில் ஓட்டப்பட்டது.

- ஏழ்வரைக்கடியான்

அன்றைக்குப் பாருங்கள்.. விடிகாலையில் காலார நடந்து கொண்டிருந்தேன். ("வாக்கிங் போங்கள்! உடம்பு டிரிம்மாக இருக்கணும்".. வனிதாவின் உபதேசம்) கொஞ்ச தூரம் நடக்கையிலேயே, ஓசைப்படாமல் ஒரு கார் வந்து நின்றது. பாங்க் ரீஜனல் மானேஜர் -

"ஏறுங்கள் சார் காரில்! வாக்கிங் எல்லாம் வயசான பின் பார்த்துக் கொள்ளலாம்."

பாருங்கள்.. ஒரு சேர்மனின் பிள்ளையால் சுதந்தரமாக நடந்து கூடப் போக முடியவில்லை.

இந்த ஒரே பிள்ளைக்குத் திருமணம் என்றால் எப்படி இருக்கும்? அந்தத் தெற்கு டெல்லியே அதிர்ந்தது. கல்யாணத்தன்று காலையிலும், மாலை ரிசப்ஷனிலும் வந்து குவிந்த பரிசுப் பொருள் களுக்குக் கணக்கே இல்லை. திரௌபதியின் வஸ்திராபரணம் போல் பிரிக்கப் பிரிக்க வந்து கொண்டேயிருந்தன.

கை குலுக்கியும், பாராட்டைக் கேட்டும், புன்னகை செய்தும் களைத்துப் போனேன்.

அப்பாவுக்குப் பதவியில் இன்னும் நல்ல பெயர். சின்னச் செய்திகளில் எல்லாம் அடிபட்டார். வெளியே விருந்துகளுக்கும், தன்னைப் போன்ற சிநேகிதிகளுடன் பெருமை அடித்துக் கொள்வதற்கும் அம்மாவுக்குப் பொழுது சரியாக இருந்தது. நக நுனி முதல், உச்சந் தலை வரை முழுதுமாக வனிதாவை ஆண்டு அனுபவிக்கவே எனக்கு நேரம் சரியாக இருந்தது.

இந்த ரம்யமான, சுகமான சூழ்நிலையில், ஓர் எழுபது வயசுக் கிழவரை யார் பொருட்படுத்தப் போகிறாக்ள்?

ஆனால் அவர் - கிழவர் - சகல நடப்புகளையும் கவனித்துக் கொண்டுதானிருந்தார். கொஞ்சம் ஓய்வாக இருந்த போது, வனிதாவை அழைத்தார்.

"இங்கே வாம்மா வனிதா! நான் இந்த வீட்டுக்காரர்களுக்குப் பழசாகி விட்டேன். புதுசு நீ! நீயாவது நான் சொல்வதைக் கேள்.."

"என்ன?" என்றாள். சலிப்பை மறைத்துக் கொண்டு,

"நீ பைபிள் படிச்சிருக்கையோ? அதிலே ஒரு வரி `Dust thou art.. Unto dust shalt thou return'

"டோன்ட் டிஸ்டர்ப் ஹர், கிரான்ட்பா," என்றேன்.

"ஓ.. நீயா சிவா.! உன்னைக் கவனிக்கலை. ஏண்டா நீயே சொல்லு. பரிதாபாத்திலே இன்டஸ்ட்ரியல் பிளாட். வசந்த் விகாரிலே ஒரு ஃபிளாட்னு..! வாங்கித் தள்ளறான் உன் அப்பா. என்னடா இது?"

எனக்கு அவர் சொல்வது புரிந்தது. மேலும் என்ன சொல்ல வரப் போகிறார் என்பதும் புரிந்தது. ஆனால், நாங்கள் எல்லாருமே தெளிவு வராத போதையில், எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் அல்லவா இருந்தோம்?

"இட்ஸ் ஆல் ரைட்" என்றேன் அலட்சியமாக.


"காதிலே என்னவெல்லாமோ விழறதுடா"

"காதை இறுக்க மூடிக்கோங்க"

தாத்தா மேலே விஸ்தாரமாக என்ன சொல்லி இருப்பாரோ தெரியாது. அதற்குள் உதட்டில் பைப் சகிதம், இளமையின் சின்னமான டீ ஷர்ட் அணிந்து, அப்பா அங்கே வந்தார். சின்னதான டீ ஷர்ட்டில் `KING' என்ற வாசகம்.

தாத்தா சந்தர்ப்பம் தெரியாது, "டேய் கங்காதரா! டென்னிஸன் சொன்னது ஞாபகம் வருகிறது "Authority forgets a dying king".

அப்பாவின் கவனம் வேறெங்கோ பதிந்திருந்தது. வனிதாவைப் பக்கத்தில் அழைத்து உட்கார வைத்தார். "இந்த ஜனக்புரி இடம் எப்படி? இரண்டு பெட்ரூம்.. ஆனால் தேவையான ஃபிட்டிங்ஸ் நாமே போட்டுக் கொள்ளலாம்" என்று ஏதோ ஒரு கட்டடத்தின் பிளானைக் காண்பித்தார்.



☺ ''ஜுராஸிக் - பார்க்'' திரைப்படத்தில் வரும் ராட்சத டினோஸார் உடும்பு இனத்தின் ஒரு வகையைச் சேர்ந்ததே இந்த உடும்பும். ''தெரப்ஸுடா'' என்றழைக்கப்படும் இவ்வுடும் பினம் 2 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்ததென உயிரியல் விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் கூறியுள்ளனர். "தெரப்ஸுடா" குட்டி போட்டுப் பாலூட்டும் வகையைச் சேர்ந்தது. இந்த வகை உடும்புகள் இப்போது உலகில் இல்லை.

- ஏர்வரைக்கடியான்

பார்க்கப் பார்க்க வனிதாவின் கண்கள் விரிந்து கொண்டே போயின. எனக்கும் மகிழ்ச்சிதான், மணமான சூட்டோடு, மனைவிக்குப் புது வீடு கிடைப்பதென்றால், யாருக்குத்தான் சந்தோஷமாக இருக்காது?

வனிதாவின் குதூகல ஆர்ப்பரிப்பு, என்னுடைய மகிழ்ச்சி, அப்பாவின் தடபுடல்... இத்தனைக்குமிடையே தாத்தாவின் மெல்லிய குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"ம்.. இதெல்லாம் எங்கே போய் முடியப் போகிறதோ?"

எங்கே போய் முடிந்தது தெரியுமோ? சொல்கிறேன். அவசரப்படாதீர்கள்.

கல்யாணம் முடிந்து ஓராண்டு நெருங்கி வந்தது, அந்த நிறைவை அமர்க்களமாகக் கொண்டாட வேண்டுமென்று அம்மா திட்டமிட்டாள். யார் யாரை அழைக்க வேண்டும்; எப்படிக் கூப்பிட வேண்டும்.. என்னென்ன மெனு ஐட்டங்கள்..... என்றெல்லாம் யோசித்தாள்.

ஆனால் அப்பா தடுத்தார். "ஒன்றும் வேண்டாம் சக்கு" என்றார் மெதுவாக.

நான் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தேன். அந்த மென்மையான குரலில் இழையோடிய சோகம்.. தொடர்ந்து அவரிடம் தென்பட்ட மாறுதல்கள் மேலும் ஆச்சரியத்தை அதிகமாக்கின. முன் போல் கலகலப்பாகப் பேசுவதில்லை, "புகை" மூட்டத்திலும், விஸ்கி வாசனையிலும் நேரத்தைச் செலவிட்டார். ஆபீசுக்குக் கூட ரெகுலராகப் போவது கிடையாது. காரணம் கேட்டால், ஏதோ மழுப்புவார். இல்லாவிட்டால் எரிந்து விழுவார்.

ஆச்சரியம் என்னவென்றால், தாத்தாவிடம் சிடுசிடுவென்று இருப்பாரே, அது இப்போது காணோம். ஆனால் அதற்காக "மரியாதை" "பயம்" எல்லாம் வந்து தினமும் நமஸ்காரம் செய்தாரா? அதுவும் இல்லை.

நானும் தொழில் விஷயமாக வெளியே செல்கிறவன்தானே? கசமுசவென்று செய்திகள் காதில் விழுந்தன. உபரியாக இருந்த தொகையை அரசாங்க வங்கியில் போட வேண்டுமென்ற விதியை மீறி, சிறு வங்கியில் முதலீடு செய்தாராம். அந்த வங்கி "ஆட்டம்" காண்கிறதாம். அப்புறம் மூன்று வருடங்களுக்கு முன்னர், நிதி இயக்குநராக இருந்த சமயம், டெண்டரில் ஏதோ விதிகளை மீறியிருக்கிறாராம்.

என்னால் பொறுக்க முடியவில்லை. நல்ல சூழ்நிலையில், வனிதாவைத் தூண்டி விட்டேன், "என்னப்பா ஒரு மாதிரியா இருக்கிறீர்களே?" என்று கேட்டேன்.

"ஓ! நோ" - தோளைக் குலுக்கினார். பைப்பைப் பற்ற வைத்தார். குப்பென்று ஜ்வாலை எழும்பியது. "ஸில்லி ஆடிட் அப்ஜெக்ஷன்!"

தாத்தா மெதுவாகக் குரல் கொடுத்தார். "ஹிந்தி பேப்பரில் கூட என்னவோ போட்டிருந்ததாம்."

அப்பா ஏதும் சொல்லவில்லை. ஒரு பார்வை விழித்துப் பார்த்தார். எழுந்து போய் விட்டார்.

அந்த நிலைமையை, அப்போதைய மன இறுக்கத்தை வர்ணிக்கச் சரியான வார்த்தைகள் இல்லை. வானம் முழுதும் மேக மூட்டம் தெரிந்து, அதே சமயம் மழைத்துளி சிறிது கூட விழாமலிருக்குமே, அது மாதிரி தோன்றியது. ஆஸ்பத்திரியில் அமர்ந்து, நெருங்கிய உறவினருக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டே, டாக்டரின் மேலான தீர்ப்புக்காகக் காத்திருந்தாற் போலவும் தோன்றியது.

என்னால் மறக்க முடியாது. அது ஒரு வியாழக் கிழமை. வழக்கமான புழுதிக் காற்று மழைத் துளி கலந்து வீசியது. வீட்டைப் பெருக்கப் பெருக்க வெறி கொண்ட மாதிரி காற்று அதிகமாயிற்று. என்னுடைய சிறு தொழிலின் விஸ்தரிப்புக்கு ஒரு விழா ஏற்பாடு செய்திருந்தேன். அந்த அழைப்பிதழின் "ப்ரூஃபை" அப்பாவிடம் காண்பித்தேன். அவர் பதவியையும் அதில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

"இது வேண்டாமே"" என்றார்.

"ஏன் அப்பா?"

அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். குப்பென்று கண்ணில் நீர் உருண்டு, திரண்டதை நான் பார்த்து விட்டேன். ஸி.எம்.டி யின் கண்களில் நீர்! என்ன இது!

ஆனால் சமாளித்து விட்டார். "உன் இண்டஸ்ட்ரி சமாசாரம்! என் பதவி எதற்கு?"

நான் பதில் சொல்லுமுன், வெளியே கிணிங் கிணிங்கென்ற மணி ஓசை. திறந்தேன். முற்றிலும் புதிதான நபர்கள். "யார் வேணும்?"

அப்பாவின் பெயரைச் சொன்னார்கள். பதவியைக் குறிப்பிட்டார்கள். அடையாளச் சீட்டைக் காண்பித்தார்கள். வீட்டைச் சோதனையிட!

"அப்பா!" என்று அலறினேன்.

குரல் கேட்டு, சட்டென்று ஏதோ ஊகித்து மடமடவென மாடியிலிருந்து இறங்கி வந்தார் தாத்தா. வந்த வேகத்தில் சறுக்கியது போல.. எதிலோ மோதிக் கொண்டார். தடுமாறிக் கீழே விழுந்ததில் நினைவு தவறி விட்டது.

ஒரு விதத்தில் தாத்தா அதிர்ஷ்டசாலிதான். "மகன் தந்தைக்கு, குறளைப் பெருமையாகச் சொல்லிப் பீற்றிக் கொண்டாரே, அந்த 'மகனுக்கு' இன்று நேர்ந்த கதி தெரியாது; ஸி.பி.ஐ.யின் வசமான குற்றச் சாட்டுக்கு இலக்காகி, ஒரு முழுநாள் "லாக் அப்" பில் இருந்தது அவருக்குத் தெரியாது. எந்தப் பத்திரிகை எல்லாம் மகனை விதவிதமான புகழுரைகளுடன் எழுதினவோ, அதே பத்திரிகைகள் இன்று வண்ணம் பூசி அவரைக் காலால் மிதித்ததை அறிய மாட்டார்.

இன்னொரு வகையிலும் தாத்தா அதிர்ஷ்டசாலி. கொள்ளி வைக்கப்படும் போது, இரண்டு அதிகாரிகள் "புடைசூழ" மகன் கையால் நெருப்பு வைக்கப்படும் "பெருமை" யாருக்குக் கிடைக்கும்?

தாத்தாவுக்குக் கிடைத்தது.

நான் தாத்தாவுக்காகக் கொஞ்சம் அழுதேன். அப்பாவுக்காகக் கொஞ்சம். எனக்காக நிறைய அழுதேன்.

இனி என் கதி?

என் கேள்விதான் பூதாகாரமாய் வளர்ந்ததே தவிர, பதில் சொல்ல யாரும் இல்லை.

அப்பாவுக்கு அதிகாரிகளைப் பார்ப்பதிலும், பதில் சொல்வதிலும் அட்வகேட்களைச் சந்திப்பதிலும் பொழுது போயிற்று. சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அம்மா குத்திக் குத்திக் காட்டினாள். வனிதா முற்றிலும் இடிந்து போனாள்.

எனக்கு அவரைக் காணப் பரிதாபமாக இருந்தது. ஒரு நாள் என்னை அழைத்தார். "ஓர் ஒத்தாசை எனக்குச் செய்யணுமே"

"என்ன?"

"இந்தச் சிக்கலிலிருந்து என்னை விடுவிக்கணும். செலவு எவ்வளவு ஆனாலும் சரி" என்றார் அழுத்தமாக. "எப்படியாவது என்னைக் காப்பாத்தணும்."

"சொல்லுங்கள் அப்பா"

"முடியும். இதோ பார்" டயரியை எடுத்தார். புரட்டினார். சில பெயர்களைச் (மந்திரிகள்? மந்திரி உதவியாளர்கள்?) சொன்னார்.

நான் அப்பாவை நோக்கினேன். கவச குண்டலங்களை இழந்து, கர்ணன் யுத்த களத்தில் தோற்ற மாதிரி காட்சி தந்தார். எப்படியாவது அவரை "மீட்க" வேண்டுமென்கிற வெறி ஏற்பட, கான்பூருக்கும், ஆக்ராவுக்குமாக அலைந்தேன். (மந்திரிகளுக்கு வேண்டியவர்கள் அங்கேதானே இருந்தார்கள்!) தர்ஷன்பூரா, ஜெய்ப்பூர் ஹவுஸ் காலனி, கமலா நகர் என்று பல இடங்களிலும் சுற்றி, அமைச்சர், எம்.பி.க்களைச் சந்தித்துப் பேசினேன்.

அப்பா அட்வகேட்களையும், ஜோசியர்களையும் துரத்திக் கொண்டிருந்தார்.

சூதாட்டத்தில் சகுனியிடம் தருமர் ஒவ்வொன்றாக இழந்த மாதிரி, ஒவ்வொன்றாக எங்களை விட்டுப் போயின.

தொழிற்சாலை, பிளாட், ஃப்ளாட், ஜனக்புரி இடம்.

பரவாயில்லை. போகட்டும். அப்பா முகத்தில் பழைய சிரிப்பு வர வேண்டும். பைப்பும் கையுமாக அவரைப் பார்க்க வேண்டும். கம்பீரக் குரல் ஒலிக்க வேண்டும்.

அந்த நாளை நீங்கள் ஞாபகம் வைத்திருக்க மாட்டீர்கள். இருபது பக்கத் தினசரியில், எங்கோ ஒரு மூலையில் அப்பாவின் பெயரைக் குறிப்பிட்டு "Exonerated" என எழுதி யிருந்தார்கள்.

அப்பா முகத்தில் ஜொலித்த ஜொலிப்பு! "சக்கு! இனிமேல் நான் சுதந்தர மனிதன். மறுபடியும் வேறு வேலை பார்க்கலாம்! பிடிச்சு வைச்ச பணமெல்லாம்......" சொல்லும் போதே விக்கியது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தார்.

டாக்டர் வரும் போது தாமதம் ஆகி விட்டது.

→

"இனி என் கதி?" என்று சொன்னேன் இல்லையா? அக் கேள்வி என் முன் விசுவரூபமாக வடிவெடுத்தது - இப்போது.

டெல்லியில் என்னால் வாடகை தந்து சமாளிக்க முடியவில்லை. அப்பாவின் மீது "குற்றம்" இல்லை என்று பார்லிமெண்டில் யாரோ முக்கிய மந்திரி சொன்ன பிறகுதான், தொகையெல்லாம் கிடைத்தது. ஆனால் பணம், கடனை அடைக்கவே போதவில்லை. பாங்க் வேறு அது நாள் வரை மவுனமாகப் பார்த்துக் கொண்டிருந்து. இப்போது நோட்டீஸ் விட்டது!

முன் போல் வசதிகள் ஏதும் இல்லாததால் அடிக்கடி சண்டை. "உங்க அப்பாவுக்கு சாமர்த்தியம் போதவே போதாது!" என்றாள் வனிதா. "அம்மா அதற்கும் மேல் கொஞ்சமாவது உஷார்ப்படுத்த மாட்டாளோ?"

எனக்குப் பொறுக்கவில்லை. பளாரென்று அடித்தேன். வார்த்தை தடித்தது. வனிதா மேலும் மேலும் எதிர்த்துப் பேசினாள். ஏதோ பிறந்ததிலிருந்தே சகல சுகங்களையும் அனுபவித்தவளைப் போல் பேசினாள்.

வளர்த்துவானேன்? திடீரென்று ஒரு நாள் ஏதோ எழுதி வைத்து விட்டுப் பிரிந்து போய் விட்டாள். சேர்வதைப் பற்றி, அப்புறமாக யோசிப்பாளாம்! (வசதி வந்தால்!)

நான் சமாளிக்க முடியாமல் போத்தனூர் வந்தேன். (அம்மாவும் கூடத்தான்) முழுக்க முழுக்க அப்பாவின் நிழலில் வாழ்க்கையை ஓட்டியவனுக்கு அவர் போனதும் சகலமும் சூடாக உறைத்தன. டெல்லியிலிருந்து போத்தனூர்! கோவையிலிருந்து பொள்ளாச்சி போகும் வழியில் உள்ள சிறிய ஊர்.

அம்மா மவுனமாக என் கூட வந்தாளே தவிர, மனசுக்குள் ஏதோ அவளைக் குடைந்து அறுத்துக் கொண்டே இருந்தது போல. தான் இருந்த நிலைமை என்ன! இப்போதுள்ள நிலைமை என்ன.!

போத்தனூரில் சிறிய ஓட்டு வீட்டில் பிள்ளையுடன்.

அதுவும் எப்படி? மாசச் சம்பளத்துக்காகத் துடியலூர் வரை சென்று வருகிற பிள்ளை. உள்ளபடிக்கே நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்க வேண்டிய நிலையில் உள்ள பிள்ளை.

அம்மாவின் மனசு என்ன பேதலித்ததோ. என்ன ஆயிற்றோ!

திடீரென்று எனக்கு போன் வந்தது. "அம்மாவுக்கு காஸ் ஸ்டவ் பற்றி எரிந்து காயம்!"

ஓடி வந்தேன். அதற்குள் நல்லவர்கள் சிலர் அம்மாவை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். டாக்டர் அந்த நாளில் தாத்தாவின் மாணவராம். சலுகை அளித்தார்.

தொழிற்சாலைக்குப் போவது மாதிரி, நர்சிங்ஹோம் செல்லுவதும் இப்போது என் வாழ்க்கை ஆகி விட்டது.

ஆர்.எஸ்.புரத்திலிருந்து டவுன் ஹால் வரை 7ஆம் எண் பஸ். பிறகு அங்கிருந்து வேறு பஸ்ஸில் போத்தனூர். போலீஸ் ஸ்டேஷனி லிருந்து சற்று தூரம் நடந்தால் எங்கள் புராதன வீடு. ஓட்டு வீடு.

ஆனால். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அங்கிங்கெனாதபடி எங்கும் சப்தமாய் யந்திர ரூபமாய் இயங்குகிற இந்தக் கோவையில், பீனிக்ஸ் பறவை போல் மறுபடியும் எழுந்து, முன்னுக்கு வந்து இந்த வீட்டை பங்களாவாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

என்றாவது ஒரு நாள் தன் தவற்றைப் புரிந்து கொண்டு, "சேர்மனின் மருமகள் இல்லை! இப்போது சிவாவின் மனைவி"என்று நிதர்சனமாகத் தெரிந்து கொண்டு வனிதா என்னிடம் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பூரணமாகக் குணம் அடைந்து அம்மா பழையபடி முன்போல் நடமாடுவாள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

நிமிர்ந்து நோக்குகிறேன். அடல் அடலாக விழுந்து கொண்டிருக்கிற சுவரில் தாத்தாவின் படம். அவர் அடிக்கடி சொல்கிற வார்த்தைகள் காதில் ஒலிக்கின்றன.

"மண்ணிலே பிறந்தாய். மண்ணுக்குள் மறைந்தாய் Dust thou art.." சே! என்ன குரூரமாக அவை பலித்து விட்டன? எவ்விதம் சொத்தும் செல்வமும் சேர்ந்தனவோ, அதே விதத்தில் மறைந்தும் விட்டனவே!


தாத்தாவின் படத்தைச் சுக்கு நூறாக்கி விட வேண்டும் போல் ஆத்திரம் எழுகிறது. அதே சமயம் எங்கள் மனச்சாட்சியின் ஓர் உருப் போல் விளங்கிய அவரை நெஞ்சில் வைத்துக் கொள்ள வேண்டும் போலவும் தோன்றுகிறது.

ஓர் உந்துதல் ஏற்பட, அந்த போட்டோவை எடுத்து நெஞ்சார அணைத்துக் கொள்ளுகிறேன்.

என் நம்பிக்கைகளுக்கு ஒரு பலம் கூடுவது போல் தோன்றுகிறது.

●

பௌர்ணமி நிலவில் கிரிவலம் கோடி புண்ணியம்



நாகராஜகுமார்

பிரார்த்தனை இல்லை; வேண்டுதல் இல்லை. ஆனால், கிரிவலம் வரவேண்டும் என்ற ஆசை மட்டும் சில நாள்களாக மனத்தில் உந்திக் கொண்டிருந்தது.

அன்று மாசி மாதப் பௌர்ணமி. பஞ்ச பூதங்களில் ஒன்றான அக்னி ஸ்தலம் திருவண்ணாமலைக்குக் கிளம்பும் முடிவுக்கு வந்தாகி விட்டது.

மாலை 6.30 மணிக்கு, சென்னை சைதாப்பேட்டையில் திருவண்ணாமலைக்குச் செல்லும் பேருந்துக்காகக் காத்திருந்த போது கிழக்கில் முழுமதி தரிசனம் கிடைத்தது. 7.15க்கு பேருந்து கிடைத்தது. திருவண்ணாமலைக்குச் செல்லும் பேருந்தில் உட்கார இடம் கிடைக்கவில்லை. சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சுமார் 190 கி.மீ. தொலைவுப் பயணம். பேருந்தில் கூட்ட நெரிசல். திருவண்ணாமலை வரையில் நின்றே தவம்.

பேருந்து திண்டிவனம்,செஞ்சி வழியாக திருவண்ணாமலையை அடைந்த போது இரவு மணி 12.

அருணாச்சல ஆலயத்திற்குச் செல்லும் சாலைகளில் கனரக வாகனப் பேருந்துகள் செல்லத் தடையேற்படுத்தப்பட்டிருந்தது. சினிமா தியேட்டர்களில் படக்காட்சி முடிந்ததும் வீட்டிற்குச் செல்லும் அவசரத்தில் மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு செல்வது போல் ஆலயத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் நாமும் ஒருவராகி விட்டோம்.

கடை வீதிகளில் பிரதான கடைகள் அடைக்கப்பட்டிருக்க, நடைபாதைக் கடைகள் சாலையோரங்களில் முளைத்திருந்தன.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்கிற வாசகம் ஆலயத்தின் கோபுர வாசலில் பளிச்சென்று பிரகாசிக்கிறது. கைக்கூப்பி அருணாச்சலேஸ்வரரை வணங்கி விட்டு கோபுரத்தை அண்ணாந்து பார்க்கிறோம். கோபுரத்தின் உச்சியில் விளக்கேற்றியது போல் நேர் மேலே நிலா. நேரம் 12.50.

கிரி வலம் தொடங்குகிறது. பல ஊர்களில் இருந்து ஒவ்வொரு பௌர்ணமிக்கும் அரசு 250 சிறப்புப் பேருந்துகளையும், ரயில்வே துறை சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு ஒரு சிறப்பு ரயிலையும் இயக்குகிறது. இந்த ரயில் சென்னையிலிருந்து மாலை 5 மணிக்குப் புறப்பட்டு இரவு திருவண்ணாமலையை அடையும். விடியற்காலை மீண்டும் கிளம்பி சென்னைக்கு வந்து சேரும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறை போக்குவரத்துக் கழகம் சென்ற பௌர்ணமி வரை ஒரு பேருந்தை இயக்கிக் கொண்டிருந்தது. இந்த பௌர்ணமிக்கு 10 பேருந்துகளை இயக்கியுள்ளது. சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்று திரும்ப ரூ. 175 கட்டணமாக வசூலிக்கிறது. இதைத் தவிர தனியார் பேருந்துகளில்... வாடகை வேன்களில்.. சொந்தக் கார்களில் என்று வருகின்ற மக்கள் கூட்டம்.

அன்றைய இரவு மட்டும் 2 லட்சம் பேர் திருவண்ணாமலை கிரிவலத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

மலையைச் சுற்றியுள்ள பாதையின் நீளம் 14 கி.மீ. எட்டுத் திக்குகளில் எட்டு லிங்கங்கள். பாதையை வலம் வருவோர் வசதிக்காக 148 சோடியம் ஆவி விளக்குகள். இதற்கான செலவு ரூபாய் 12



லட்சத்து 25 ஆயிரத்தை நன்கொடையாக அளித்திருக்கிறார் நடிகர் ரஜினிகாந்த்.

இலக்கிய ஆர்வலரான திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சிவ. சூரியன் மிகக் குறுகிய காலத்தில் நடைபாதை விளக்குகள் அமைப்பதில் பெரும்பங்கு வகித்திருக்கிறார். கிரிவலம் வருபவர்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் செய்து வருகிறார்.

எட்டு லிங்கங்களின் வழிபாட்டிற்காக பாதையெங்கும் கற்பூரக் கடைகள். கற்பூரம் ஏற்றி லிங்க ஆராதனைக்குக் காத்திருக்கும் நீண்ட வரிசை. புதிதாக உருவாகி வரும் குட்டிக் கோயில்களிலும் கூட்டம்.

இளநீர் குடிக்கிற நேரத்தில் கால்களுக்கு ஓய்வு தரும் பெண்கள். தாக சாந்தி நேரத்தில் தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா எனத் 'தவிக்கும்' இளைஞர்கள். குளிர் பானக் கடையைத் தொலைவில் பார்த்ததும் 'தண்ணீர்' என்று கேட்கும் குழந்தைகள். பணத்தை எண்ணி எண்ணிச் செலவிடும் மேல் சட்டை அணியாத ஆண்கள்.

செல்வர் - ஏழையில்லை. வயது வரம்பில்லை. ஜாதி பேதமில்லை. காலில் மிதியடி கூட இல்லாமல் 14 கி.மீ. தொலைவையும் தம்மால் 'கடக்க முடியும்' என்ற நம்பிக்கையுடன் எல்லாரும் நடக்கிறார்கள்.

வலம் வரும்போது ஒவ்வொரு கோணத்திலும் கிரி, வெவ்வேறு விதமாகக் காட்சியளிக்கிறது. ஓரிடத்தில் ஐந்து முகங்கள் கொண்ட ஓர் அமைப்பாக - மற்றோரிடத்தில் மூன்று கூம்பகள் கொண்ட திரிசூலமாக - வேறோரிடத்தில் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தது போல்... மனம் என்னவெல்லாம் நினைக்கிறதோ அப்படியெல்லாம் திருவண்ணாமலையின் தோற்றம்.

அடி அண்ணாமலையார் ஆலயத்தைக் கடந்தால் 8 கி.மீ. தொலைவைக் கடந்தவர்களாகிறோம். "மொத்தத் தொலைவு 14 கி. மீட்டர்களைத் தம்பதி சமேதர்களாகக் கடக்கக் குறைந்தது 6 மணி நேரமாகிறது'' என்றார் விழுப்புரத்தில் இருந்து கடந்த 23 பௌர்ணமிகளாக கிரியைத் தவறாமல் வலம் வரும் விவசாயி ஒருவர். பல ஆண்டுகளாக கிரியை வலம் வருபவர்களைக் கணக்கிட முடியாது.

'பௌர்ணமி அன்று' என்பது மட்டுமன்று. சாதாரண நாள்களிலும் கிரியை வலம் வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. வேகமாய் நடக்க முடியாத அளவு முன்னே செல்பவர்களின் அடர்த்தி.

தொலைவில் அண்ணாமலை கோபுர உச்சியில் இருக்கும் விளக்கொளித் தெரிகிறது. இதோ வந்து விட்டோம்! "அக்னி ஸ்தலத்தை வலம் வரச் செய்ய எனக்கு உடல் வலிமையை விட மன வலிமையை அதிகமாகக் கொடுத்த அருணாச்சலேஸ்வரா நன்றி!" என்று மனம் கூறப் பார்வை மலை உச்சியை நோக்குகிறது.

மலை உச்சியை மேகம் ஒன்று தழுவுநிலவொளியில் அந்த மேகம் லிங்கேஸ்வரனுக்குச் சார்த்திய வெண்பட்டு போல் பிரகாசமாய்... 'அரோகரா' என்று வாய் முணுமுணுக்க மனம் முழுக்க அமைதி.

உடல் அசதியையும் மீறி உள்ளத்தில் பரவுகிற அமைதி ஓர் ஆனந்தம்.

கோபுர வாசலுக்கு வந்து விட்டோம். கோபுரம் - கோபுரத்தைத் தாண்டி வெண்மதி - பின்னணியில் திருவண்ணாமலை. நேரம் 3.50

உட்கார்ந்து ஓய்வு எடுக்கலாமா? மனத்தில் வியாபித்துள்ள அமைதியை அனுபவிக்கலாமா? வேண்டாம். இங்கே உட்கார்ந்து நேரம் கழித்தால் பேருந்தில் உட்கார இடம் கிடைக்காது.

மீண்டும் அடுத்த பௌர்ணமிக்கு வருவோம். ஏன் அடுத்த வாரத்தில் கூட நேரம் கிடைத்தால் ஒரு நாள் வருவோம். இந்த அமைதியை ஆராதிப்போம்.

அதோடு ஆலயத்தின் நாயகர் அருணாச்சலேஸ்வரர். திருவண்ணாமலையின் தெய்வக் குழந்தை யோகி ராம்சுரத்குமார். பகவான் ரமண மகரிஷியின் ஆஸ்ரமம். சேஷாத்ரி மகரிஷியின் சமாதி தரிசனம். மலை முழுக்கப் பரவியிருக்கும் மூலிகைக் காற்றின் தூய்மை. கண்ணுக்குத் தெரியாத சித்தர்களின் பரிபூரண ஆசிகளைக் குடும்பத்துடன் வந்து தரிசிப்போம் என்கிற ஆசைகளுடன் மனம் முழுக்க அமைதியுடன் விரைந்தோம்.

பேருந்தில் எனக்காக ஓர் இருக்கை காத்திருந்தது. ■

என் மனத்திலே நின்ற ஆசிரியர்



டாக்டர்
கி. வேங்கடசுப்பிரமணியன்

மாணவப் பருவம் என்பது ஒருவன் வாழ்க்கையிலே மிக முக்கியமான பருவம். மாணவர் என்றால் யார் என்ற கேள்வி முதலில் எழுகிறது. திரு.வி.க. அவர்கள் சொல்லுவார்கள் : 'மாணுற ஆக்கும் பணியில் ஈடுபட்டோரே மாணாக்கர்" என்று. மாணுற ஆக்கும் பணியிலே ஈடுபடத்தான் மாணவர்களை உருவாக்குகிறோம்.

மாணவப் பருவம் மிகவும் துடிப்பான பருவம். அந்தப் பருவத்திலே நடந்த நிகழ்ச்சிகள் ஒருவன் மனத்திலே பசுமரத்தாணி போல் படிவது மட்டும் இல்லாமல் மனத்தை அப்படியே மாற்றி அமைக்கக் கூடிய பான்மையையும் பெற்றிருக்கின்றன என்று சொல்லு கிறார்கள்.

அதனால்தான், மாணவப் பருவத்தை மிகவும் நல்ல முறையிலே பேணிக் காக்க வேண்டும். ஆகவே, பெற்றோரின் கடமையுடன் அரசின் கடமை கூட அதுதான். அதனால்தான், கல்விக்குத் தமிழகத்திலே மாநில அரசின் மொத்த வருமானத்தில் கால் பங்குக்கும் மேலாகச் செலவு செய்கிறோம். மாணவர்களை நாம் நன்கு கவனித்துவிட்டால் நாடு தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும் என்பதே காரணம். இன்று மாணவர்கள் ஏங்கினால் நாளை நாடு ஏங்கும் என்ற முறையிலேதான் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

என் மாணவப் பருவம் மிகவும் சுவையானது. என் தந்தை வி. கிருஷ்ணசாமி அவர்கள் ஆசிரியர்களிடம் பேரன்பும் மரியாதையும் கொண்டவர். ஒருவன் ஆசிரியருக்கு முதற் பிள்ளையாகவும் பெற்றோருக்கு இரண்டாவது பிள்ளையாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். நான் பல பள்ளிக்கூடங்களிலே படித்தேன். என் தந்தைக்கு ஆணித்தரமாக இன்னொரு நம்பிக்கையும் இருந்தது. அதாவது, ஆங்கிலம் மூலமாகப் பாடங்களைப் படிக்கும் மோகம் அதிகம் இருந்த அந்த நாள்களிலே நான் தாய்மொழியாகிய தமிழ் மொழி மூலமே எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்று நினைத்தார். நினைத்தபடியே செயல் படுத்தினார். அதுவும் தவிர, அரசு நடத்தும் பள்ளிகளிலேதான் நான் படித்தேன். ஏனென்றால் என் தகப்பனார் பல ஊர்களிலே அதிகாரியாக இருந்தவர்கள். ஆவணக்களரி அதிகாரியாக இருந்த அவருக்குப் பணிமாற்றம் அடிக்கடி நிகழும். அந்த ஊர்களிலுள்ள ஜில்லா போர்டுப் பள்ளிகளில் தான் நான் படித்தேன்.

எந்தப் பள்ளியாயிருந்தாலும் பள்ளியின் பெருமை ஆசிரிய

ருடைய ஆற்றலிலும் மாணவர்களுடைய உற்சாகத்திலுந்தான் இருக்கிறதே தவிர, பள்ளிக் கட்டடங்களில் இல்லையென்று நினைக்கிறேன். "நாடா கொன்றோ காடா கொன்றோ" என்ற தத்துவம் பள்ளிக்கும் பொருந்தும் என்றே எண்ணுகிறேன். நான் படித்த பள்ளிக்கூடங்களிலே மிக முக்கிய மானது கோவில்பட்டியிலுள்ள பள்ளிதான். நான் பிறந்தது திருநெல்வேலி மாவட்டம் வரலாற்றுப் புகழ் பெற்ற இடம் வ.உ.சி., பாரதி போன்றோர் பிறந்து நாட்டை ஆள நமக்குத் துணிவு ஏற்படுத்திய மாவட்டம் இது.

கோவில்பட்டியிலே நான் படித்தபோது என்னைக் கவர்ந்த ஆசிரியர்களிலே மிகச் சிறந்தவர், அப்போது தலைமையாசிரியராக இருந்த திரு. சிவக்கொழுந்து அவர்கள். அவர் தலைப்பாகை வைத்துக் கொண்டு நீண்ட கோட் அணிந்து பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு நெற்றியிலே சந்தனக் கீற்றுடன் வருவார். ஆறடி உயரம் இருப்பார். அவரைப் பார்த்தாலே மரியாதை ஏற்படும். பயம் கலந்த மரியாதை. ஆங்கிலத்திலே சொல்லுவார்கள் ... Awe என்று .... Fear என்பதற்கும் .... Awe என்பதற்கும் வித்தியாசம் உண்டு. ..... Awe என்றால் பயபக்தி எனலாம். ஆசிரியர் சிவக்கொழுந்து முதலியார் - பத்து மணிக்குப் பள்ளி தொடங்குகிறது என்றால் - ஒன்பது மணிக்கே வந்துவிடுவார். பள்ளியைச் சுற்றி அங்கிருக்கும் குப்பைகளையும் சிறுசிறு துண்டுக் காகிதங்களையும் அவர்களே பொறுக்கி எடுப்பார்கள். மாணவர்கள் பள்ளியைச் சுற்றி இருக்கும் கழிவுக் காகிதங்களை எடுக்க வேண்டும் என்று சிவக்கொழுந்து முதலியார்



சொன்னதே இல்லை. அவர் ஒன்பது மணிக்கு வருவார். சிறுசிறு காகிதங்களை எடுத்துக் கொண்டு இருப்பார். அதைப் பார்த்ததும் பெரும்படையாகச் சேர்ந்து நாங்களும் அப்படியே செய்தோம்.

இதைத்தான் இப்பொழுது .... N.S.S. Scheme,என்ற ஒரு திட்டமாகச் செய்கிறோம். என்.ஸி.ஸி., ஏ.ஸி.ஸி. என்றெல்லாம் இப்பொழுது செய்கிறார்கள். இந்தத் திட்டத்துக் கெல்லாம் அந்த ஆசிரியர் தாமே முன் மாதிரியாக விளங்கினார். சிவக்கொழுந்து முதலியாருடைய நடத்தையும் பான்மையும் கண்ணியமும் என்னை மிகவும் கவர்ந்தன.

ஒரு நாள் ஏதோ ஒரு காரணத்துக்காக மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அன்று தலைமையாசிரியர் அரைநாள் லீவு போட்டிருந்தார் என்று நினைக்கிறேன். போலீஸ் அதிகாரிகள் வந்து மாணவர்களிடம், "நீங்கள் வேலை நிறுத்தம் செய்வது தவறு'' என்று சொன்னார்கள். மாணவர்களில் சில பேர் வழக்கம்போலக் கூச்சல் போட்டு, ''முடியாது முடியாது'' என்று சொன்னார்கள். அதற்குக் கால்பந்து விளையாட்டின்போது ஏற்பட்ட தகராறு காரணம் என்று நினைக்கிறேன். சரியாக நினைவில்லை. போலீஸ் அதிகாரிகள் சொல்லியும் மாணவர்கள் கேட்காமல் கூச்சல் போட்டார்கள்.

பிற்பகல் இரண்டு மணிக்குத் தலைமையாசிரியர் வந்தார். 'தலைமை ஆசிரியர் வருகிறார்' என்பதை அறிந்ததுமே மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தில் சுணக்கம் தலைகாட்டியது. தலைமையாசிரியர் வந்ததும், "எல்லாரும் வகுப்புக்குப் போங்கள். மணி அடிக்கச் சொல்லுகிறேன்'' என்றார். மணியடித்ததும் எல்லாரும் சாதுப்பிள்ளைகளைப் போல் வகுப்புக்குப் போய் விட்டார்கள். மாணவர்களிடம் அத்தகைய மரியாதை கலந்த பயத்தை ஊட்டியிருந்தார், அந்தத் தலைமை ஆசிரியர். ஆகையினால் நான் வாழ்விலே முக்கியப் படிப்பினையாகக் கொண்டது இது தான் : 'யாரிடமும் மரியாதையை எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய செயலினால் மரியாதை நம்மைத் தேடி வரவேண்டும்' ('You should not demand respect : but command it by your example')

சிவக்கொழுந்து முதலியார் மனத்திலே பசுமரத்தாணியாக நிற்கிறார்.

அந்தராத்மா

ஆத்மா உள்ளேயிருப்பதால் அந்தராத்மா என அழைக்கப்படுகிறது. ஆத்மாவை நாம் உணருவதில்லை. உடல் ஆசையை நாம் ஆத்மா என அறிகிறோம், உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒருவர் தியாகம் செய்தார் எனப்படுவதுண்டு, அடுத்த கட்டத்தில் ஆசையைப் பூர்த்தி செய்வதை ஆத்மா நிறைவதாக மக்கள் கொள்வதுண்டு, அதே போல் 'நான்' என்பதை ஆத்மாவாகக் கருதுவதும் உண்டு,

இயற்கையாக ஆத்மா விழிப்பாகவும், வெளிப்படையாகவும் உள்ளவர்கள் உண்டு. நம் கண்ணில் படுவது குறைவு. 'நான்' எனும் முனைப்பு அதிகமாக உள்ளவர்களும் குறைவு, ஆனால் நாம் அவர்களில் சிலரைச் சந்தித்திருக்கலாம், அவர்கள் உள்ள இடங்களில் அவர்கள் மட்டுமே முதன்மையாக இருக்க வேண்டும். திருமண வீட்டிற்குப் போனால் மணமகனைவிட அதிக முக்கியத்துவம் எதிர்பார்ப்பவர்கள் இவர்கள். ஆத்ம விழிப்பானவர்கள் உள்ள இடங்களுக்கும், முனைப்புள்ளவர்கள் உள்ள இடங்களுக்கும் வித்தியாசம் கீழ்க்காண்பவை.

ஆன்ம விழிப்புள்ளவர் உள்ள இடங்கள்	நான் எனும் முனைப்புள்ளவர் உள்ள இடங்கள்
1. வேலை அமைதியாக ஆற்றொழுக்காக சந்தோஷமாக, தங்கு தடையின்றி நிறைவேறியபடியிருக்கும்	எல்லா இடங்களிலும் தடங்கல், தட்டுப்பாடு தடை, சண்டை எந்த நிமிஷமும் எழும்.
2. எல்லாரும் பலன் பெறுவர். எல்லாரும் சந்தோஷப்படுவார்கள். எவரும் அடுத்த வரை சந்தோஷப்படுத்த முனைவார்கள்.	எவருக்கும் பலன் கிடைப்பது அரிது. ஒருவருக்குக் கிடைத்தால், பிறர் போட்டி யிட்டு சண்டையைக் கிளப்புவர்.
3. பிரியம் தானே வெளிப்படும். அடுத்த வரை கவனிப்பதில் எவரும் அக்கறை செலுத்துவர். அளவு கடந்த அக்கறையும் தெரியும்.	குத்தலாகப் பேசுவர். மட்டமான பேச்சு காதில் விழும், எல்லார் முகமும் சுண்டி யிருக்கும்
4. வளம் நிறைந்திருக்கும்	வறுமை நிறைந்திருக்கும், வளமைக்கு வழியே இருக்காது.
5. உடல் நலம் குன்றாது	வியாதி வந்தபடியிருக்கும்
6. சுத்தம் உயர்ந்து தெரியும்	குப்பை, அழுக்குக் குறைவிருக்காது

கர்மயோகி

7. வசதி, சௌகரியம் எதிர்பார்ப்பதை விட அதிகமாக இருக்கும்.	எந்த வசதியுமிருக்காது. உள்ள சௌகரியங்களும் குறைந்த படியிருக்கும்.
8. அனைவரும் முகமலர்ந்து காணப்படுவர்	முகம் வாடி, கருகியிருப்பதே சட்டம்
9. வாழ்க்கைத்தரம் உயர்ந்து சிறந்திருக்கும்	வாழ்க்கைத்தரமும், மனவளமும் குறைந்தும் தவறானதாகவுமிக்கும்.
10. கவலையற்ற மனநிலை செயலில் வெளிப்படும்.	பயமும், எந்த நேரம் என்ன நடக்கும் என்ற அச்சமும் மிகுந்திருக்கும்.

நான் எனும் முனைப்பு மிக அதிகமாக அதிகாரமாக உள்ள இடங்களிலும் மேற் சொன்ன நல்ல பலன்கள் நிறைந்திருப்பதுண்டு. அது பண வசதி அதிகமாய் இருப்பதால் அப்படியிருக்கலாம். அங்கும் சந்தோஷம் மலர்ச்சியுள்ள அம்சங்களைக் கவனித்தால், அந்த அம்சத்தில் அவர்களிடம் 'நான்' இருக்காது. அதைக் கடந்து வந்திருப்பார்கள்.

முனிவர்கள் தபோ வலிமையில் மோட்சம் பெறுபவர்கள், காலத்தைக் கடந்து கர்மத்தை விலக்கக் கூடியவர்கள். மோட்சம் பெற 'நான்' என்ற முனைப்பு சில மார்க்கங்களில் அழிக்கப்பட வேண்டும். மற்றவை அதை வலியுறுத்துவதில்லை. இக் குறையிருந்தாலும் அம் மார்க்கங்களுக்கு தவம் பலிக்கும், நக்கீரன் சிவபெருமானை மறுத்தது அதனால்தான். இம் முனிவர்கள் கோபப்பட்டு சபிக்கின்றார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம், 'நான்' என்பது முனைந்துள்ளவருக்கு தபோ வலிமையிருந்தால் அவர் வரம் தரலாம், சபிக்கலாம், அதிகமாகக் கேள்விப்படுவது சாபம். வரம் பெற்றவர்கள் பலரானாலும் சாபமே மனத்தில் நிற்கிறது.

கவிகள், பண்டிதர்கள் எழுதிய நூல்களில் அவர்கள் தங்களை விலக்கி, தாங்கள் எழுதியவை தங்கள் குருவின் ஆசீர்வாதத்தால் எழுதப்பட்டவை, அனுக்கிரஹம் செய்யும் அம்மனால் எழுதப்பட்டவை என முன்னுரையாகக் கூறுவதுண்டு. தம் 150 ஆம் வயதில் ஞானாநந்தர் மயிலம் கோயிலுக்கு எழுதிய கடிதத்தில் அடியில் சிறுவன், ஞானாநந்தன் எனக் கையெழுத்திட்டார். இவை அவையடக்கம் எனப்படும்,

நியாயம், தர்மம், இலட்சியம் என்பவை மேடைக்குரியவை, கட்டுரைகளில் எழுதலாம், நடைமுறையில் அரசாங்க அலுவலகமானாலும், பண்ணையானாலும், வீடானாலும் நலிந்தவருக்கு இன்று நியாயமில்லை, மேலும், அதிகாரத்திலுள்ளவர் செய்யும் அநியாயத்தையும் எடுத்துச் சொல்லும் நிலை இன்று அவர்கட்கில்லை. உள்ளதைச் சொன்னால் உதை விழும், குறைந்த பட்சம் வேலை போகும், எப்படி நீ அதைச் சொல்லலாம்? என் வீட்டிலிருந்து கொண்டு என்னையே எதிர்த்துப் பேசும் தைரியம் எப்படிவரும்? என்ற பலத்த கேள்வி எழும், இந்தக் காலத்திலும், மனைவிக்கும், பிள்ளைகட்கும் அந்த உரிமையில்லாத வீடுகள் அதிகம், அகந்தை பவனி வருகிறது, அது நடக்கிறது.

அகந்தை, சுயநலம், அவசரம், கோபம், எரிச்சல், பொறாமை ஆகியவை சிலரில் கலந்து வெளிப்படுவதுண்டு, இவற்றுள் அகந்தை தவிர மற்ற அனைத்தையும் பலரும் பொறுத்துக்

கொள்வார்கள், அகந்தை கலந்த இடத்தில் எவரும் ஏற்க மாட்டர்கள். மற்ற குறைகளை உலகம் மன்னிக்கும், ஏற்கும்.

நாகரிகமான மனிதன் மட்டமான நடத்தை எனக் கருதுபவை அனைத்தும், அகந்தை வெளிப்படும் இடங்களேயாகும். ஒரு விஞ்ஞானிக்குப் பரிசு கொடுத்தால் அவர் "பலர் சேர்ந்து செய்த கூட்டு முயற்சியின் பயன் இது" என்று பேசுகிறார், ஒரு நாடு அடுத்த நாட்டுக்குப் பொருள் உதவி செய்யும் பொழுது நாங்கள் உதவுகிறோம் என்று பொதுவாகக் கூறுவதில்லை. எங்கள் இரு நாட்டாரும் ஒத்துழைக்கின்றோம் என்பார்கள். கல்லூரியில் முதலாக வந்த மாணவன், நாட்டிலேயே முதற் பரிசு பெற்றாலும் அதைத் தன் சொந்தத் திறமையால் பெற்றதாகப் பேசுவதில்லை. அப்பெருமை என் கல்லூரியைச் சாரும் எனவே பேசுவது வழக்கம்.

நாகரிகம் அகந்தையை விலக்குகிறது.

அகந்தையை விலக்குவதே அந்தராத்மா.

அகந்தை விலகி, ஆத்மா விழிப்பதற்குப் பல அடையாளங்கள் சொல்லலாம்.

ஆத்ம விழிப்பு	அகந்தையின் முனைப்பு
1. காரியம்தானே நடப்பது	நாமே முனைந்து, முயன்று பெறுவது
2. மனம் மௌனமாக இருப்பது	எண்ண அலைகள் நிறைவது
3. அமைதியாக அமர்ந்திருப்பது	ஓரிடமாக உட்கார முடியாதது
4. மலர்ந்த முகம்	வாடிய வதனம்
5. நிலைந்த உலகம்	கவலை மனத்தை நச்சரிப்பது
6. நம்மைப்பற்றிப் பிறர் குறை கூற நினைப்பதில்லை	நமக்கு எல்லார் மீதும் அதிகமான குறை
7. பேச்சில் நிதானம்	படபடப்பு
8. நம் மனத்திலுள்ளதைப் பிறர் கேட்டு நிறைவேற்றுவது	கேட்டுப் பெறுவது
9. திருப்தி	அதிருப்தி
10. பேசும் விஷயங்கள் உயர்ந்ததாக இருப்பது	சில்லறை விஷயம் முக்கியமாவது
11. நம்மைச் சுற்றியுள்ளவர் வாழ்வு வளம் பெறுவது	நம்மைச் சுற்றிப் பிரச்னைகள்
12. கனவில் அன்னை தரிசனம்	கெட்ட கனவு
13. தூக்கம் தியானம் போலிருத்தல்	தூங்கி எழுந்தால் களைப்பாக இருப்பது
14. எதிர்காலத்தில் நம்பிக்கை	இருண்ட எதிர்காலம்

●

சங்கப் பலகை

வள்ளுவர் பார்வையில் பெரியார்

அறிவியல் சிந்தனைகள் தமிழ் மொழியில் பெருக்கெடுக்க வேண்டுமென்னும் ஆர்வமும், அயராத ஊக்கமும் உடைய அறிஞர் மு. துரைராசன், பெருநாவலர் திருவள்ளுவரின் திருவாக்கை அடித்தளமாகக் கொண்டு, பெரியார் ஈ.வே.ரா.வின் செயற்கரிய செயல்களை, நான்கு அத்தியா யங்களாக எளிய, இனிய தமிழில் வெளிப்படுத்தியுள்ள அழகிய திருநூல்!

கருத்துகளைக் குறுகத் தரித்த குறள்போல, பெரியாரின் பெருமிதம் கொள்ளத் தக்க பெருவாழ்வை, படிப்பவர் நெஞ்சுள் விதைக்கும் வித்தகம், நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் மிளிர்கிறது. காணத்தக்க செறிவுடைய நாற்பதே பக்கம் கொண்ட இச்சிறுநூலின் அருமை - ஆசிரியர் மு. துரைராசனின் எழுத்து பெற்றுள்ள தனிப் பெருமை.

நூலின் அமைப்பும், அச்சும் பாராட்டத்தக்கது!

(ஆசிரியர் : மு. துரைராசன், வெளியீடு : கீதா பதிப்பகம், 26-4, Q பிளாக், அண்ணாநகர், சென்னை - 600 040. பக்கங்கள் : 48 விலை: ரூ.8.00) ●

● உங்கள் உடலும் உணவுப் பழக்கமும்

ஆசிரியர் : நா.ரா. பண்டரி நாதன்
விலை : ரூ. 24. பக்கங்கள் : 128
நல்ல உணவுப் பழக்கத்தின் மூலம் நம் உடலைப் பாதுகாப்பதன் முறைகளை அட்டவணையிட்டுக் காட்டும் பயனுள்ள முயற்சி.

● உடல் நல மருந்துவம் - தமிழ்வாணனின் பதில்கள்

தொகுப்பாசிரியர் : டாக்டர் கே.கே இராமலிங்கம். விலை : ரூ 27. பக்கங்கள் : 144.
பல்வேறு கேள்விகளின் மூலம் உடல் நல மருத்துவத்தை விவரிக்கும் பதில்கள்.

● பழங்களின் மருத்துவக் குணங்கள்

ஆசிரியர் : கே.எஸ். சுப்ரமணி
விலை : ரூ 23. பக்கங்கள் : 122
நமக்கு அன்றாடம் கிடைக்கும் சாதாரணப் பழங்கள் கூட நம் உடலின் பிணிகளுக்கு மருந்தாகும் ரகசியத்தை நூலாசிரியர் நன்கு விளக்குகிறார்.

● வீட்டில் நோயாளிகளைப் பராமரிப்பது எப்படி?

ஆசிரியர் : எம். மோகன்தாஸ்
விலை : ரூ 27. பக்கங்கள் : 144.
நோயாளிகளைப் பராமரிப்பது தனிக் கலை. அதை எளிய முறையில் இந் நூல் புரிய வைக்கிறது.

● இந்திய மாநில நூல் வரிசை - அசாம் மாநிலம்

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை: ரூ 20. பக்கங்கள் : 100.
அசாம் மாநிலத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள இந் நூல் உதவும்.

● இந்திய மாநில நூல் வரிசை - ஜம்மு - காஷ்மீர்

ஆசிரியர் : ஜனார்த்தனம்
விலை : ரூ 23. பக்கங்கள் : 124.
கவின் மிகு காஷ்மீரத்தை அறிமுகப்படுத்தி பல்வேறு விவரங்களுடன் பதிய வைக்கும்.

● இந்திய மாநில நூல் வரிசை: ஹிமாசலப் பிரதேசம்

ஆசிரியர் : ஜனார்த்தனம்
விலை ரூ. 20. பக்கங்கள் : 104.
சின்ன சின்ன விஷயங்களைக் கூட விவரித்து ஹிமாசலப் பிரதேசத்தைப் புரிய வைக்கும் நூல்.

● இந்திய மாநில நூல் வரிசை : டெல்லி

ஆசிரியர் : ஜனார்த்தனம்
விலை : ரூ 37. பக்கங்கள் 196.
தலைநகர் டெல்லி பற்றிய வரலாற்றுடன் முக்கிய தகவல் பெட்டகமாக இந்நூல் மிளிர்கிறது.

● உலக நாடுகள் வரிசை : சிங்கப்பூர்

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை: ரூ 23. பக்கங்கள் : 124
வண்ணப் படங்களுடன் சிங்கார நாடாம் சிங்கப்பூரை, அதன் வளர்ச்சியைப்பற்றி அபாரமான செய்திகளைக் கொண்டுள்ளது.

● சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

ஆசிரியர் : விட்டலாபுரம் ராஜன்
விலை : ரூ 15. பக்கங்கள் : 80
17.4.98 முதல் 9.6.2000 வரையிலான சனிப் பெயர்ச்சிப் பலன்கள். 12 இராசிகளுக்கான பொதுப் பலன் களும் 27 நட்சத்திரங்களுக்கான சிறப்புப் பலன்களும் கொண்டது.

● முயன்றால் முடியும்

ஆசிரியர் : லேனா தமிழ்வாணன்
விலை : ரூ. 15. பக்கங்கள் : 128.
'முயன்றால் *மட்டுமே*' முடியும்! என்பதை அழுத்தமாகச் சொல்லியுள்ள அருமையான நூல். கையடக்க அளவில் எப்போதும்

பயன்படும் வகையில் வெளியிடப் பட்டுள்ளது இந்நூலின் தனிச் சிறப்பு.

● மீன் பதனப் பொருள்களும் பயன்படுத்தும் முறைகளும்

ஆசிரியர் : ப. வேலாயுதம்
விலை : ரூ. 17. பக்கங்கள் : 92

மீன் பதன முறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள் வதற்கும், தொழில் ரீதியில் மீன் பொருள்களை உற்பத்தி செய்யத் தேவையான தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்கும், மீன் வள அறிவியல் மாணவர்களுக்கும், மீன் வள விரிவாக்க அலுவலர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் பெரிதும் பயன்படும்.

● டியூஷன் சென்டர் நடத்துவது எப்படி?

ஆசிரியர் : சா. எழிலன்
விலை : ரூ. 24. பக்கங்கள் : 128.

வெற்றிகரமாக டியூஷன் எடுப்பது எப்படி? என்பதில் தொடங்கி சிறந்த டியூஷன் சென்டர் என்ற பெயர் பெறுவது எப்படி? என்பது வரை பல்வேறு தலைப்புகளில் நுணுக்கமான செய்திகளை எளிமையாக விவரிக்கும் நூல்.

● விரக்தியை விரட்டுங்கள்

ஆசிரியர் : இராம. சுப்பிரமணியன்
விலை : ரூ. 40. பக்கங்கள் : 216.

விரக்தியின் பல வகையான தன்மைகளையும் அவற்றை விரட்டும் வழிகளையும் இந்நூல் விளக்கி மன தைரியத்தைக் கொடுக்கும்.

● ஓர் இந்து தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்

ஆசிரியர் : சிவலை இளமதி
விலை : ரூ. 48. பக்கங்கள் : 256


இந்து மதத்தின் வரலாறு, அதன் மூலாதாரமாக விளங்கும் வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள், உபநிஷத்துகள், சுருதிகள், இதிகாசங்கள் புராணங்களுடன், ஒவ்வோர் இந்துவும் அனுஷ்டிக்க வேண்டிய ஆசாரங்கள், முக்கியமான இந்துப் பண்டிகைகள் பற்றிய விவரங்களைக் கொண்ட தொகுப்பு.

● போப்பாண்டவர்கள் வரலாறு

ஆசிரியர் : நா.ரா. பண்டரிநாதன்
விலை : ரூ. 30. பக்கங்கள் : 160.

கிறிஸ்துவின் காலத்திலிருந்து இன்று வரையில் தொடர்ந்து கொண் டிருக்கும் போப்பாண்டவர்களின் வரலாறு, ஏறக்குறைய 2000 ஆண்டுகளைக் கொண்டுள்ளது. அவற்றை எளிதில் புரிய வைக்கும் முயற்சி இது!

மேற்படி நூல்களை வெளியிட்டோர்:
மணிமேகலைப் பிரசுரம்,
4 தணிகாசலம் சாலை,
தி.நகர், சென்னை - 600 017





திரண்டு
வரும் மேகம்
கலைத்து
விடும் காற்று
வானம்
பார்த்திருக்கும் பூமி

- விக்ரமாதித்யன்

சங்கப்பலகை

குழந்தை இலக்கியத் துறைக்குப் பல்லாண்டுகளாகப் பொலிவூட்டி வருகின்ற கவிஞர் ரா. பொன்ராசன், பேராசிரியர் க. இராமச்சந்திரன் ஆகிய பெருமக்கள் இணைந்து "வெற்றியின் இரகசியம்" என்னும் குழந்தைகளுக்கான சிறுகதைத் தொகுப்பு நூலை உருவாக்கி, 'ஜெயவிலாஸ் காந்தி' எனப் போற்றப் பெறுகின்ற அமரர் சாது தா. இராமசாமி நாயக்கர் அவர்களுக்குக் காணிக்கை ஆக்கியுள்ளனர்.

சிறுவர் தம் உள்ளங்களில் சீரிய எண்ணங்கள் தழைத்துச் செழிக்குமாறு, தொகுப்பில் பதினெட்டுச் சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. டாக்டர் பூவண்ணன், டாக்டர் அய்க்கண், கொ. மா. கோதண்டம், தேவி நாச்சியப்பன், ரா. பொன்ராசன், அருப்புக்கோட்டை செல்வம் போன்ற புகழார்ந்த படைப்பாளர்களும், புகழீட்ட உள்ள எழுத்தாளர்களும் தொகுப்பில் சிறுகதைகளை வழங்கியுள்ளனர். பேராசிரியர் அ. சீநிவாசன், டாக்டர் ரா. ராகவன் ஆகியோர் நூலை மதிப்பிட்டு, மகிழ்ந்து அணிந்துரை அளித்துள்ளனர்.

மணிமணியான கதைகள், குழந்தை மனங்களில் அணிஅணியாக அறிவறியும் அரிய கருத்துகளைத், துளிர்க்கச் செய்யும் வல்லமை கொண்டவை. படங்களுடன், குழந்தைகளுக்கேற்ற பாங்குடன் 'கற்பகம் புத்தகாலயம்' வெளியிட்டுள்ள இந்நூல் அனைத்து நூலகங்களிலும் இடம் பெறத்தக்கது.

("வெற்றியின் இரகசியம்" தொகுப்பாசிரியர்கள் : பேராசிரியர் க. இராமச்சந்திரன், கவிஞர் ரா. பொன்ராசன், பக்கங்கள் : 128, விலை: ரூ.25, வெளியீட்டாளர்கள் : கற்பகம் புத்தகாலயம், 18 ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600 017) ●

உங்கள் ராசி பலன்

ஜோதிஷ பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்

கிரக பாதசாரம்
சூரியன் - அசுவினி 1
சந்திரன் - விசாகம் 1
செவ்வாய் - அசுவினி 3
புதன் - ரேவதி 1
குரு - பூரட்டாதி 1
சுக்கிரன் - சதயம் 3
சனி - ரேவதி 4
ராகு - பூரம் 1
கேது - சதயம் 3.

புதவ சனி	சூரி செவ்		
குரு, சுக் கேது	இம்மாத கிரக நிலை		
			ராகு

கிரக மாறுதல்
17-4-1998 முதல் மேஷ-சனி.
21-4-1998 முதல் புதன்-வக்கி நிவர்த்தி.
28-4-1998 முதல் மீன-சுக்கிரல்
10-5-1998 முதல் மேஷ-புதன்.

மேஷம் : *(அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)*

ராசிநாதன் செவ்வாய் ஜன்ம ராசியில் சூரியனுடன் கூடியிருப்பதால் அதிகம் சங்கடம் இராது. முக்கியமான எண்ணங்கள் ஒன்றிரண்டு நிறைவேறும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்த வர்கள் சுபிட்சம் காண்பார்கள். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். ஸ்பெகுலேஷன் துறைகள் லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். உஷ்ணாதிக்கத்தால் பாதிக்கப் பட நேரலாம் என்பதால் எச்சரிக்கை தேவை. 5-ல் உள்ள ராகு சிறுசிறு சலனங்களை உண்டுபண்ணுவார் என்றாலும் சமாளிப்பீர்கள். குரு, சுக்கிரன், கேது ஆகியோர் லாப ஸ்தானத்தில் உலவுவதால் பொருள்வரவு கூடும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். சுபகாரியங் களில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். குடும்பத்தில் குதூகலம் கூடும். கேளிக்கை, உல்லாசங்களில் பங்கு கொள்ள வாய்ப்புண்டு.

கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்பட்டு, விலகும். பயணத்தால் ஒரு காரியம் நிறைவேறும். புதன் பலம் குறைந்திருப்பதால் வியாபாரிகள் விழிப்புடன் செயல்படுவது நல்லது. *17*-ஆம் தேதி முதல் *12*-ல் உலவிக் கொண்டிருந்த சனியானவர் உங்கள் ஜன்ம ராசிக்கு இடம் மாறுகிறார். ஏழரைச் சனியின் நடுப்பகுதி காலம் இது என்பதால் சனிப் பிரீதி தொடர்ந்து செய்துவருவது நல்லது. அதன்மூலம் அவரால் அதிகம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். *28*-ஆம் தேதி முதல் சுக்கிரன் *12*-ஆமிடம் மாறுகிறார். இதனால் சுக, சௌக்கியங்கள் கூடும். வாழ்க்கை வசதிகளுக்காக ஒரிரு செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். கலைஞர்கள், மாதர்கள் ஆகியோருக்கெல்லாம் தொடர்ந்து நன்மைகள் ஏற்படும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீ போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அனுகூலமா மாதமிது. ஏப்ரல் *17, 19, 22, 24, 26* (பகல்), *29*, மே *1* (பிற்பக *5, 6, 8, 10* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமே தென்கிழக்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப ராசி காரர்கள் உதவுவார்கள். *3, 6, 7* எண்கள் அதிர்ஷ்டமான

ரிஷபம் : *(கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ஆம் பாதம் முடிய)*

புதன், கேது ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்க அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். குடும்பத்தில் அமை காணலாம். பக்தி மார்க்கத்தில் நாட்டம் கூடும். பிற மொ மதக்காரர்கள் ஒரிரு நன்மைகளைப் புரிவார்கள். நண்பர்க உற்றார்-உறவினர்கள் மூலமாகவும் அளவோடு ந உண்டாகும். வியாபாரிகள், கணிதத்துறையாளர்க பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தங்க திறமைக்குரிய பயனைப் பெற்று வருவார்கள். இதர கிரகங்க அனுகூலமாக உலவாததால் அலைச்சல், பொருளாத நிலையில் சறுக்கல், அரசாங்கத்தாரால் பிரச்சினை, உஷ்ண திக்கத்தால் பாதிப்பு ஆகியவை ஏற்படும். வீண்செலவுக இழப்புக்கள் ஆகியவை ஏற்படுமாதலால் கைப்பொருளை பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. இடமாற் நிலைமாற்றம் ஆகியவை சிலருக்கு ஏற்படும். வெளி வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் அனுகூலமிராது.

17-ஆம் தேதி முதல் சனி *12*-ஆமிடம் மாறுவதா சூரியன், செவ்வாய் ஆகியோருடன் கூடுவதா சங்கடங்கள் என்பவை சற்று கூடும். பக்குவத்துடன் சமா பது நல்லது. செய்துவரும் தொழில் எதுவானாலும் அ முழு அக்கறை செலுத்தி, அயராது பாடுபடுவது அவ மாகும். அதன்மூலம் சரிவுக்கு ஆளாகாமல் மீளலாம். *28*- தேதி முதல் ராசிநாதன் சுக்கிரன் *11*-ஆமிடம் மாறி, வ

பெறுவதால் உடல் ஆரோக்கியம் சீராகும். எதிர்ப்புக்களைச் சமாளிக்கிற சக்தி பிறக்கும். மாதர்களுக்கும், கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் மந்தநிலை விலகி, முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைத்து வரும். மே 10-ஆம் தேதி முதல் புதன் 12-ஆமிடம் மாறுவதால் வியாபாரிகளும், மாணவர்களும் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். ஏப்ரல் 15, 22, 24, 26 (பகல்), 29, மே 1 (பிற்பகல்), 5, 6, 8, 10, 14 (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத்திசை நலம் தரும். கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிரன் ஆகியோர் 9-ல் உலவுவதாலும், சூரியன், செவ்வாய், புதன், சனி, ராகு, ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பிற மொழி, மதக்காரர்களது தொடர்பு ஆக்கம் தரும். வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் வர்த்தகம் ஆதாயம் கொண்டுவரும். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிட்டும். பொருளாதாரநிலையில் வளர்ச்சி காணலாம். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் உண்டாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். அலுவலகப்பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கெல்லாம் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிட்டும். வேலையில்லாதவர்கள் தகுந்ததொரு வாய்ப்பைப் பெறுவார்கள். கலைத்துறை ஆக்கம் தரும். பெண்களுக்கு முன்னேற்றமான பாதை புலப்படும். திறமை வீண்போகாது. நூதனமான முயற்சிகள் கைகூடும். கடன் உபத்திரவம் குறையும். வரவேண்டிய பாக்கிப் பணம் வசூலாகும்.

எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு விவகாரங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி காணலாம். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோருக்கெல்லாம் செல்வாக்கும் மதிப்பும் உயரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் கிடைத்துவரும். நிலபுலங்கள் லாபம் தரும். புதிய சொத்துக்களின் சேர்க்கை நிகழும். கேளிக்கை உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். 17-ஆம் தேதி முதல் சனி 11-ஆமிடம் மாறுவது குறிப்பிடத்தக்கது. தந்தையார்ஜிதச் சொத்துக்களைப் பெற வாய்ப்புக்கூடிவரும். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலம் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடிவரும். திருமணம் ஆனவர்களுக்கு இல்வாழ்க்கை சிறக்கும். பொறாமைக்காரர்கள் உங்களை விட்டு விலகுவார்கள். 28-ஆம் தேதி முதல் சுக்கிரன் 10-ஆமிடம் மாறினாலும் அவரால் அதிகம் சங்கடமிராது. மே 10 முதல் ராசிநாதன் புதன் 11-ஆமிடம் மாறுவது அனுகூலமானதாகும். நூதன முயற்சிகள் கூடிவரும். ஏப்ரல் 15, 17, 22, 24, 26 (பகல்), 29, மே 1 (பிற்பகல்) 5, 6, 8, 10, 13, 14 (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப, மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

சூரியன், செவ்வாய் ஆகியோர் 10-ல் இருப்பது சிறப்பானதாகும். சுக்கிரனும் நலம் புரியக்கூடிய நிலையில் உலவுகிறார். இதனால் உங்கள் தோற்றப்பொலிவு கூடும். செயலில் வேகம் பிறக்கும். எடுத்த காரியங்களைத் திறம்பட நிறைவேற்றி, மற்றையோரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிர்வாகத்திறமை கூடும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். செய்துவரும் தொழில் எதுவானாலும் அதில் வளர்ச்சி காணலாம். நிலம், மனை, வீடு, வாகனங்களால் ஆதாயம் கிடைத்துவரும். புதிய பொருட்களின் சேர்க்கையும் நிகழும். மாணவர்கள் மந்தநிலை விலகப்பெறுவார்கள். எலக்ட்ரானிக், எலக்ட்ரிக்கல் சம்பந்தப்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும்.

சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வரவேற்பு கூடும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். தந்தையாலும் அனுகூலம் உண்டாகும். புதிய பொறுப்புக்கள் வந்துசேரும். நற்காரியங்களில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். வேற்று மொழி, மதக்காரர்களால் சிறுசிறு சோதனைகள் சூழும் என்றாலும் சமாளிப்பீர்கள். 17-ஆம் தேதி முதல் சனி 10-ஆம் இடம் மாறுவதால் உங்கள் திறமைக்குரிய பயன் கிடைத்துவரும். 28-ஆம் தேதி முதல் சுக்கிரபலம் கூடுவதால் வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். திரவப் பொருட்கள் ஆதாயம் கொண்டுவரும். 10-ஆம் தேதி முதல் புதன் 10-ஆமிடம் மாறுவதால் வியாபாரத்தில் வளர்ச்சி காண வழிபிறக்கும். குருப் பிரீதி செய்வது நல்லது. பெரியவர்களிடம் பணிவன்போடு பழகுவது அவசியமாகும். ஏப்ரல் 15, 17, 24, 26 (பகல்), 29, மே 1 (பிற்பகல்), 5, 6, 8, 10, 13, 14 (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. தெற்கு, கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 9-ல் இருந்தாலும், செவ்வாயுடன் கூடி பலம் பெற்றிருப்பதால் நலம் புரிவார். குருபலமும் சிறப்பாக இருக்கிறது. இதனால் உங்கள் எண்ணங்கள் ஈடேற

வாய்ப்புக்கள் கூடிவரும். அரசு விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் காணலாம். நிர்வாக ஆற்றல் பளிச்சிடும். நல்லவர்கள் நலம் புரிய முன்வருவார்கள். பொருளாதார நிலை உயரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் உருவாகும். திருமணம் ஆனவர்கள் மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவார்கள். தொலைதூரத் தொடர்பு பயன்படும். வெளிநாட்டுத் தொடர்புடன் வர்த்தகம் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். எலக்ட்ரானிக், எலக்ட்ரிக்கல், இஞ்சினீயரிங் சம்பந்தப்பட்ட இனங்களில் ஈடுபாடு உள்ளவர்கள் சுபிட்சம் காண்பார்கள். அலுவலகப் பணியாளர்களது நோக்கம் நிறைவேறும்.

மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலம் உண்டாகும். அலைச்சல், உழைப்பு ஆகியவை கூடுமென்றாலும் அதற்கான பயன் கிடைக்கத் தவறாது. 17-ஆம் தேதி முதல் இதுவரையிலும் உங்கள் ராசிக்கு 8-ல் உலவிக்கொண்டிருந்த சனி 9-ஆமிடம் மாறுகிறார். இதுவும் கோசாரப்படி விசேடமாகாது என்றாலும் மோசமான விளைவுகள் என்பவை சற்று குறையும். 28-ஆம் தேதி முதல் சுக்கிரபலம் கூடுவதால் கலைத்துறையினருக்கு வெளிச்சமான பாதை புலப்படும். மாதர்களது நிலைமையில் வளர்ச்சி தெரியவரும். செய்தொழிலில் அபிவிருத்தி காண வாய்ப்புக்கள் கூடிவரும். கணிதம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் செயல்படுவது நல்லது. ஏப்ரல் *15, 17, 22, 26* (பகல்), *29*, மே *1* (பிற்பகல்), *5, 6, 8, 10, 13, 14* (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத்திசைகள் அனுகூல மானவை. கும்ப, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 3, 9* எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி: (உத்திரம் 2-ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி 6-ல் உள்ள கேது ஒருவரே அனுகூலமான நிலையில் உலவுகிறார். இதர கிரகங்கள் அனுகூலமாக இல்லை. இதனால் உங்கள் எண்ணங்கள் ஈடேற இயலாமல் தடைகள் ஏற்படும். மனத்தில் நிம்மதி குறையும். பொருளா தாரநிலை சாதாரணமாகவே காணப்படும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் சங்கடங்கள் சூழும். 8-ல் சூரியன், செவ்வாய் ஆகியோர் உலவுவதாலும், சனி பலம் குறைந் திருப்பதாலும் விபத்துக்குக் காரணமுண்டு; எச்சரிக்கை. குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் ஏற்படும். விட்டுக் கொடுத்துப் பழகிவருவது நல்லது. எதிலும் அகலக்கால் வைக்கலாகாது. புதிய முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. மாமூலாகச் செய்துவரும் காரியங்களிலும் கூட வேகத்தைக் குறைத்துக் கொண்டு விவேகத்தைக் கூட்டிக் கொள்வது அவசியமாகும். வீண்வம்பு, வழக்குகளில் ஈடுபடலாகாது. செலவுகள் கூடுமாதலால் சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை.

உடன்பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும். கணவன், மனைவியரிடையே சுமுகமான உறவு இராது. பொறாமைக்காரர்களால் அவதிக்கு ஆட்பட நேரலாம். அலுவலகப்பணியாளர்கள், தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள், வியாபாரிகள் ஆகியோர் தங்கள் பொறுப்புணர்ந்து கடமையாற்றினால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். 17-ஆம் தேதி முதல் சனி 8-ஆமிடம் மாறுவது விசேடமாகாது. இதனால் குழப்பங்கள் சற்று அதிகரிக்கும். உடல் ஆரோக் கியத்தில் தகுந்த கவனம் தேவைப்படும். உஷ்ணாதிக்கத்திற்கு இடம் தரலாகாது. மே *10* முதல் புதன் 8-ஆமிடம் மாறுவதால் அளவோடு நலம் விளையும். பொதுவாக இந்த ராசிக்காரர்கள் கிரகப் பிரீதி செய்வது அவசியமாகும். இறைவழிபாட்டில் முழு அக்கறை செலுத்தினால் அமைதி காணலாம். ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். ஏப்ரல் *15, 17, 19* (முற்பகல்), *22, 24, 29*, மே (பிற்பகல்), *5, 6, 8, 10, 13, 14* (பிற்பகல்) தேதிகள் சுமாரானவை. வடமேற்குத்திசை நலம் தரும். துலா, மிதுன ராசிக்காரர்கள் ஓரளவு உதவுவார்கள். 7-ஆம் எண் அதிர்ஷ்டமானது.

துலாம்: (சித்திரை 3-ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)

புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு ஆகியோருடைய சஞ்சாரம் சிறப்பாக இருப்பதால் உங்கள் அறிவாற்றல், தோற்றப்பொலிவு, செயல்திறமை, வாக்குவன்மை ஆகியவை பளிச்சிடும். பொருளாதாரநிலையில் வளர்ச்சி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். நல்லவர்களும், வல்லவர்களும் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவார்கள். ஸ்பெகு லேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெண்களுக்கு உற்சாகமான பாதை புலப்படும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்துவரும். உடன்பிறந்தவர்கள் உதவு வார்கள். வியாபாரம் பெருகும். புதிய முயற்சிகளும் கூடிவரும். கணிதம், எழுத்து, விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான பாதை தெரியவரும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்கள் வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும்.

அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பயணத்தால் பயன் உண்டாகும் என்றாலும் பாதுகாப்பும் தேவை. 17-ஆம் தேதி முதல் சனி 7-ஆமிடம் மாறுவது விசேடமானதாகாது. வாழ்க்கைத் துணைநலனில் கவனம் தேவைப்படும். கூட்டாகத் தொழில் செய்பவர்களுக்குப் பங்கு தாரர்களால் சிறுசிறு பிரச்சினைகள் சூழும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம் விழிப்புடன் பழகுவது அவசியமாகும். உஷ்ணாதிக்கத்திற்கு இடம் தரலாகாது. 28-ஆம் தேதி முதல் ராசிநாதன் 6-ஆமிடம் மாறுவது விசேடமானதாகாது என்றாலும் ராசியைக் குரு

பார்ப்பதால் மோசமான விளைவுகள் ஏற்படா வண்ணம் காக்கப்படுவீர்கள். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவற்றின் மூலம் மனத்தில் தெளிவும், நம்பிக்கையும் பிறக்கும். 10-ஆம் தேதி முதல் வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. ஏப்ரல் 15, 17, 22, 24, 26, (பகல்), மே 1 (பிற்பகல்), 5, 6, 8, 10, 13, 14 (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 4, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

ராசிநாதன் செவ்வாய் வலுத்திருப்பதாலும், சூரியன், சுக்கிரன், ராகு ஆகியோர் அனுகூலமாக இருப்பதாலும் உங்கள் ஆற்றல் பளிச்சிடும். தேக ஆரோக்கியம் சீராக இருந்துவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். அரசியல்வாதிகள் மதிப்பு உயரப் பெறுவார்கள். நிர்வாகத்திறமை கூடும். செய்துவரும் தொழிலில் அபிவிருத்தி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் கூடப் பெறுவார்கள். பெண்களுக்கு முன்னேற்றமான பாதை புலப்படும். புதிய ஆடை, அணிமணிகள் சேரும். வாழ்க்கை வசதிகள் கூடும். கேளிக்கை, உல்லாசங்களிலும்; விருந்து உபசாரங்களிலும் பங்கு கொள்ள வாய்ப்புக் கூடிவரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு பயன்படும். நிலம், மனை, வீடு, வாகனங்களின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ பெறலாம்.

வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். இயந்திரப் பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். 17-ஆம் தேதி முதல் சனி 6-ஆமிடம் மாறுவது குறிப்பிடத்தக்கதாகும். சுக, சௌக்கியங்கள் பெருகவும், மனச்சலனங்கள் விலகவும் வாய்ப்புக் கூடிவரும். செய்துவரும் தொழிலில் அபிவிருத்தி காணச் சந்தர்ப்பம் உருவாகும். 28-ஆம் தேதி முதல் சுக்கிரன் 5-ஆமிடம் மாறுவதால் மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். ஆடவர்களுக்குப் பெண்டிரால் அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். மற்றையோரால் பாராட்டப்படவும் செய்வீர்கள். மக்கள்நலம் சீர்பெறும். வழக்கு, விவகாரங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி காணச் சந்தர்ப்பம் உருவாகும். மே 10 முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். ஏப்ரல் 15, 17, 19 (முற்பகல்), 22, 24, 26 (பகல்) 29, (பகல்), மே 5, 6, 8, 10, 13, 14 (பிற்பகல்) தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தென்மேற்கு, கிழக்கு, தெற்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப, மீன, மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 4, 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)

புதன், சுக்கிரன், கேது ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் அறிவாற்றல், தோற்றப்பொலிவு, செயல் திறமை ஆகியவை பளிச்சிடும். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் ஆகியோர் ஓரளவு உதவுவார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குத் திறமைக்குரிய பயன் கிடைத்துவரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகள் ஆக்கம் தரும். கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டு வரும். பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் தெளிவு பிறக்கும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைத்துவரும். மக்கள்நலம் சீராக இருந்துவரும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஏற்றம் பெறுவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். ஸ்பெகுலேஷன் துறைகள் அளவோடு லாபம் தரும்.

17-ஆம் தேதி முதல் சனி 5-ஆமிடம் மாறுகிறார். கோசாரப்படி சனி 5-ல் உலவுவதும் சிறப்பானதாகாது. என்றாலும் அர்த்தாஷ்டம சனியின் பிடியிலிருந்து விடுபடுவதால் சங்கடங்கள் என்பவை குறையத் தொடங்கும். 28-ஆம் தேதி முதல் சுக்கிரன் 4-ஆமிடம் மாறுவதால் சுக, சௌக்கியங்கள் கூடும். வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு உண்டாகும். பெண்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். 10-ஆம் தேதி முதல் புதன் 5-ஆமிடம் மாறுவதால் மறதிக்கு ஆட்பட நேரலாம். மனத்தில் சிறுசிறு குழப்பங்களும் சூழும். மாணவர்கள் படிப்பில் முழு அக்கறை செலுத்துவது நல்லது. வியாபாரிகள் விழிப்புடன் செயல்படுவது அவசியமாகும். தொலைதூரத் தொடர்பால் அதிகம் அனுகூலமிராது. பொருள் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் எச்சரிக்கை தேவை. ஏப்ரல் 15, 17, 19 (முற்பகல்), 22, 24, 26 (பகல்), 29, மே 1 (பிற்பகல்), 5, 6, 8, 10, 13, 14 (பிற்பகல்), தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்குத்திசைகள் நலம் தரும். கும்ப, மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

குரு, சுக்ரன் ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் பேச்சுவன்மை, செயல்திறமை ஆகியவை பளிச்சிடும். பணநடமாட்டம் கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். விருந்து உபசாரங்களிலும், கேளிக்கை, உல்லாசங்களிலும் ஈடுபாடு உண்டாகும். நணபர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு நலம் தரும். மக்களாலும், பெற்றோராலும் அனுகூலம் உண்டாகும். பணம் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு ஆதாயம் கூடுதலாகக் கிடைத்து

வரும். ஸ்பெகுலேஷன் துறைகள் லாபம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். அலுவலகப் பணியாளர்களது நோக்கம் நிறைவேறும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும்.

17-ஆம் தேதி முதல் சனி 4-ஆமிடம் மாறுவதாலும், சூரியன், செவ்வாய் ஆகியோருடன் கூடுவதாலும் உடல் நலனில் கவனம் தேவைப்படும். வீண் அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. 2-ல் கேது இருப்பதால் குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்பட்டு, விலகும். பேச்சில் நிதானம் தேவை. 28-ஆம் தேதி முதல் கலைத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். முன்னேற்றத் திற்கான தகவல் வந்து சேரும். தகவல் தொடர்புத்துறை களைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்புக் கூடும். மே 10-ஆம் தேதி முதல் புதன் 4-ஆமிடம் மாறுவதால் வியாபாரி களுக்கும், மாணவர்களுக்கும் மந்தநிலை அகலும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். ஏப்ரல் *15, 19 (முற்பகல்), 22, 24, 26 (பகல்) 29*, மே *1 (பிற்பகல்), 8, 10, 13, 14 (பிற்பகல்)*, தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். *3, 6* எண்கள் அதிர்ஷ்ட மானவை.

கும்பம் : (அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)

சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். எண்ணங்கள் ஈடேறச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி காண வழிபிறக்கும். போட்டிப் பந்தயங்களில் ஈடுபட்டுப் பரிசுகளும், விருதுகளும் பெற வாய்ப்புக் கூடிவரும். அரசியல்வாதிகள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். நிர்வாகத்திறமை கூடும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்த வர்கள் சுபிட்சம் காண்பார்கள். இயந்திரப்பணியாளர்களது நோக்கம் நிறைவேறும். இஞ்சினீயர்கள் வெற்றி நடை போடுவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்புண்டாகும். பெற்றோரால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத் துணைநலம் சிறக்கும். கூட்டுத்தொழிலில் அபிவிருத்தி காணலாம். கணிதம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள்.

17-ஆம் தேதி முதல் ராசிநாதன் சனி 3-ஆமிடம் மாறுவது விசேடமானதாகும். இதனால் உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். சங்கடங்கள் என்பவை விலகி, உற்சாகமான சூழ்நிலை உருவாகும். முக்கியமான எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். திறமை வீண்போகாது. 28-ஆம் தேதி முதல் சுக்கிரபலம் கூடுவதால் பொருள்வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். விருந்து உபசாரங்களில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு அதிகமாகும். அதனால் மனமகிழ்ச்சியும் உண்டாகும். புதிய ஆடை, அணிமணிகள் சேரும். திரவப்பொருட்கள் லாபம் தரும். மே 10 முதல் புதபலம் குறைவதால் வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்துவது அவசியமாகும். உடன்பிறந்தவர்களது நலனில் கவனம் தேவைப்படும். ஏப்ரல் *15, 17, 19 (முற்பகல்), 22, 24, 26 (பகல்), 29*, மே *1 (பிற்பகல்), 5, 6, 10, 13, 14 (பிற்பகல்)* தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, தெற்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 6, 9* எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

சுக்கிரன், ராகு ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதால் பிரச்சினைகளைச் சமாளிக்கிற சக்தி பிறக்கும். வேற்று மொழி, மதக்காரர்கள் உதவ முன்வருவார்கள். கலைத்துறை ஊக்கம் தரும். மாதர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். போக்குவரத்துச் சாதனங்கள் லாபம் தரும். ஏற்றுமதி-இறக்குமதி துறைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். இதர கிரகங்கள் கோசாரப்படி அனுகூலமாக உலவாததால் சிறுசிறு இடையூறுகளும் அவ்வப்போது ஏற்படும். பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது அவசியம். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் சூழும். வீண்வம்பு, வழக்குகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. உழைப்புக்குப் பின்வாங்காமல் கடுமையாகப் பாடுபடுவது அவசியமாகும். தீயோர் தொடர்பு வேண்டாம். தீய எண்ணங்களுக்கும் இடம் தரலாகாது. நேரான வழியில் சிந்தையைச் செலுத்தினால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம்.

பொருளாதாரநிலை சீராக இருந்துவரும். தொழிலாளர்கள், அலுவலகப்பணியாளர்கள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள் ஆகியோர் பொறுப்புடன் செயல்பட்டால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். அக்கம்பக்கத்தாரிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். 17-ஆம் தேதி முதல் ஜன்ம ராசியில் உலவிக் கொண்டிருந்த சனி 2-ஆமிடம் மாறுகிறார். இதுவும் கோசாரப்படி விசேடமானதாகாது. ஏழரைச் சனியின் காலம் இது என்பதை மறக்கலாகாது. சனிப் பிரீதி தொடர்ந்து செய்வதுடன், குருபகவானையும் வழிபட்டுவருவது அவசியமாகும். அதன்மூலம் சங்கடங்களைக் குறைத்துக் கொள்ளலாம். உங்கள் ஜனன கால ஜாதகப்படி யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் தற்சமயம் நடைபெறுமானால் பிரச்சினைகள் குறையும். மே 10 முதல் புதன் 2-ஆமிடம் மாறுவதால் கணிதம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். ஏப்ரல் *15, 17, 19 (முற்பகல்), 24, 26 (பகல்), 29*, மே *1 (பிற்பகல்), 5, 6, 8, 13, 14 (பிற்பகல்)* தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, தென்கிழக்குத்திசைகள் அனுகூலமானவை. மேஷ, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். *4, 6* எண்கள் அதிர்ஷ்டமானவை.

இந்தியாவின் பிரதம மந்திரிகள்

பண்டித ஜவஹர்லால் நேரு

சுதந்தர இந்தியாவின் முதல் பிரதமர், தொடர்ந்து மிக நீண்டகாலம் இந்தப் பதவியை வகித்த சிறப்புக்கும் உரியவர். நாடு சுதந்தரம் பெற்ற நாளான 1947 ஆகஸ்ட் 15 முதல் வாழ்வின் இறுதி நாளான 1964 மே 27 வரை - சுமார் 17 ஆண்டுகள், சரியாகச் சொல்வதானால் 6,131 நாள்கள் பிரதமராக இருந்தார்.



பண்டித நேரு அலஹாபாதில் 1889 நவம்பர் 14 ஆம் தேதி பிறந்தார். "டிஸ்கவரி ஆப் இந்தியா", முதலான பல நூல்களை எழுதிய சிறந்த எழுத்தாளர்; வாக்கு வன்மை மிக்க பேச்சாளர். அணிசாரா இயக்கத்தை உருவாக்கிய உலகத்தலைவர்களில் ஒருவர். பாரத ரத்னா விருது (1955) வழங்கப் பெற்றவர்.

குல்ஜாரிலால் நந்தா

ஆழ்ந்த காந்தியவாதி. இரண்டு முறை இடைக்காலப் பிரதமராகப் பொறுப்பு வகித்தார். பண்டித நேரு காலமானதைத் தொடர்ந்து 1964 மே



27 முதல் 1964 ஜூன் 9 வரை 14 நாள்களும், லால் பகதூர் சாஸ்திரி திடீரென மரணமடைந்ததைத் தொடர்ந்து 1966 ஜனவரி 11 முதல் 24 வரை 14 நாள்களும் இவர் பிரதமர் பதவியில் இருந்தார்.

1898 ஜூலை 4 ஆம் தேதி சியால் கோட்டில் (இப்போது பாகிஸ்தானில் உள்ளது) பிறந்தார். நூற்றாண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து 1998 ஜனவரி 15 ஆம் தேதி காலமானார். தொழிலாளர் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பாரத ரத்னா விருது (1997) வழங்கப் பெற்றவர்.

லால் பகதூர் சாஸ்திரி

புகழும் பெருமையும் பெற்று விளங்கிய பண்டித நேருவின் இடத்தை நிரப்பும் பெரும் பொறுப்புடன் பிரதமர் பொறுப்பேற்ற சாஸ்திரி மிக விரைவிலேயே இந்திய மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். குறிப்பாக 1965-இல் பாகிஸ்தானுடனான போரில் மாபெரும் வெற்றி பெற்று இந்திய மக்களின் பேராதரவுக்கு உரியவரானார். இவர் அளித்த 'ஜெய் ஜவான்' என்ற கோஷம் நாடு முழுவதும் எதிரொலித்தது. இவர் 1964 ஜூன் 9 முதல் 1966 ஜனவரி 11 வரை 582 நாள்கள் பிரதமர் பதவியை வகித்தார்.

1904 அக்டோபர் 2ஆம் தேதி மொகல்சராயில் (வாரணாசி) பிறந்தார். இந்திய-பாகிஸ்தான் போருக்குப்பின் தாஷ்கெண்டில் (சோவியத் யூனியன்) பாகிஸ்தானுடன் சமாதானப் பேச்சுகள் நடத்திக் கொண்டிருந்த போது 1966



ஜனவரி 11ஆம் தேதி திடீரென மரணமடைந்தார். பாரத ரத்னா விருது (மரணத்துக்குப்பின் 1966-இல்) வழங்கப்பெற்றவர்.

இந்திரா காந்தி

புகழ் பெற்ற தந்தைக்கேற்ற மகளாக தமது திறமையை நிரூபித்தார். 1966 ஜனவரி 24 முதல் 1977 மார்ச் 24 வரையும் மீண்டும் 1984 ஜனவரி முதல் அக்டோபர் 31 வரையும் இரண்டு முறை பிரதமர் பதவி வகித்தார். மொத்தம் 5,831 நாள்கள் - தமது தந்தை பண்டித நேருவை விட 300 நாள்களே குறைவாக - பிரதமர் பதவியில் இருந்தார். சமஸ்தான மன்னர்களின் மானியங்களை ஒழித்தது, வங்கிகளை நாட்டுடைமை ஆக்கியது, பங்களாதேஷ் தோன்ற உதவியது ஆகியவை இவரது பதவி காலத்தின் சிறப்புச் சாதனைகளில் சில ஆகும்.



1917 நவம்பர் 19 ஆம் தேதி அலஹாபாத்தில் பிறந்தார். 1984 அக்டோபர் 31 ஆம் தேதி காலமானார். 1971-இல் பாரத ரத்னா விருது வழங்கப்பெற்றவர்.

மொரார்ஜி தேசாய்

சுதந்தரத்திற்குப்பின் முதலாவது காங்கிரஸ் அல்லாத பிரதமராகப் பதவி ஏற்றவர். ஜனதா கட்சி அரசின் தலைவராக 1977 மார்ச் 24 முதல் 1979 ஜூலை 28 வரை பதவி வகித்தார். 857 நாள்கள் பிரதமர் பதவியில் இருந்தார்.

வாழ்நாள் முழுதும் சிறந்த காந்தியவாதியாக விளங்கினார். 1896 பிப்ரவரி 29 ஆம் தேதி குஜராத் மாநிலம் பஹதேஸ்லி கிராமத்தில்



பிறந்தார். நூற்றாண்டு கண்டு 1995 ஏப்ரல் 10 ஆம் தேதி காலமானார். பாரத் ரத்னா விருது வழங்கப்பெற்றவர் (1991)

சரண்சிங்

விவசாயி பிரதமர் என்று பெயர் பெற்ற சரண் சிங் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர். 1979 ஜூலை 28 முதல் 1980 ஜனவரி 14 வரை 171 நாள்கள் பிரதமராகப் பதவி வகித்த போதிலும் இவர் ஒரு நாள் கூட நாடாளுமன்றத்தை எதிர்கொள்ள வில்லை. இவர்



பதவியேற்ற சில நாள்களுக் குள்ளாகவே இவரது ஆதரவுக் கட்சிகளில் ஒன்று தனது ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து இவர் அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை பராமரிப்பு பிரதமராக நீடித்தார்.

உத்தரப் பிரதேசம் மீரட் மாவட்டம் நூர்பூரில் 1902 டிசம்பர் 23 ஆம் தேதி பிறந்தார். 1987-இல் காலமானார்.

ராஜீவ் காந்தி

இந்தியப் பிரதமர்களிலேயே மிக இளம் வயதில் இந்தப் பதவிக்கு வந்தவர். பண்டித நேருவின் பேரரான ராஜீவ் காந்தி பிரதமர் பதவி ஏற்ற போது அவருக்கு வயது 41. தமது



தாயார் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட நாளான 1984 அக்டோபர் 31-இல் பிரதமர் பொறுப்பை ஏற்றார். 1985இல் நடந்த தேர்தல்களில் இவரது கட்சி வெற்றி பெற்று மீண்டும் பிரதமர் ஆகி 1989 டிசம்பர் வரை பிரதமராக இருந்தார்.

1944 ஆகஸ்ட் 20 ஆம் தேதி பம்பாயில் (இப்போது மும்பை) பிறந்தார். 1991 மே 21 ஆம் தேதி ஸ்ரீபெரும்புத்தூரில் மனித குண்டுக்குப் பலியாகி உயிர் துறந்தார். பாரத ரத்னா விருது (மரணத்துக் குப்பின் 1991) வழங்கப்பெற்றவர்.

வி.பி.சிங்

ஜனதாதள அலைவீசிய 1989 தேர்தலுக்குப்பின் பிரதமராகப் பதவி



ஏற்றார். 1989 டிசம்பர் 2 முதல் 1990 நவம்பர் 10 வரை (344 நாள்கள்) பதவியில் இருந்தார். மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது என்ற மிக முக்கியமான முடிவை இவர் தமது பதவி காலத்தில் மேற்கொண்டார். 1931 ஜூன் 25 ஆம் தேதி அலஹாபாத்தில் பிறந்தார்.

சந்திரசேகர்

இளம் துருக்கியர்களில் ஒருவரான இவர் 1990 நவம்பர் 10 முதல் 1991 ஜூன் 21 வரை (224 நாள்கள்) பதவியில் இருந்தார்.



உத்தரப் பிரதேச மாநிலம் பல்லியா மாவட்டம் இப்ராஹிம்பட்டி கிராமத்தில் 1927 ஜூலைமுதல் தேதி பிறந்தார்.

பி.வி.நரசிம்ம ராவ்

பிரதமராகப் பதவி ஏற்ற முதலாவது தென்னிந்தியர் இவர். 1991 ஜூன் 28



ஆம் தேதி பிறந்தார். பொருளாதார தாராளமயமாக்கல் திட்டத்தை இவர் தொடங்கி வைத்தார்.

ஏ.பி. வாஜ்பாய்

முதலாவது பிரம்மசாரி பிரதமரான இவர் 1996 மே 16 முதல் ஜூன் 1 வரை 16 நாள்கள் பதவி வகித்தார். மிகக் குறுகிய காலம் பதவியில் இருந்த பிரதமர் இவர்.



மத்தியப் பிரதேச மாநிலம் குவாலியரில் 1926 டிசம்பர் 25 ஆம் தேதி பிறந்த வாஜ்பாய் சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் புகழ்பெற்றவர்.

எச்.டி. தேவே கௌடா

11ஆவது மக்களவையின் இரண்டாவது அரசுக்குத் தலைமை ஏற்று 1996 ஜூன் 1 முதல் 1997 ஏப்ரல்



21 வரை (சுமார் 11 மாத காலம்) பிரதமராகப் பதவி வகித்தார்.


கர்நாடக மாநிலம் ஹஸன் மாவட்டம் ஹரதனஹள்ளி கிராமத்தில் 1933 மே 18 ஆம் தேதி பிறந்தார்.

ஐ.கே. குஜ்ரால்

இந்தர் குமார் குஜ்ரால் 1997 ஏப்ரல் 21 ஆம் தேதி பிரதமராகப் பதவி ஏற்றார். 1997 நவம்பர் 28 ஆம் தேதி இராஜினாமா செய்தார்.

ஏ.பி. வாஜ்பாய்

புதிய மக்களவையின் பிரதமராக மீண்டும் ஏ.பி. வாஜ்பாய் 19.3.98 அன்று பதவியேற்றுள்ளார்.



பிரிக்கப்பட்ட பஞ்சாபில் உள்ள ஜீலமில் (இப்போது பாகிஸ்தானில் உள்ளது) 1919 டிசம்பர் 4 ஆம் தேதி பிறந்தார்.

தகவல் தொகுப்பு : பத்திரிகைத் தகவல் அலுவலகம், இந்திய அரசாங்கம், சென்னை

மனம் விட்டுப் பேசுவோம்

ந.ர. ராமபத்திரன், சென்னை 600 005.

• உங்கள் பொன்னான பத்திரிகையை ஆவலுடன் திங்கள்தோறும் தவறாமல் படித்துச் சுவைப்பேன். கவியரசர் பாரதியின் கருத்தோவியமும் பாட்டின் இன்னிசையும் கலந்து மணப்பதைப் பல தடவை கண்டிருக்கிறேன்.

இம்மாதம் வெளியான 'அகலிகை' காப்பியம் படித்தேன். ஆராய்ச்சி வரவேற்கத் தக்கதுதான். ஆனால் 'கல்வியில் சிறந்த கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்ற பெருமைப்பட்டுக் கொள்ளும் நாம், கம்பன் காப்பியத்தில் அகலிகை மனத்தால் மாசுபட்டவள் என்று கூறினதாகக் கேட்டதில்லை.

பகுத்தறிவுக் காற்று உங்கள் பத்திரிகையிலும் வீசத் தொடங்கி விட்டதோ என ஐயுறுகிறேன். தவறாகவே என் எண்ணம் இருக்கட்டும்.

டாக்டர் பிரேமா நந்தகுமார், திருச்சி 620 006.

• அமுதசுரபியைப் படித்து வருகிறேன். நிறையச் செய்திகள், கதைகள், கட்டுரைகள், கவிதைகள். நன்று. மார்ச் '98 இதழ் மாத்திரம் 'அம்ருதம் விஷ ஸம்ஸ்ருஷ்டம்' (சுந்தர காண்டத்தில் சீதை கூறுவது) என்று கூறலாம் போல் அமைந்திருக்கிறது.

அம்ருதம் ஏன் என்றால் தாங்கள் 'அமுதசுரபி'யில் ஐம்பதாண்டுகள் ஆற்றிய தொண்டு, தங்களது முதல் சிறுகதை பற்றிய கட்டுரை, 'விருந்தாளி' போன்ற சமுக ப்ரக்ஞை காட்டும் கதை என்பன இந்த இதழில் இருப்பது முக்கிய காரணம்.

'விஷம்' ஏன் என்றால், கவிஞர் முருகுசுந்தரத்தின் 'வெள்ளை யானை'. அகலிகையின் பாத்திரத்தை, தெரிந்து தவறு செய்தாலும் தவம் (பிராயச்சித்தமாக) மூலம் மீண்டும் தூய்மையடையலாம் என்றுவால்மீகி Consecrate செய்தார். இந்தக் கவியோ அகலிகையை வெறும் உடற்பசிப் பெண்ணாகக் காட்டி desecrate செய்திருக்கிறார். மிகவும் வேதனையாக இருக்கிறது.

கௌரி ராமசந்திரன், சென்னை 600 040.

• 'அமுதசுரபி' இதழை நீண்ட நாள்களாகவே படித்து இன்புற்று வரும் கோடிக்கணக்கான வாசகிகளுள் நானும் ஒருத்தி. புத்தகத்தைத் திறந்ததுமே 'கர்மயோகி' பகுதியையும் 'சத்யமே சாயி' பகுதியையும் தான் முதலில் படிப்பேன். எத்தனையோ பத்திரிகைகள் வெளிவரும் இந்நாளில் துளியும் ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியுடன், அதே சமயம் ஆழ்ந்த கருத்துச் செறிவுடன் வெளிவருவது 'அமுதசுரபி' மட்டும்தான். கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் வானில் இருந்தாலும் இருண்ட வானில் பிரகாசிப்பது சந்திரன் மட்டுமே. அதுபோல குளிர்ச்சியாக மனத்துக்கு இதமான பொருட் செறிவு, கருத்துச் செறிவுடன் 'அமுதசுரபி' நடைபோடுகிறது. ஆனால் ஒருகுறை; பக்கங்களை அதிகமாக்கி சிறுகதைகளை அதிகம் வெளியிட்டால் நலமாக இருக்குமே. ஆவன செய்வீர்களா?

தாமரைச்செல்வி சுந்தர், திருபுவனம் 612 108.

• பொன் விழா ஆண்டில் 'அமுதசுரபி' யில் தன் முதல் சிறுகதை பற்றி கலைமாமணி விக்கிரமன் அவர்கள் எழுதியிருப்பதைப் படித்தபோது அவரின் தமிழ்ப்பற்றும், இலக்கிய ஆர்வமும், பிறரிடத்தில் காட்டும் அன்புணர்வும், மதிப்பும் வியக்க வைத்தன. அதை நிருபிக்கும் வகையில் கொம்பைச் சுற்றிய கொடிபோல கலைமாமணியைச் சுற்றி அன்பர்கள் அரவணைத்து நிற்கும் போட்டோவைப் பார்த்து சிலிர்த்துப் போனேன்.

கோ. திருக்குருகைப் பெருமாள், சென்னை 600 063.

• 'வாழும் தமிழுக்கு நாளும் பணி செய்வோர்' என்ற பகுதியில் இம்மாத இதழில் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் ஆற்றிய, ஆற்றும் தமிழ்ப்பணியைத் தெரிந்து கொள்ள உதவிய 'அமுதசுரபி' க்கு என் நன்றி உரித்தாகுக. 'தார் சொல்லும் கதை' யிலிருந்து உண்மையான உழைப்பாளி மோகன் அவர்களின் வாழ்க்கை, இக்கால இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரி.

திருமதி பாக்கியலட்சுமி சுகவனம், கோயமுத்தூர் 641 010.

• 'விஷக்கத்தி' சிறுகதை எங்களின் மனத்தையும் பாதித்து, பேதலித்து விட்டது. நாங்களும் பொற்கொடியின் நிலைமையில் இருந்து மீள முடியாமல் இருக்கிறோம். அவளை மனத்தில் பதித்த ஆசிரியர் 'வேம்பு' க்கு எங்களது பாராட்டுகள்.

விக்கிரமன்



விடுதலையின் விலை

பெரும் பற்றப் புலியூர் என்று அழைக்கப்படும் சிதம்பரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் இராசேந்திரசோழர் வீற்றிருந்தார். ஓய்வின்றி நேரம் காலம் பாராமல் மந்திராலோசனை நடத்தி வந்தார்.

சோழ நாட்டில் புதிய தலைநகரத்திற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது. பழையாறையினின்று சிறிது தொலைவில் கொள்ளிடத்திற்கு மிக அருகே விசாலமான காட்டுப் பகுதியை அவர் தேர்ந்தெடுத்தார்.

தில்லையம்பதியிலிருந்து தென்மேற்கே இருபது கல் தொலைவில் அந்தப் பூமி விளங்கியதால் புதிய தலைநகரை அமைக்கும் பணியைக் கவனிக்க எளிதாக இருக்கும் என்று தில்லையம்பதியில் தங்கியிருக்கவும் அவர் முடிவு செய்தார். அங்கே புதிய அழகிய மாளிகையும் கட்டப்பட்டது.

புதிய தலைநகரை தஞ்சையைப் போல் மிகப் பெரியதாக அமைப்பதோடல்லாமல், அங்கே தஞ்சையிலுள்ள பெருவுடையார் கோயிலைப் போன்றே பெரிய அளவில் கோயில் ஒன்று கட்டவும் உயர்ந்த விமானம் அமைக்கவும் திட்டமிட்டார்.

அதற்கான வரைபடங்கள் வரைபவர், கட்டட நிர்மாண வல்லுநர்கள், சிற்பிகள் அவ்வப்போது பேரரசரைச் சந்தித்து, அரசர் கூறுவனவற்றைக் கவனமாகக் கேட்டு விவாதித்துக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையே வடக்கு நோக்கிப் படையெடுப்பு ஒன்றைக் குறித்துத் தளபதிகள் மந்திராலோசனை புரிந்து வந்தனர். மேலைச் சாளுக்கியநாட்டு வேந்தன் சத்தியாசிரயன் சோழ நாட்டைத் தாக்கப் பெருந் திட்டம் தீட்டி வருகிறான் என்பதை ஒற்றர்கள் மூலம் உணர்ந்த இராசேந்திரன், அதற்கு முன்பே அவர்கள் தலைநகரான மண்ணைக் கடகத்தைத் தாக்கத் திட்டமிட்டான்.

அதற்கான போர் முறைகள், படை திரட்டுதல் பற்றி விவாதிக்க இராசமல்ல முத்தரையன் வந்திருந்தார். அவருடன் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தபோது தான் தஞ்சைக் கோயில் ஸ்ரீகாரியம் கவனிக்கும் சேந்தன் அரசரைக் காண மிகப் பணிவுடன் வந்து நின்றார்.

இராசேந்திர சோழ தேவர் தில்லையில் சென்று தங்கிய பிறகு பல அரசியல் பணிகளைப் பற்றி உத்தரவு பெற, அதிகாரிகள் தஞ்சையினின்று சிதம்பரம் வர வேண்டியிருந்தது. அதுபோல், கோயிலின் நிர்வாகச் செயல் குறித்துக் கட்டளைபெற சேந்தன் வந்திருப்பதாக நினைத்த இராசேந்திரன், அவரிடம்

பிறகு அமைதியாகப் பேசலாம் என்று அவரைக் காத்திருக்குமாறு கூறினார். இராசமல்ல முத்தரையரோடு மிக முக்கியமாகக் கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதை மறைமுகமாகத் தெரிவிக்க விரும்பி, "இன்றிரவு தங்கி நாளை செல்லலாம் அல்லவா, சேந்தனாரே?" என்று கேட்டார்.

மிகப் பணிவுடன் சேந்தன் சொன்னார், "நான் தெரிவிக்கப் போவதும் தாங்கள் முத்தரையரோடு கலந்து பேச வேண்டிய மிக முக்கிய செய்திதான்."

இராசேந்திரன் புருவம் உயர்த்தி, "என்ன! மேலைச் சாளுக்கியர் தொடர்பான செய்தியா?" என்று கேட்டார்.

"ஆம், பேரரசே! சத்யாசிரயனுடைய ஒற்றர் ஒருவரைப் பற்றிய செய்தி எனக்குக் கிடைத்தது" என்று அவர் கூறுவதை, இராசமல்லனும் கூர்ந்து கவனிக்கலானார்.

மார்கழி திருவாதிரை நாளன்று வழக்கமாகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் இராசேந்திர சோழ தேவரின் பிறந்த நாள் விழாவில் கூத்து நிகழ்த்தும் இரத்தினவல்லி அன்று நடனமாட வரவில்லை.

இரவு வெகுநேரம் காத்திருந்த மக்கள் சலிப்புடன் கலைந்தனர். தேடிச் சென்றபோது வீட்டிலும் அவள் இல்லை. எங்கே சென்றாள் என்பதைச் சொல்லவும், அவள் வீட்டில் ஒருவராலும் இயலவில்லை. அந்த நேரத்தில் வெண்ணாற்றங்கரை மணற்பரப்பில் நீல வானத்துப் பின்னணியில் வட்ட முழுமதியின் அழகை ரசித்தவாறு இரத்தினவல்லியும், நரேந்திரனும் பேசிக் கொண்டிருந்தனர்.

இரத்தினவல்லியின் தாய் வறுமை நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள். தன் மகளும் வறுமைப் பிடியில் ஆட்படக்கூடாது என்பதற்காக, தன் மகளைத் தஞ்சைக் கோயிலின் தெய்வ கைங்கர்யம் செய்யக் குழந்தையாயிருந்த போதே விற்று விட்டார்.

அடிமை புகுந்த பெண்ணான இரத்தினவல்லியோ, தான் அடிமை என்று ஒரு போதும் எண்ணாமல் நாட்டியக் கலையைக் கற்று அக்கலையில் தேர்ந்தாள்.

அவளுடைய நடனச் சிறப்பை இராசராசசோழர் மிகவும் பாராட்டி அவளுக்கு இறையிலியாக நிலமும் வீடும் வழங்கினார்.

பொதுப் பெண்டிர், பதியிலாதார் என்றே அழைக்கப்பட்டாலும் அவளைப் போன்ற நாட்டியப் பெண்களுக்கு நாட்டிலும், அரசாங்கத்திலும் பெரும் மரியாதை அளிக்கப்பட்டது. தேவரடியார் என்று உயர்வாகக் கூறி அவர்களை அழைத்து மரியாதை செலுத்தினர். மன்னரையும் மற்றும் அதிகாரிகளையும் எப்போதும் சந்திக்கும் உரிமை அவர்களுக்கு இருந்தது. இரத்தினவல்லிக்கு மேலும் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆனால் பெருவுடையார் சந்நிதியிலும், மன்னரது திருமுன்பும் நாட்டியமாடிப் புகழும் மரியாதையும் பெற்ற இரத்தினவல்லியின் மனத்தில் ஒருவித ஏக்கம் சிறிது சிறிதாக வளர்ந்தது.

நரேந்திரனைச் சந்தித்த பிறகு அவள் உள்ளத்தில் ஏக்கத்துடன் ஒருவிதப் பரபரப்பும் ஏற்பட்டது. பிற ஆடவரைக் காணும்போது உள்ளத்திலும் உடலிலும் ஏற்படாத புதிய சிலிர்ப்பு அவனைச் சந்தித்தபோது ஏற்பட்டது.

"நாள்தோறும் இந்த வழியே செல்லும்போது தங்களைப் பார்க்கும்போது தங்களுடன் ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் எழும். ஏன் அப்படி ஏற்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை" என்று நரேந்திரனைப் பார்த்து ஒருநாள் அவள் கேட்டு விட்டாள்.

நரேந்திரனுடைய நிமிர்ந்த தோற்றம், சுருள் கேசம், கூரிய விழிகள், பரந்த தோள்கள் அவளைக் கவர்ந்திருக்க வேண்டும்.

காதல் ததும்பும் அவள் குரலை ஏற்ற நரேந்திரன், 'நானும் அப்படித்தான் நினைத்தேன்' என்று மட்டும் சொல்லவில்லை. முறுவலித்தான். அவனுடைய புன்முறுவல் ஆயிரம் பொருள்களைப் பேசின. அவன் பல நாள்களாக எதிர்பார்த்து ஏங்கியதற்கு இன்று புதிய பூபாளம் கிடைத்தது. அவளுடைய நிருத்தியங்களைக் கண்டிருக்கிறான். இறைவன் முன்பு அவள் ஆடும்போது அவளுடைய அங்க அசைவுகளைக் கண்டிருக்கிறான். கரங்களின் நெளிவிலும், இடை வளைவதிலும், விழிகள் பேசுவதிலும், சில நேரங்களில் மெல்லிய பற்கள் செவ்விதழ்களினின்று முத்துப்பரல் போல் எட்டிப் பார்த்து, பாடலை முணுமுணுத்து முறுவலிப்பதிலும், பாதங்கள் அசைவதிலும் அவன் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறான். அப்பொழுதே ஓடிச் சென்று

அவளை அணைத்து, தன் இதய ஒலியைத் தன் இதழ் மூலம் அவள் பூங்கன்னங்களிலே தெரிவிக்கத் துடித்திருக்கிறான்.

நிறைவேறவில்லை. அவளை நெருங்க முடியவில்லை. தெய்வத்துக்குத் தன்னை அர்ப்பணித்தவள், கலைக்கென்றே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள். மேலும் அவள் தாய் வறுமை காரணமாக அவளைக் கோயிலுக்கு விற்றுவிட்டதால் அவள் பரம்பரை அடிமை – அவள் தேவரடியாள் – என்றெல்லாம் அவளைப் பற்றி அவன் அறிந்து கொண்டான். அழகுக்கு ஒரு சிறையா?

வெண்ணாற்றங்கரையில் அவர்கள் சந்திக்கும் வாய்ப்பு நிகழ்ந்தது. ஒரு நாள் அவன் அப்படித்தான் அவளை வினவினான். 'அழகைக் கலைக் கூண்டிற்குள் சிறைப்படுத்தி வைக்கலாமா? மலரைச் செடியில் வாட விடலாமா?'

இதைக் கேட்டு இரத்தினவல்லி மெல்ல நகைத்தாள். "இறைவன் திருவழகை வர்ணித்துத்தான் நான் கேட்டிருக்கிறேன். ஒரு சாதாரணப் பெண்ணை மலரென்றும் மதியென்றும் வர்ணிக்கிறீர்களே?" என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போதே அவள் அவனிடம் சிறைப் பட்டாள்.

"நரேந்திரா! கருவறையிலுள்ள இறைவன் திரு உருவத்தைத் தவிர வேறு உருவத்தைக் கண்டறியாதவள். நினைப்பது, பேசுவது எல்லாம் ஆண்டவனைப் பற்றித் தான். அந்த நெறியினின்று மாறக் கூடாது என்று கண்டிப்பு எங்களுக்கு. தேவனுக்கு அடியவளான நான் நரேந்திரனுக்கு அடிமையாகிவிட்டேன். அப்படியென்ன வசீகரம் உங்களிடம்?" என அவள் கேட்கும்போது, நரேந்திரன் மெய் சிலிர்க்க அவளை அப்படியே அணைத்தான்; அணைத்தவாறு வானில் மிதந்து வேற்றுலகு சென்று விடலாமா என்று எண்ணினான்.

"இப்படித் தனியே ஓர் ஆடவனைச் சந்திப்பது பெரிய குற்றம். என்னைக் குற்றவாளியாக்கி விட்டீர்களே!" என்று அவள் சிணுங்கினாள்.

"குற்றவாளியான உன்னை நான் விடுதலை செய்கிறேன்" என்றான் நரேந்திரன்.

"உங்களால் முடியாது; என்னை விடுதலை செய்ய உம்மால் முடியாது" என்று கூறி அவன் பிடியின் அழுத்தத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். என்னால் முடியும் என்பதற்கு அடையாளமாக அவன் தன் இதழ் முத்திரையைப் பதித்தான்.

"முடியாது–முதலில் இப்பொழுது என்னை நீங்கள் சிறைப்படுத்தியிருக்கிறீர்களே, அதிலிருந்து விடுவிக்கிறீர்களா?"

இருவரும் சிரித்தனர். அணைப்பு மேலும் இறுகியது.

இரத்தினவல்லி அடிமை வாழ்வினின்று விடுதலை பெற விரும்பினாள். ஆனால் அது இயலாத காரியம் என்பதும் அவளுக்குத் தெரியும்.

❀ ❀ ❀

அவள் நடவடிக்கைகளை அறிந்த அவள் உயிர்த்தோழி சொன்னாள், 'பைத்தியமே! அடிமை – என்ற சொல்லின் பொருளே உனக்குப் புரியாது. இறைவனுக்கு அடிமையாயிருப்பதில்தான் நமக்குப் புகழ், மரியாதை, பட்டாடை, பொன்னாபரணங்கள், வீடு, நிலம் எல்லாம் கிடைக்கின்றன. இந்த அடிமைத்தனத்தின் மேல் உனக்கு வெறுப்பு வந்ததேன்?"

இரத்தினவல்லி சோர்வுடன், "சிறையாறும் மடக்கிளிக்கு முறையாகப் பாலும் பழமும் தந்தால் மட்டும் போதுமா?" என்றாள்.

"நீ என்னதான் சொல்கிறாய்" தோழி கேட்டாள்.

"எனக்கு இந்தப் பொன் விலங்கு பிடிக்கவில்லை."

"கள்ளி! எனக்குத் தெரியும். நீ ஆண் சுகத்தின் ருசி பார்த்துவிட்டாய். மகாபாவம். வெளியே தெரிந்தால் அரச கோபமுண்டு. தண்டனையும் கடுமை..."

"விடிவே கிடையாதா? விடுதலையே கிடையாதா?"

"உண்டு; உன் தாய் உன்னைப் பெரும் பொற்காசுக்கு விற்றுவிட்டாள். அதைப் போல் பல மடங்கு கோயில் தலைவர் கேட்கும் தொகை கொடுத்தால் ஒரு வேளை உனக்கு விடுதலை கிடைக்கலாம்."

"சொல்லாமல் ஓடிப்போய் விட்டால்? விட்டு விடுதலையாகிவிட்டால்?" இரத்தினவல்லி துணி வுடன் கேட்டாள்.

நரேந்திரனும் இதையேதான் அவளிடம் கேட்டான்: "ஏன் பயப்படுகிறாய் இரத்தினவல்லி? யாருமறியாமல் நாம் இந்த ஊரிலிருந்து வெளியேறி விடுவோம்."

"எங்கே போவது? சோழ சக்கரவர்த்திகளுக்கு எட்டுத் திசையும் சொந்தம். எங்கு சென்றாலும் நம்மைக் கட்டி இழுத்து வந்து விடுவார்கள். பிறகு விடிவற்ற நிஜமான அடிமை வாழ்வுதான். காராக்கிரக வாழ்வு" என்றாள்.

நரேந்திரன் சிரித்தான். "சோழ சக்கர வர்த்திகளின் கொடி எல்லா இடங்களிலும் பறக்கவில்லை. சோழர் கொடி மிதிபட்டிருக்கும் இடமுமுண்டு."

இரத்தினவல்லி திடுக்கிட்டாள். என்ன சொல்கிறீர்கள்? "சோழ நாட்டை அவமரியாதைப் படுத்துவது போல் இருக்கிறது தங்கள் பேச்சு..." என்று கவலையுடன் கூறினாள்.

நரேந்திரன் துணிவுடன், "நமது காதல் சாம்ராஜ்யத்தின் எதிரே எந்தப் பெருநாட்டின் எதிர்ப்பும் நிற்க முடியாது" என்றான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என் மனத்தில் பெரிய குழப்பம். கவலை அலைகள், என் இதய மேடையைப் பலமாகத் தாக்குகின்றன. என்னால் நடனமாட முடியவில்லை. கருவறையில் பெருவுடையாருக்கு மாறாக நீங்கள் அங்கு நின்று சிரிக்கிறீர்கள். உங்கள் அழகுச் சிரிப்பு என்னை மயக்கிவிட்டது. குறிப்பிட்ட நேரத்தில் நடனமாட முடியவில்லை. நடனமாடினாலும் என்னால் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியவில்லை. அடுத்து என்ன செய்வது சொல்லுங்கள்" நெஞ்சு தழுதழுக்கக் கேட்டாள்.

உதட்டில் குறும்புத் தனம் தவழ, நரேந்திரன் குரலில் கண்டிப்பு மிளிரக் கூறினான், "ஒரே வழி என்னை மறந்து விடுவது."

இரத்தினவல்லி சீறினாள்: "என்ன சொன்னீர்கள்? உங்களை மறப்பதற்காகவா நான் பெருவுடையார் சந்நிதியை மறந்தேன்? என் ரத்தத்தோடு ஒன்றிப்போன நாட்டியக் கலையை மறந்தேன். உங்கள் உள்ளம் என்னை மறக்க நினைக்கலாம். ஆனால் என் இதய அரங்கில் இறைவனுக்கு அடுத்தபடியாக உங்களை ஏற்றி வைத்த நான் இறைவனை மறந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். நீங்கள் என்னை வெறுத்தால் நான் இந்த உலகை விட்டுச் செல்லவே முயல்வேன்" அழுத்தமாக வந்தது பேச்சு. நரேந்திரன் எதிர்பார்க்கவில்லை.

நரேந்திரன் தான் கூறியது உண்மையன்று என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தப் பெரும்பாடு பட்டான்.

திருவாதிரை நாளன்று இரத்தினவல்லி நடனமாட மறந்தாள். விழாக் கூட்டத்தில் கலந்துகொள்ள மறந்தாள். பொதுக்கூத்துக்கும் வரவில்லை. வெண்ணாற்றங்கரையில், நரேந்திரன் அணைப்பிலும், பேச்சிலும் தன்னை மறந்திருந்தாள். அன்றே தஞ்சையை விட்டு வெளியேறிவிடும் திட்டத்தை வகுப்பதில் முனைந்திருந்தாள்.

❀ ❀ ❀

சிதம்பரம் நகர மாளிகையில் இராசேந்திர சோழரிடம் இவற்றையெல்லாம் கூறிய சேந்தன் மற்றொரு செய்தியையும் கூறினார்.

"சாளுக்கிய நாட்டினின்று வந்தவர் நரேந்திரன். ஆனால் நமது படைபலம் அறியவோ, போர்த்துறை அறியவோ வரவில்லை. சித்திரக் கலை நுணுக்கம் கற்றறிய வந்திருக்கிறார். பெருவுடையார் கோயில் கருவறையைச் சுற்றி எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக் கண்டு அழியா வர்ணம் நீட்டும் முறையைக் கண்டறிந்து செல்ல வந்துள்ளார். நமது ஓவியர் சித்திரசேனரிடம் மாணாக்கனாகச் சேர்ந்து ஓவியம் பயின்று வருகிறார். ஓவியக் கலையைக் கற்றுச் செல்வதுடன் நாட்டியக் கலைவாணி இரத்தினவல்லியையும் கவர்ந்து செல்லத் திட்டமிட்டு விட்டார்" என்று கூறியது கேட்டு இராசேந்திர சோழர் சிறிது நேரம் சிந்தித்தார். "ஓ மேலைச் சாளுக்கியர்கள் நம்மிடம் மோதத் துணிந்துவிட்டார்களா? மான்யகேட நகரில் பெரியதொரு சித்திரக் கூடத்தை அமைக்கப்போகிறார்களா?" என்று கூறியவர்

எங்கிருந்தாலும் இரத்தினவல்லியையும், நரேந்திரனையும் சிறைப்பிடித்து வருமாறு கட்டளையிட்டார்.

❊ ❊ ❊

தில்லை நகரத்து அரச மாளிகையில் வீற்றிருந்த இராசேந்திர சோழரின் எதிரே இரத்தினவல்லியும், நரேந்திரனும் தலைகுனிந்து நின்றிருந்தனர்.

இராசேந்திர சோழ தேவர் நரேந்திரனைப் பார்த்து, "தஞ்சை மாநகருக்கு நீ வந்து இரண்டாண்டுகள் ஆகின்றன. சித்திரசேனரிடம் ஓவிய நுணுக்கம் பயின்ற நீ இரத்தினவல்லியின் மனத்தைக் கவர்ந்தது எப்போது?" என்று கேட்டார்.

நரேந்திரன் உடனே மறுமொழி கூறவில்லை.

"நான் சொல்கிறேன், உன் காதல் வளர்ந்தது மூவிரு திங்களில்தான். அப்படித்தானே?"

"ஆமாம் சக்கரவர்த்திகளே!" நரேந்திரன் பணிவுடன் கூறினான்.

"சாளுக்கிய மன்னர் சத்தியாசிரயர் உனனை ஓவியம் கற்றுவரச் சொன்னதோடு காதல் புரியவும் சொன்னாரா?"

மெல்ல உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு, "ஒருவர் சொல்லி வருவதில்லை காதல்" என்றான்.

"அப்படியென்றால், நீ காதலிப்பதன் மூலம் உங்கள் நாட்டிற்குத் துரோகம் செய்துவிட்டாயே சரிதானா?" – அரசர் கேட்டதும், "அதெப்படி?" என விழித்த நரேந்திரனைப் பார்த்து அரசர், "ஆம்; உன்னைப் போன்றவர்களைக் கலை நுணுக்கம் அறிந்து வர அனுப்பிய உன் அரசரைத் தான் சொல்ல வேண்டும். இதோ காதல் வலையில் சிக்கி, சோழ நாட்டில் சிறைபடப் போகிறாயே! சிறையோ, மரண தண்டனையோ சொல்ல முடியாது. இரண்டு மூன்று குற்றங்கள்; மாற்றான் நாட்டிலிருந்து ரகசியமாக வந்து உளவு பார்த்தது; தேவனுக்கே தன்னை அடிமைப்படுத்திக் கொண்ட சோழ நாட்டுப் பெண்ணைக் காதலித்தது; அவளுடன் நாட்டை விட்டு ஓடப்பார்த்தது" என்று கூறியவர் சற்று நிறுத்தி அவன் முக உணர்ச்சியை நோக்கினார்.

புனையும் பாடல் ஏது?



அவள் இருந்தாள் நான் இருந்தேன்
அந்தி மயங்கும் நேரம்
ஆசைக்கொரு வார்த்தை இல்லை
அமுத இதழின் ஓரம்!

கவலு கின்ற துன்பம் தீர்க்க
கன்னி மனதி லாது
களித்திருந்தாள் துடித்திருந்தேன்
கனலும் தீயின் மீது!

நறவும் நஞ்சும் உவந்த ளித்தாள்
நலிந்த துளமும் சோர்வால்
நங்கையவள் நேர்சிரித்தாள்
நலிந்த மனத்தில் போர்வாள்!

உறவு கொண்டால் துறவு கொள்ள
உள்ளம் விரும்பி டாது
உதட்டுறவால் உயிர்சிறக்கும்
ஒல்லும் காதல் மீது!

சித்துவிளை யாடுமவள்
செஞ்சொல் பொழியும் தேனில்
திளைத்திருந்தால் தீங்குறுமோ
திரண்ட பருவ ஊனில்!

புத்திளமை உருக்கவளின்
புல்லல் இல்லாப் போது,
பூப்படுக்கை முள்படுக்கை
புனையும் பாடல் ஏது?

வரத கோவிந்தராசன்

பிறகு தொடர்ந்து, "ஒரு முறை ஓவியர் சித்திரசேனர் உன்னிடம் மனம் விட்டுப் பேசினாரே, நினைவிருக்கிறதா? 'எனக்கு வயதாகிறது தம்பி, நரேந்திரா! எனக்கு வாரிசாக நீ அமைந்து ஓவியக் கலையை வளர்த்து வரவேண்டும் என்பதே என் ஆசை' என்று அவர் சொன்னார், அது நினைவிருக்கிறதா?

"உன் முகம் மாறியது; உன் சொந்த ஊருக்குப் போகப் போவதாகவும், ஓவியக் கலையைத் தொடரப் போவதில்லை என்றும் சொன்னாய். அதுவரை

உனக்கு எந்த ஊர் என்று கேட்டறியாத ஓவியர் உன் ஊரைப் பற்றியும், உன் பெற்றோரைப் பற்றியும் மிகப் பரிவுடன் விசாரித்தார். நீ சரியாகச் சொல்லவில்லை..."

மன்னர் இராசேந்திர சோழர் சற்று நிறுத்தினார். நரேந்திரன் பரபரப்படைந்தான். அவன் முகம் மாறியது. "சக்கரவர்த்திகளே! நடந்தது நடந்தபடியே, என்ன பேசினோம் என்பதையும் முக உணர்ச்சியைக்கூடத் துல்லியமாகச் சொல்கிறீர்களே. ஒற்றர்கள் கேட்டறிந்து சொன்னால் கூட இப்படித் தெளிவாகக் கூறியிருக்க முடியாதே. உங்களுக்குச் சொன்னது யார்?" என்று நடுங்கும் குரலில் கேட்டவுடன்—

"ஓவியக் கலைஞனே! நீ மிகத் திறமைசாலி. இயற்கையிலே திறமை வாய்ந்த நீ, எங்கள் சோழ



நாட்டிலிருந்து சித்திர நுணுக்கங்களைக் கொண்டு செல்வது போதாதென்று, அருமை நாட்டியமணி இரத்தினவல்லியையும் கவர்ந்து செல்லத் திட்டமிட்டாய். ஐயோ பாவம். கையுங்களவுமாக் இருவரும் பிடிபட்டு விட்டீர்கள்... என்ன தண்டனை கிடைக்கும் என உணர்ந்திருந்தால் செய்திருக்க மாட்டாய். காதல் அவ்வளவு எளிதன்று, நரேந்திரா! சோழ நாட்டை ஏமாற்றுவதும் எளிதன்று" என்று கூறி நிறுத்தியபோது, நரேந்திரன் கண்களில் நீர் தளும்பியது. பயத்தால் உடல் நடுங்கிற்று.

"சக்கரவர்த்திகளே! இரத்தினவல்லியை நான் அபகரித்துச செல்லத் திட்டமிட்டதாக மட்டும் குற்றஞ் சாட்டாதீர்கள். எங்கள் காதல் தெய்விகமானது. சோழ நாட்டில் நாட்டியப் பெண்களுக்குத் தேவரடியார்கள் எனப பெயர் கொடுத்து அடிமைப் படுத்தி வைத்திருக்கும் அவல நிலையை எதிர்த்து விடுதலையடைய விரும்பிய இரத்தினவல்லியின் முழுச் சம்மதத்துடன்தான் அவளை அழைத்துச் செல்ல விரும்பினேன். சோழச் சக்கரவர்த்திகளை ஏமாற்றும் எண்ணம் எனக்கில்லை. யாரோ கூறியதைக் கேட்டு நேரில் கண்டதுபோல் பேசுகிறீர்கள்" என்றான்.

இராசேந்திர சோழர் பெரிதாக நகைத்தார். "சித்திரக் கலைஞர் நரேந்திரனே! உம்முடன் சித்திரசேனரிடம் ஓவியம் பயின்றாரே ஒரு முதியவர்... நினைவிருக்கிறதா?" என்று கேட்டார், அவனைக் கூர்மையாகப் பார்த்தவாறு.

"ஆம். ஆம்... அடர்ந்த தாடி மீசையுடன் வயதானவர், அந்த வயதிலும் அவர் ஓவியக் கலையை ஆவலுடன் கற்றுக்கொண்டார். சித்திரம் வரைய முடியாவிட்டாலும் வண்ணச் சேர்க்கையைப் பற்றித் தெளிவான கருத்தை அவ்வப்போது வெளியிட்டார்; கேட்டறிந்தார்; அழியாத வண்ணக் கலவை நுணுககங்களைக் கற்றார். அடிக்கடி என்னைப் பார்ப்பதும், ஓவியத் தலைவரைப் பார்த்து, 'குருதேவரே, கலை நுணுக்கங்கள் அனைத்தையும் கற்றுத் தந்துவிடக் கூடாது, ரகசியமான வண்ண முறைகளை இப்படி அம்பலப்படுத்துகிறீர்களே' என்று கேட்பாரே... அவர்தானே?"

"நரேந்திரா, சித்திரசேனரிடம் சித்திரம் பயின்ற



அந்த முதிய மாணவர் வேறு யாருமல்லர். நானேதான். தஞ்சைப் பெருவுடையார் கோயில் சித்திரக்கூடம் போன்று நான் அமைக்கப்போகும் தலைநகரத்துக் கோயிலிலும் சித்திரக் கூடம் அமைக்கத் திட்டமிட்டுள்ளேன். அதற்கான நுணுக்கங்களைப் பழகவே மாறுவேடத்தில் ஓவியரிடம் சித்திரம் பயின்றேன்.'' இராசேந்திரர் சொல்லி நிறுத்தி, இரத்தினவல்லியின் பக்கம் திரும்பி, "இரத்தினவல்லி! சிறந்த நாட்டியமணியான நீ இவ்வாறு சாளுக்கிய நாட்டவருடன் சென்றுவிடத் திட்டமிடலாமா? உன் தாய் உன்னைச் சிறு வயதிலேயே கோயிலுக்கு விற்று விட்டாள் என்பதை நீ மறந்து விட்டாயா? எவ்வளவு பொன் கொடுத்தாலும் நீ மீளமுடியாது என்பது தெரியுமா? அது மட்டுமன்று. சாளுக்கிய நாட்டு ஒற்றருடன் நீ ஓடிப்போகத் திட்டமிட்டதற்குத் தண்டனை என்ன தெரியுமா? சோழ மாளிகை வேளத்தில் உன்னைச் சிறையிடுவேன். காலமெல்லாம் பணிப்பெண்ணாக நீ உழைக்க வேண்டியதுதான். ஒரு நாட்டியமணி சமையற்கூடத்தில் வேலை செய்ய வேண்டும்."

அரசர் கூறியது கேட்டு இரத்தினவல்லி விம்மினாள்.

"சக்கரவர்த்தி அவர்களே! சோழ நாட்டை விட்டுப் பிரிந்து செல்ல எனக்கு என்றுமே ஆசையில்லை. கனவில் கூட நினைக்க மாட்டேன். இறைவனிடம் காதல் கொண்ட என் மனத்தை இந்த ஓவியரிடம் பறி கொடுத்தேன். காதலுக்குக் கண் இல்லை. அவர் சாளுக்கிய நாட்டு ஒற்றர் என்பது எனக்குத் தெரியாது. காதலா, தாய்நாடா என்றால் நான் நாட்டைத் தான் காதலிப்பேன், என்னை மன்னித்து விடுங்கள்... அடிமையாக வாழ என் மனம் ஒப்பவில்லை என்பது உண்மையே. விடுதலை பெற்று அவருடன் வாழ நினைத்தது உண்மைதான். அதற்குத் தண்டனையாக என்னை வேளத்தில் தள்ளி விடாதீர்கள். பெருவுடையார் முன்பு நான் என்றும் ஆடிக்கொண்டிருக்கும் நிலையிலிருந்து மாற்றி விடாதீர்கள்."

இரத்தினவல்லி 'கோ'வெனக் கதறியவாறு மன்னர் பாதங்களில் வீழ்ந்தாள்.

"சோழச் சக்கரவர்த்திகளே! இரத்தினவல்லியின் மீது நான் கொண்ட காதல் தெய்விகமானது. அவளைப் பிரிய என்னால் முடியாது. நான் சாளுக்கிய நாட்டிற்குச் செல்ல விரும்பவில்லை. இது சத்தியம்" என்று கூறி மன்னரின் காலில் தடாலென வீழ்ந்தான் நரேந்திரன்.

"நரேந்திரா! எழுந்திரு. ஒரு சிறந்த ஓவியக் கலைஞன், மற்றொருவரின் காலில் விழலாமா? மன்னராயினும் வேறு யாராயினும் கலைஞர்கள் அடிபணியக்கூடாது. உம்... உங்களுக்கு ஒரு தண்டனை தந்துதானாக வேண்டும். அதுவும் ஆயுள் தண்டனைதான் சரியானது'' என்று கூறிச் சற்று நிறுத்திச் சுற்று முற்றும் பார்த்தார். காவல் வீரர்களை நோக்கி, "திருமந்திர ஓலை நாயகத்தை அழையுங்கள்..."

"என்றுமே அடிமையாக வாழத் தங்களை விற்றுக் கொண்ட இராசராசேச்வரத்துப் பெருவுடையார் கோயில் அடிமையான இரத்தினவல்லியின் அடிமைச் சீட்டை முறித்து அவளை விடுதலை செய்கிறேன். இறைவனுக்கு அடிமையாகத் தேவரடியாளாகத் திகழ்பவர்கள் திருமணம் புரிந்துகொள்ளக் கூடாது என்ற நிலையை இன்று முதல் மாற்றுகிறேன். இரத்தினவல்லி திருமணம் செய்து கொண்டே இறைவனுக்குத் தொண்டாற்றட்டும். ஒரு நிபந்தனையின் பேரில் ஓவியர் நரேந்திரன் செய்த குற்றத்தை மன்னிக்கிறேன். புதிய தலைநகரில் நான் கட்டவிருக்கும் பெரிய கோயிலின் கருவறையைச் சுற்றி ஓவியக் கூடம் ஒன்று அமைக்கப்போகிறேன். அந்த ஓவியக் கூடத்து ஓவியங்களை வரையச் சம்மதித்து, சோழ நாட்டிலேயே தங்கியிருக்க நரேந்திரன் ஒப்புக்கொண்டால், ஒற்றராக இருந்த குற்றத்தைப் பொறுத்தருளி, இரத்தினவல்லியையும் மணம் புரிவிக்கிறேன். உங்கள் விடுதலைக்கு விலை இதுதான்" என்றார்.

'ஆகா அப்படியே செய்கிறேன்" என்று கூறிய நரேந்திரன் சோழச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் பாதங்களில் மீண்டும் வீழ்ந்தான். இரத்தினவல்லியும் சேர்ந்து வீழ்ந்து எழுந்திருக்கும் போது அவள் நரேந்திரனின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

புன்முறுவலுடன், இராசேந்திர சோழ சக்கரவர்த்தி இரு கரங்களாலும் ஆசி வழங்கினார்.

கடற்கரையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு

தொடரும் பயணங்கள்



-மாலதி நாகரா

போட்டோ: யோகா



ஆசிரியர் குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன், 'காஞ்சி புரத்திற்கு ரயிலில் சென்றால் எப்படி யிருக்கும்?' என்றார். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. 'என்ன பதிலையே காணோம்?' என்றார் ஆசிரியர்.


பதில் சொன்னோம். "தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதாக இருக்கிறது, இந்தப் பயணத் திட்டம். இங்கிருந்து காஞ்சிபுரம் தரைவழி மார்க்கமாக 76 கிலோ மீட்டர் தொலைவு. ரயில் பாதை மார்க்கத்தில் 91 கி.மீ.. காஞ்சிக்கு இப்போது ஒரு நாளைக்குப் பல பேருந்துகள் செல்கின்றன. முன்பு குறைவுதான். அப்போது ரயிலை நம்பித்தான் செல்ல வேண்டும். அதுவுமில்லாமல் பேருந்தில் சென்றால் அதிகபட்சமாக 2 மணி நேரத்தில் சென்று விடலாம். ரயிலில் 3 மணி நேரத்திற்கு மேலாகுமே?" என்றோம்.


"இல்லை. இந்தப் பயணத்தில் பல சுவாரஸ்யங்கள் இருக்கின்றன. பயணங்கள் எப்போதும் பல அனுபவங் களைத் தரும்" என்றார்.

ரயில்வே அட்டவணையைப் பார்த்து நாளும், நேரமும் குறிக்கப் பட்டன. ஆசிரியர் குழுவில் போட்டோ கிராபர் யோகாவும் ஆஜராகிவிட்டார். சென்னை, கடற்கரை ரயில் நிலையத்தில் டிக்கெட் கொடுக்கும் இடத்தில் 'காஞ்சி புரத்திற்கு நான்கு டிக்கெட்' என்று கேட்டார், ஓவியர் சிவகுமார்.

டிக்கெட் கொடுப்பவர் சிவகுமாரை வியப்புடன் பார்த்து, 'எந்த இடத்திற்கு?' என்று வினவினார்.

அழுத்தமாகச் சொன்னார் ஓவியர்: 'காஞ்சிபுரத்திற்கு'.





ஏதோ ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த டிக்கெட்களைத் தேடி எடுத்துக் கொடுத்து விட்டு ஓவியரை ஒரு மாதிரியாகப் பார்த்ததோடு ஒரு புத்தகத்தில் டிக்கெட் எண்ணைக் குறித்துக் கொண்டார். இந்தச் செய்தியை ஓவியர் எம்மிடம் வந்து சொல்லும் போதே ஆசிரியர் சொன்ன சுவாரஸ்யம் ஆரம்பமாகி விட்டதை உணர்ந்தோம்.

'மாலை 5.55 மணிக்குக் காஞ்சிபுரம் செல்லும் வண்டி கிளம்புகிறது. பிளாட்பாரம் நம்பர் 3இல் வண்டி வந்து சேரும்' என்ற அறிவிப்பு வந்தது. 5.40க்கு பிளாட்பாரத்தில் வண்டித் தொடர் வந்து நின்றதும் பிளாட்பாரத்தில் நின்றிருந்த பலர் தங்கள் கைகளில் வைத்திருந்த பை, கைக்குட்டை, பத்திரிகை எது அவசரத்திற்குக் கிடைத்ததோ அதை எடுத்து ஜன்னல் வழியே போட்டுத் தங்கள் இருக்கையைத் தமதாக்கிக் கொண்டனர். அது தற்காலிகப் பயணத்துக்குத்தான்!

காஞ்சிபுரத்திற்கு இவ்வளவு பயணிகளா எனறு நான் வியப்படைந்தேன். "போகப் போகப் பாருங்கள்" என்றார் ஓவியர்.

ஒரு பெட்டியில் நாங்கள் அமர நான்கு இருக்கைகள் கிடைத்தன. தாராளமாக, மிகவும் விச்ராந்தியாகச் செல்லப் போவதாக நினைத்தோம். சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்தில் இருந்து தாம்பரம் வரை செல்லும் மின்சார ரயில் வண்டி (யூனிட்) தொடர்கள் வருவதும் போவதுமாக இருக்க - காஞ்சிபுரம் பாசஞ்சர் கிளம்பும் நேரமான 5.55க்குக் காத்துக் கொண்டிருந்தது.

இந்தப் பக்கம் நால்வர். எதிர்புறத்தில் நால்வர். நான்கு பேர் அமரக்கூடிய இருக்கையில் எதிரும் புதிருமாக இருவர் இருவராக அமர்ந்தோம். குழந்தையைப் போல ஜன்னல் பக்கம் இடம்பிடித்தார் ஓவியர். சிறிதுநேரத்தில் மூன்றாம் நபரும் எம் அருகில் வந்து அமர்ந்து கொண்டார். வண்டி புறப்பட்டது.

'ஆ...சரியான நேரத்தில் வண்டி கிளம்புகிறதே' என்றார். நம்மில் ஒருவர்

'இல்லை, இரண்டு நிமிஷம் தாமதம்' என்றார் ஆசிரியர். 'இல்லை. ஐந்து நிமிடம் லேட்' என்றார் இன்னொருவர். 'இல்லவே இல்லை. இரண்டு நிமிடங்கள் சீக்கிரமாகவே கிளம்பி விட்டது' என்றார் மற்றவர். தத்தமது கடிகாரங்களில் ஒவ்வொரு நேரங்கள்!

அடுத்த ரயில் நிலையம் கோட்டை கோட்டையில் அவ்வளவாகக் கூட்டமில்லை.

அடுத்து, பூங்கா. நான்கு பேர் அமரக்கூடிய இருபுற இருக்கைகளும் பூர்த்தியாயின. எழும்பூர் ரயில் நிலையம் வந்ததும், 'கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி உட்காருங்க ஸார்' என்று சொல்லக்கூட இல்லை; உரிமையுடன் நம் தொடையைத் தட்டி நம் தொடை அசங்கியதும் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள்.


நால்வர் இருக்கையில் ஆறுபேர்.

'சாமான்களுக்கு மட்டும்' என்று குறிப்பிட்டிருந்த இடத்தின் மீது ஏறி மூவர் அமர்ந்தனர். எதிர்புறத்தில் ஒருவர் ஏறி அனந்த சயனம் கொண்டார். கால்களைக் குறுக்கி உடம்பைச் சுருக்கிக் கொள்கிறோம். பாதத் துகள், மலர் தூவுவது போல் பொழிகிறது.

கிண்டி வந்தது. கிண்டியில் இறங்கிய ஒருவரை, 'கிண்டியில் இறங்க உனக்கு வேறு வண்டி கிடைக்கலையா?' என்று யாரோ கூறுவது கேட்டது. இதுவாவது பரவாயில்லை. நாங்கள் முன்பு பயணம் செய்து கொண்டிருந்த காலத்தில் மாம்பலத்தில் இறங்கிக் கொண்டிருந்த எங்களை அழமாட்டாக்குறையாக அந்த வண்டியில் பயணம் செய்பவர் கேட்பார்.

ஆறு பேர் உட்கார்ந்திருந்த இடத்தில் இப்போது ஏழு பேர்.

'வாடா..சண்முகம் உள்ளே இடம் இருக்கு' என்றார் படுத்திருந்த ஆள். சண்முகம் என்றழைக்கப்பட்டவர் உள்ளே வந்ததும் படுத்திருந்தவர் எழுந்திருக்கவில்லை. எதிர்ப்புறம் அமர்ந்திருந்த ஆளின் மேலே அமர்ந்து கொண்டார். அவருக்குத் தொடை வலுவாக இருந்தது!





எதிர்ப்புறம் அமர்ந்திருந்த ஆசிரி ருடன் பேசிக் கொண்டே போகலாம் ன்று நினைத்திருந்தது என்னவோ ண்மை. ஆனால் இருபுற இருக்கை ளுக்கு நடுவிலும் ஆட்கள் நின்று காண்டிருந்ததால் ஆசிரியர் காணாமல் பானார்.

'கமலா..கமலா' என்று ஆரஞ்சுப் பழ விற்பனை. 'கல்கண்டு மாதிரி இருக்கும். சாப்பிட்டுப் பார்த்துத் துட்டைக் கொடு. ந்து பத்து ரூபாய்'. பயணிகளில் ஒருவர் வாங்க - அவர் வாங்கித் திருப்தியடைந்த முகத்தைப் பார்த்த மற்ற இருவரும் வாங்கிக் கொண்டார்கள்.

'மச்சி, பாட்டு பாடு' என்று ஒரு குரல். ரயில் ஓசையில், அந்த மச்சி என்றழைக்கப்பட்டவர் 'ஆலயமணியின் ஓசையை நான் கேட்டேன்' என்று பாட ஆரம்பித்தார்.

சானடோரியத்தில் நம் பககத்தில் அமர்ந்திருந்த அன்பர், 'என்ன ஸார் தாம்பரத்தில் இறங்கப் போறீங்களா?'

'இல்லைங்க. காஞ்சிபுரம் போறோம்' என்றோம்.

நம்மை விநோதமாகப் பார்தது விட்டுப் பககத்தில் இருந்த தம அன்பரிடம் உரத்த குரலில் சொன்னார் 'காஞ்சிபுரம் போறாங்களாம்'.

பெட்டியில் எல்லாரும் நம்மைப் பார்த்து ஒரு மாதிரியாக சிரித்தார்கள்.

தாம்பரம் ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. பிளாட்பாரத்தில் இறங்கிய வர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். பிளாட்பாரம் இல்லாத மறுபுறத்திலும். ஏற்கெனவே வந்த யூனிட் ஜனங்களும் காஞ்சிபுரம் பாசஞ்சரில் ஏறிக்கொள்ள வைத்திருந்த காலை அசைக்க முடியாமல் சிரமப்பட்டோம்.

'கமலா..கமலா' மீண்டும ஆரஞ்சுப் பழ விற்பனை. இப்போது 'டஜன் பத்து ரூபாய்' என்றார் பழ வியாபாரி. விலைவாசி சரிவு!

விளக்குகள் இல்லாத பெருங் களத்தூர் ரயில் நிலையத்தில் கனிசமான அளவு கூட்டம் இறங்க - அடுத்தடுத்து. வண்டலூா ஊரப்பாககம கூடு வாஞ்சேரி, (பொத்தேரியில் வண்டி நிற்கவில்லை) காட்டாங்கொளத்தூரில் சுமாரான கூட்டத்தில் நம் காலை அசைக்க முடிந்தது.

அடுத்த பகுதியில் பாட்டுக் கச்சேரி கோரஸாக முழங்க - சீட்டுக் கச்சேரி அமைதியாக நடக்க, 'க்ளிக்'கினார் நம் யோகா. 'என்ன ஸார் போட்டோ எடுக்கிறீங்க?' என்று கேட்டார்களே தவிர, நாம் பதில் சொல்வதற்காக அவர்கள் காத்திருக்கவில்லை. கச்சேரியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. ஏதாவது பேப்பரில் வரும் என்று பேசிக்கொண்டனர். முறுக்கு வியாபாரிக்கு வண்டியில் வந்த நம் பக்கத்தில் இருந்த அன்பர் சிபாரிசு செய்தார். முறுக்கு நன்றாகவே இருந்தது. சிபாரிசு செய்தவருக்கும் ஒன்று கொடுத்தோம்.

அடுத்து வந்த சிங்கப்பெருமாள் கோயில் ரயில் நிலையத்தில் கூட்டம் கணிசமாகக் குறைய காலை நீட்டி உட்கார முடிந்தது. நமக்கு நேர் எதிரே படுத்திருந்த அன்பர் சுழற்றி விட்ட பம்பரம் போல் சடடென்று எழுந்தார். இறங்கி விரைந்தார்.

செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் வண்டி நிற்கும்போது மணி ஏழு முப்பத் தைந்து.

பெட்டியை விட்டு நாமும் இறங்கி. ஒரு நோட்டம் விட்டோம். ஓட்டமாக.

பெட்டிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக படு ஸ்டைல்களில் பயணிகள்.

பெண்கள் பெட்டியில் காற்றாடக் காய விட்டிருந்த கூந்தலை அழகாகப் பின்னிக் கொண்டார்கள். கலைந்திருந்த புடைவையைக் கொசுவிச் செருகிக் கொண்டார்கள். செங்கல்பட்டில் இறங்கிய ரயில் சிநேகிதர்களுக்குச் சிலர் 'டாட்டா' காட்டினார்கள் சிலர் கண்களாலேயே பேசிக் கொண்டார்கள். ஒரு கப் காபி வாங்கித்தர, கவிஞர் கோபிநாத் ரயில் நிலையச் சிற்றுண்டிச் சாலை நோக்கி விரைந்தார். காபியும் இல்லை. டீயும் இல்லை. ரோஸ் மில்க்! அதைச் சாப்பிட்டதால் நெஞ்சில் ஏற்பட்ட கரகரப்பு நீங்க யோகா பட்டபாடு..! செங்கல்பட்டு சந்திப்பில் காபி, டீ இல்லை!

பெட்டியில் அமர்ந்து கொண்டோம். தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த நம் வண்டித் தொடர் மீண்டும் வடக்கே சென்னையை நோக்கிப் பயணமாகிவிட்ட தடுமாற்றம். இதுவரை மின்சாரத்தில் ஓடிக்கொண்டிருந்த ரயில் என்ஜின் கழற்றப்பட்டு டீசல் என்ஜினுடன் பொருத்தப்பட்டுச் சற்று வளைந்து மேற்கு நோக்கிக் காஞ்சிபுரம் செல்லும் ரயில் பாதையில் ஆடி அசைந்து விரைந்தது.

இதுவரை நாம் பட்ட நெரிசலுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது காஞ்சிபுரம் பயணம். சாமான்கள் வைக்கும் இடத்தில் நாமும் ஏறிக் கொண்டு படுக்கலாமா? என்கிற ஆசை கூட உதித்தது. இப்படியும் நெரிசல் இல்லாத பயணமா? பயமாகக் கூட இருந்தது.


இரவு 7.50க்கு செங்கல்பட்டிலிருந்து கிளம்பிய நம் பயணம் ரெட்டிப் பாளையம், (இங்கே நிற்கவில்லை) பாலூர், பழையசீவரம் (இங்கும் வண்டி நிற்கவில்லை) ரயில் நிலையங்களைக் கடந்து வாலாஜாபாத் வந்தடைந்தபோது மணி 8.40.

மிச்சம் மீதியிருந்த சில பயணி களும் வாலாஜாபாத்தில் இறங்கிவிட உட்கார்ந்து வந்த இருக்கையிலே காலை நீட்டிப் படுக்கிற ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டோம். வெளியே இருபுறமும் வேடிக்கை பார்க்கும் ஆசையைக் கொண்டிருந்த ஓவியர் 'இருட்டை' ரசித்து வந்தார்.

அங்கிருந்து கிளம்பிய வண்டி நத்தப்பேட்டையில் நிற்காமல் காஞ்சி புரத்தில் நம்மைக் கீழே இறக்கியபோது அட்டவணையின் நேரப்படி சரியாக இரவு 8.40 மணி.

சுற்றும் முற்றும் காஞ்சிபுரம் ரயில் நிலையத்தை நோட்டமிட்டார் ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன். உதட்டைப் பிதுக்கினார். **"என்ன ஸார்?"**





"எதுவுமே மாறலை இந்த ஸ்டேஷன். அழுக்கு ரயில் பெட்டிகள், 1946இல் இந்த ஸ்டேஷனில் நானும் ஓவியர் ஸுபாவும் வந்து இறங்கியிருக்கிறோம். அப்போது எப்படி இருந்ததோ. அதே மாதிரிதான் இருக்கு. ஒன்றே ஒன்று; காஞ்சிபுரம் கோயில் அமைப்பில் ஸ்டேஷன் நுழை வாயிலில் புதிதாக ஒரு மண்டபம் கட்டியிருக்கிறார்கள்" என்றார். பிளாட்பார இருட்டில் வேலி ஓரமாக சௌகரியமாக வரிசையாகப் படித்தவர்கள் நின்று தங்கள், 'உபாதை'யைத் தீர்த்துக் கொண்டனர் வீடு செல்லும் வரை 'அதைத் தாங்க முடியாதவர்கள்.

ஆசிரியர் அமைதியாக நடந்தார். யோசிக்கிறோம் 'பயணத்தில் பல சுவாரஸ்யங்கள் இருக்கின்றன. பயணங்கள் எப்போதும் பல அனுபவங்களைத் தரும்' என்று ஆசிரியர் நம் அலுவலகத்தில் சொன்னது உண்மை.

வண்டியில் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் நமக்கும் அதில் இடமுண்டு என்று தங்களையும் கூட்டத்துடன் ஐக்கியமாக்கிக் கொள்ளும் மக்களைப் பார்க்கும் போது, இவ்வுலகில் எவ்வளவு பிரச்னைகள் இருந்தாலும் போராடி வந்த பிரச்னைகளை வென்று விட்டால், நாம் அடைய வேண்டிய இடத்தைச் சரியாக அடைந்து விடலாம் என்கிற அனுபவம் நமக்குத் தெளிவாகப் புரிந்தது.

இரவு காஞ்சியில் தங்கிவிட்டுக் காலையில் திரும்புவதாகத் திட்டம். ஊருக்கும் ரயில் நிலையத்திற்கும் மூன்று கி.மீ. தொலைவு. நல்ல விடுதியை நோக்கி நம்மை அழைத்துச் சென்றார் போட்டோகிராபர் யோகா.

அடுத்த பயணத் தொடர் அனுபவத்திற்கான ஆலோசனையை ஆசிரியரிடம் கேட்டோம். கலைமாமணி விக்கிரமன் அவர்களின் முகம் பிரகாசமானது.


காஞ்சிபுரம் செல்ல, பயணிகள் ஏன் ரயிலை நாடுவதில்லை என்ற ஆராய்ச்சியில் இறங்கினோம். தலைநகர் காஞ்சிபுரம்...! வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம்! அண்ணா பிறந்த ஊர்.

ஹூம் - என்ன இருந்தால் என்ன? காஞ்சி பிரகாசமடைய எவ்வளவு காலமாகுமோ?

கவிதை வந்ததால் தனிமை போனதா?
தனிமை போனதால் கவிதை வந்ததா?



சூரியன் உதித்ததால் தாமரை மலர்ந்ததா?
தாமரை மலர்ந்ததால் சூரியன் உதித்ததா?
சந்திரன் வந்ததால் பூமி குளிர்ந்ததா?
பூமி குளிர்ந்ததால் சந்திரன் எழுந்ததா?
மழைத்துளிகள் கூடியே கருமேகம் ஆனதா?
கருமேகம் சிந்தியதால் மழைத்துளிகள் விழுந்ததா?
மழை நின்றதும் வானவில் தோன்றியதா?
வானவில் தோன்றத்தான் மழையும் நின்றதா?
குயில் பாடியதால் வசந்தம் வந்ததா?
வசந்தம் வந்ததால் குயில் பாடியதா?
கனிகள் பழுத்ததால் கிளியும் கொத்தியதா?
கிளிகள் வந்திடத்தான் கனிகள் பழுத்தனவா?
கருவண்டு பருகவே மலர் தேனைச் சிந்தியதா?
தேனை உண்ணவே வண்டு மலரை நாடி வருகுதா?
வெண்முகில் கூட்டம் கண்டு மயில் தோகை விரிக்குதா?
மயில் தோகை விரிக்கவே முகில் கூட்டம் கூடுதா?
இமைகள் மூடவே கனவு தோன்றுதா?
கனவு தோன்றத்தான் இமைகள் மூடுதா?
மனம் அலைவதால் நினைவு மோதுதா?
நினைவு மோதுவதால் மனம் அலையுதா?
கண்ணன் துளபம் என்பதால் சிறந்து மணக்குதா?
சிறப்பாய் மணப்பதால் அது துளபமானதா?
செவி கேட்டு மகிழத்தான் அருள் வேதம் பிறந்ததா?
வேதம் ஒலிப்பதால் செவி கேட்டு மகிழுதா?
மந்திர ஜபத்தைத்தான் நாவும் ஓதுதா?
நாவு ஓதுவதால் அது மந்திரம் ஆனதா?
தெய்வம் என்பதால் கரம் கூப்பித் தொழுததா?
கரம் கூப்பித் தொழுவதால் அது தெய்வமானதா?
தெய்வக் கோவிலானதால் கால்கள் வலம் வருகுதா?
கால்கள் வலம் வருவதால் அது கோவிலானதா?
பக்தி முதிர்ந்ததால் புத்தி பழுத்ததா?
புத்தி பழுத்ததால் அதில் பக்தி வந்ததா?



தேவகி முத்தையா

குட்டிக் கதைகள் - தத்துவச்செறிவுடன் கூடியவை

கன்ஃபூஷியஸ் என்னும் மகான்

கன்ஃபூஷியஸ் என்னும் மகானிடம் ஒருவர் கேட்டார் "ஐயா, உங்கள் மகத்துவம் எனக்கு விளங்கவில்லை. யென் உங்களை விட நேர்வழியில் செல்பவர் என்கிறீர்களா ? விஷயங்களை விளக்குவதில் துலாள் உங்களை விட மேம்பட்டவர் என்கிறீர்களா ? சுங் உங்களை விடத் தைரியசாலி என்கிறீர்களா ? துலாள் - சுங் உங்களை விட கண்ணியமானவர் என்கிறீர்களா ?

இத்தனையும் சரி என்றால் இந்த நால்வரும் ஏன் உங்கள் சீடர்களாக இருக்கிறார்கள் ?

கன்ஃபூஷியஸ் பதிலளித்தார் : யென் நேர்வழியில் செல்பவர் தான். ஆனால் பிறருடன் இணங்கிப்போக அவருக்குத் தெரியாது. துலாள் விஷயங்களை விளக்குவதில் வல்லவர். ஆனால் உண்டு அல்லது இல்லை என்று எளிய பதில் தரத் தெரியாது அவருக்கு. சுங் தைரியசாலி தான். ஆனால் முன் யோசனை போதாது அவருக்கு. துலாள் - சுங் கண்ணியமானவர் தான். ஆனால் அவருக்கு அடக்க உணர்வு காணாது. எனவே தான் இந்த நாலு பேரும் என் சீடர்களாகத் தொடர்கிறார்கள்.


டயோஜெனஸ்

டயோஜெனஸ் என்ற தத்துவஞானி ரொட்டியும் பருப்பும் உண்டு வாழ்ந்து வந்தார்.

அரிஸ்டிபஸ் என்ற மற்றொரு தத்துவ மேதை அவரைக் காண வந்தார். இவர் அந்த ஊர் ராஜாவிடம் இச்சகம் பேசி சௌகரியமாய் வாழ்ந்து வந்தார்.

அரிஸ்டிபஸ் சொன்னார் 'ராஜாவிடம் விசுவாசியாக நடந்து கொண்டால் ரொட்டியும் பருப்பும் மட்டும் சாப்பிட்டு வாழ வேண்டாம்.'

டயோஜெனஸ் சொன்னார் : 'ரொட்டியும் பருப்பும் மட்டும் சாப்பிட்டு வாழக் கற்றுக் கொண்டவன் ராஜாவை அண்டிப் பிழைக்கத் தேவையில்லை'



பாவமும் பரிகாரமும்

பால் ஷெம் என்ற யூத ஞானி விசித்திரமான வகையில் கடவுளிடம் வேண்டுதல் புரிவார்.

"கடவுளே! எனக்கு நீ தேவை என்பது போல, உனக்கு நான் தேவை. நீ இல்லை என்று சொன்னால் நான் யாரிடம் பிரார்த்திப்பேன்? நான் இல்லை என்று சொன்னால் யார் உன்னிடம் பிரார்த்திப்பார்கள் ?"

''கடவுளே! நான் பாவமே செய்யாவிட்டால் உனக்கு என்னை மன்னிக்கும் வாய்ப்பு கிட்டாமல் போகும். எனவே நான் மகிழ்ச்சியுடன் பாவச் செயல்களைப் புரிவேன்."

ஐராவதம்

கேள்வி

சிஷ்யன் கேட்டான்

இந்த மலைகள், நதிகள்

பூமி, விண்மீன்கள் -

இவை எங்கிருந்து வருகின்றன?

குரு சொன்னார் :

உன் கேள்வி எங்கிருந்து வருகிறது ?

உன் உள்ளேயே தேடிப்பார்.



நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டவர்களின் நோயைக் குணப் படுத்தும் பிரபல டாக்டர் வி. மோகன் அவர்கள் மருத்துவத் துறையில் பல விருதுகளும், பட்டங்களும் பெற்றவர். அண்மை யில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் அவருக்கு மதிப்புமிகு டாக்டர் ஆஃப் சயின்ஸ் (D.Sc) விருதை வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருது பெற்றவர்கள் மிகக் குறைவானவர்களே. முன்னூறுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை களும் 25க்கு மேற்பட்ட பாடநூல் கட்டுரைகளும் எழுதியவர் டாக்டர் வி. மோகன் என்பது குறிப்பிடத் தக்கது.

அடிப்படை வேற்றுமை

உலாய்ஸ் என்ற சூஃபியிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது.

ஞானியே, கடவுளின் அருளால் உமக்குக் கிட்டியது என்ன ?

அவர் சொன்னார் :

''நான் தினமும் காலையில் எழுந்திருக்கும் போது மாலை வரை உயிருடன் இருப்பேன் என்ற நிச்சயமில்லாத உணர்வுடன் நாளைத் தொடங்குகிறேன்.'

கேள்வி கேட்டவர் சொன்னார்:

'இது எல்லாரும் அறிந்தது தானே ?'

உலாய்ஸ் சொன்னார் :

''இதை அனைவரும் அறிவர். ஆனால் இதை யாரும் உணர்வது தான் இல்லை.''

''மது என்று சொன்ன மாத்திரத்தில் யாரும் போதை அடைவதில்லை.''

ஹோஃபெட்ஸ் செயிம்

சென்ற நூற்றாண்டில் போலந்து தேசத்தில் வாழ்ந்து வந்த ஹோஃபெட்ஸ் செயிம் என்கிற யூதகுருவைச் சந்திக்க அமெரிக்காவில் இருந்து யாத்ரிகர் ஒருவர் வந்தார்.

யூதகுருவின் வீடு ஒரு சிறிய அறை. அதில் ஏராளமான நூல்கள் இருந்தன. உட்கார ஒரு மேடை, எழுத ஒரு மேஜை அவ்வளவு தான் சாமான்கள் இருந்தன.

''குருவே ! உங்கள் தட்டு முட்டு சாமான்கள் எங்கே ? '' என்றார் யாத்ரிகர்.

''உங்களுடையது எங்கே ?'' என்றார் குரு.

''என்னுடையதா ?'' நான் இங்கு வழிப் போக்கன் அல்லவா ? நான் இவ்வழியாகப் பயணம் செய்கிறவன் ''

''நானும் இந்த உலகில் ஒரு பயணியே''.

உறக்கமும் அவதூறும்

ஷிராஸ் நகரைச் சேர்ந்த சா அதி தன்னைப் பற்றியே இந்தக் கதையைக் கூறுவார்.

நான் பயபக்தியுள்ள சிறுவனாக இருந்தேன். பக்தியிலும் பிரார்த்தனைகளிலும் அவாக் கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு நான் என் தந்தையுடன் பிரார்த்தனைக் கூடத்தில் விழித்த படி இருந்தேன்.

கூடத்தில் இருந்த மற்ற அனைவரும் தூங்கி வழிந்தனர். நான் என் தந்தையிடம் சொன்னேன். இங்கு உறங்குபவர்கள் அத்தனை பேரும் கண்களைத் திறக்கவுமில்லை. தலைகளை உயர்த்தவுமில்லை. அவர்கள் பிரார்த்தனை செய்யவேயில்லை. அவர்கள் இறந்தவர்கள் போலத் தோன்றுகிறார்கள்.

என் தந்தை சொன்னார் 'அன்பு மகளே, இப்படி பிறரை நிந்திப்பதை விட நீயும் அவர்களைப் போலவே தூங்கி வழிவது மேலானதா யிருக்கும்'.

ஆன்மிக இருதய வலி

தாமஸ் மாமாவுக்கு பலவீனமான இருதயம். அவருக்குப் பெரியப்பா ஒருவர் ஒரு கோடி டாலர் சொத்து எழுதிவைத்து விட்டு இறந்து போனார். குடும்பத்தினர் தாமஸ் மாமாவிடம் இதைச் சொல்லத் தயங்கினார்கள். அவர் இருதயம் நின்று விடும் என்று அச்சம் கொண்டார்கள். மாதா கோயில் பாதிரியாரை அணுகினார்கள். தான் அவரிடம் நைச்சியமாக சமாசாரத்தைத் தெரிவிப்பதாக அவர் ஒப்புக்கொண்டார்.

'தாமஸ்' பாதிரியார் மர்பி மெல்லச் சொன்னார். 'கடவுள் தன் கிருபையால் உனக்கு ஒரு கோடி டாலர் தருவதாக வைத்துக் கொள். நீ அந்தப் பணத்தை என்ன செய்வாய்?

'நான் அதில் பாதிப் பணத்தை மாதா கோயிலுக்கு அளிப்பேன், பாதிரியாரே'

பாதிரியார் மர்பியின் இருதயத் துடிப்பு நின்று போனது.

அச்சிட்டோர்: சாய் ஸ்ரீராம் அச்சகம், சென்னை – 26. வெளியிட்டவர்: ஸ்ரீராம் டிரஸ்ட். சார்பில் ஏ.வி.எஸ்.ராஜா. முகவரி: ஏ–7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் (கிழக்கு) சென்னை – 600 102. தொலைபேசி எண்: 628 68 69, 628 78 79. தனி இதழ் ரூ. 10.00 ஆண்டுச் சந்தா ரூ. 120.00

ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன்